Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් பெப்.17-23,2002

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 447




காதலர் தின ஸ்பெஷல்

## ஜனாதிபதியின் எச்சரிக்கை பிரதமரின் தடுமாற்றம்

மீண்டும் நதியா

காதல் போயினும் காதல்

## இரண்டு சர்வாதிகாரிகளின் முடிவு!

# ஆன்மீகம்



## நல்லன செய்க

"அரிது அரிது மானிடராதல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறந்தல் அரிது." ஔவைப் பிராட்டி சொல்லி வைத்தது. மணிவாசகர் புல்லாகி, பூடாகி எனத் தொடங்கி மனிதராய் தேவராய் என பிறவியை வகுத்தவர் மனிதன் ஒருவனாலேயே தன்பகுத்தறிவு கொண்டு நல்லன செய்ய முடியும் என்கிறார்.

மனிதனில், வியாதி, வறுமை, அறிவீனம், ஊனம் சோம்பல், கோபம், பொறாமை, அவா, என்னுமிவற்றில் ஏதாவது ஒருகுறை இருக்கவே செய்யும். இதற்கெல்லாம் காரணம் அவரவர் செய்து கொண்ட கர்மவினையே.

எமது நற்செயல்களை இறைவன் ஏற்றுக்கொள்வார். மனித வாழ்வில் செய்யும் தவறுகளை வாழ்நாளிலேயே உணர்ந்து திருந்தியவர்களுக்கு மாத்திரம் சுவர்க்கபாதை தானாக வழிதிறக்கும். இல்லையேல் நரக வாழ்வையே அனுபவிப்போம். உடலில் தோன்றும் நோய்கட்கு வைத்தியரைநாடி மருந்துண்டு வாழ்கின்றோமோ அவ்வாறு, நாம் நல்லநிலையில் இருக்கும் போது நல்ல வற்றை நினைத்து நல்லன செய்து, நமது பிழைகளையெல்லாம் இறைவனிடம் ஒப்புவித்துப் பிறவிப்பிணி நீங்கி வாழ்வோமாக.

செல்வி.பா.வேலுப்பிள்ளை-வெள்ளவத்தை.

## அல்லாஹ்வுக்கு கொடுக்கும் அழகிய கடன்

வாணிபம் என்பது ஒரு சமுதாயச் சேவை. இதில் நேர்மை இருக்க வேண்டும். நேர்மையான வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் சம்பாத்தியத்தில் ஏழை எளியோருக்கு தான தர்மம் செய்ய வேண்டும்.

தன் வாழ்நாளில் தான தர்மம் செய்யாது பெரும் பொருளை இவ்வுலகில் வைத்துவிட்டு மரணிப்பவனை அல்லாஹ் விரும்ப வில்லை. அவன் சுவர்க்கம் புகுவதும் அரிது.

சன்மார்க்க நெறிதவறாது நேர்மையுடன் வாழ்பவனுக்கு தேவையானவற்றை தரும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக் கொள் கிறான்.

வறியவர்களுக்கு வாரி வழங்குபவர்கள் அல்லாஹ்வுக்கு கொடுக்கும் அழகிய கடனாகவே அதனைக் கருத வேண்டும்.

கஷ்டத்திலிருப்போருக்காக அழகான முறையில் அல்லாஹ்வுக்குக் கடன் கொடுப்போர் யார்? அதை அப்படிக் கொடுப்பவருக்குப் பன்மடங்கு பெருகும்படியாக அவன் செய்வான்.

அல்குர் ஆன் (2:245)

தான தருமங்கள் செய்யும் ஒருவன் அல்லாஹ்வை நெருங்கியிருப்பவன் சுவர்க்கத்தை நெருங்கியிருப்பவன் மனிதர்களை நெருங்கியிருப்பவன் நரகத்துக்கு மட்டும் அவன் தூரமாக இருப்பான்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## யோசேப்பின் பாடுகளும் வெற்றியும்

யோசேப்பு பல பாடுகளையும் துன்பங்களையும் சோதனைகளையும் அனுபவித்தார். இறுதியில் எகிப்திலே உயர் பதவியை அடைந்தார்.

சிறுவனாக இருக்கும் போதே தாயை இழந்தவர். இவரது தந்தை இவர்பால் காட்டிய மிகுந்த அன்பு இவருடைய சகோதரர்களிடையே பொறாமையையும், கசப்பையும் உண்டாக்கியது. ஆகவே இவரைக் கொல்ல முயற்சித்தனர். இறுதியில் அடிமையாக விற்றனர். இவரை வாங்கிய மீதியானியர் எகிப்து அரச அதிகாரியிடம் விற்றனர். தலைவரான போர்த்திப்பார் இவரிடம் பிரியம் கொண்டு தன் காரியங்களையெல்லாம் இவரிடம் ஒப்படைத்தார். தன் துன்பமெல்லாம் இதோடு முடிந்து விட்டதென யோசேப்பு நம்பினான். ஆனால் இன்னும் பல துன்பங்கள் காத திருந்தன.

போர்த்திப்பாரின் மனைவி இவர் பால் மோகம் கொண்டு தவறாக நடக்க அழைத்த போது அதற்கு இணங்க மறுத்து விட்டார். அதன் விளைவாகச் சிறையில் வாட வேண்டியிருந்தது.


கடின உழைப்பும், அடிமை வாழ்வும், சிறைவாசமும் அடங்கிய நீண்டகாலத்திற குப் பின்புதான்யோசேப்பு விடுதலை அடைந்தார். கனவில்கூட கற்பனை செய்ய முடியாத அளவில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதிகாரம் இவரை அகந்தை கொள்ளச்செய்யவில்லை. இறை ஆவி நிரம்பியவராக, ஞானமுள்ளவராக, தாழ் மையுள்ளவராக விளங்கினார். தன் எதிரிகளை நசுக்கவில்லை. அன்பே நிறைந்து விளங்கினார். தன்னை அடிமையாக விற்ற தன் சகோதரரை வெறுக்கவில்லை. இழி நிலையிலிருந்த எபிரேயர்களைத் தன் சகோதரர்கள் எனக் கூறிக் கொள்ள வெட் கப்படவில்லை.

எனவே அன்பானவர்களே!

கர்த்தர் மேல் உங்கள் பாரத்தை வைத்துவிடுங்கள் அவர் உங்களை ஆதரிப்பார். நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார். சங் 55:22

எஸ்தர் லோஜினி இன்பரட்ணம்-வவுனியா.

## கவிதைப் போட்டி இல.447



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.02.2002

கவிதைப் போட்டி இல.447
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.444

### பரிசுக்குரிய கவிதை

### குளிர்விக்குமா?

புரிந்துணர்வு இல்லாமல்
புறக்குடத்து நீராக
போய் ஒழிந்த பேச்சுவார்த்தை
அகக் குடத்து நீராக- எங்கள்
அகமெல்லாம் குளிர்விக்குமா?


வி. ராகுலன்- ஆரையம்பதி 02.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### என்ன செய்வேன்.

சுட்டெரிக்கும் வெயிலில் !
சுடர்விடும் பூங்கொடியே!
குட்டைகள் வற்றியதால் !
குடத்தினில் நீர் நிரப்பி!
சுமைதாங்கியாக இங்கு
செப்பிடும் இக்காட்சி !
என்னை சிந்திக்க வைக்குமா?

ஹப்புத்தளையூர் மனோ கோபாலன்



### வெறுமை!

எங்களை
சுரண்டியதால் தான்
வெறுமையானோம்- அது
தொடர்வதால் தான்
வரண்டு போனோம்!

இரா. இராமகிருஸ்ணன்.

### ஐயம்!

வாழ்க்கை
வழுக்கியதைப் போல
இந்த குடமும்
வழுக்கி விழுந்து
விடுமோ......?

எஸ். பிரமிளா-
ஹாலி-எல.

### நாளைய வரட்சிக்காக....

இளையவள் நான்
கனவுகளை சுமந்து சுமந்து....,
கனத்துப் போவதை விட
நாளைய நினைவுகளை எண்ணி
நெகிழ்ந்து விடுவது மேல்.
ஆதலால்- தா (நா)ன்
என்- இரு (ஈர) விழி நீர்மறந்து
மடிமீது குடம் தாங்கி
குடிநீர் கொண்டு வர
தொலை தூரம் செல்ல துணிந்து
விட்டேன்.

மூக்கன் புனிதன்- பசறை.

### வாழ்வின் பாடல்

பொம்மை தூக்கும் கண்ணே!
உனக்கு குடம் தூக்க
சொல்லித்தந்தது யார்?
சிரமங்களுக்கு பழகிப் போன
சிறார்களில் ஒருவரானதாலோ!

யு. எல். எம். ரிஸ்வான்- ரிதீகம.

### தாகம் எதுவோ!

ஊரற்று உறவற்று
உணவுதனையற்று அன்று
விழிகளில் நீருடன் - அங்கு
வருகின்ற இப்பிஞ்சின் தணியாத
தாகம் தண்ணீரா? அல்ல
தார்மீக சுதந்திரமா?

கே.சிறிகாந்த்-
யாழ்ப்பாணம்.

### தாகத்தின் கொடுமை!

சிந்திய கண்ணீருக்கு
விடை தரப்போகும்
தருணம் இறைவா!
ஏன் தண்ணீருக்குத்
தடை!

துரைராஜா பரிமளாதேவி-
கலஹா.

### அத்திவாரம்.

சின்னவளே!
சுமப்பதற்கு பழகிக்கொள்.
இது தான் அத்திவாரம்.
இவ்வுலகில் வாழ்வதற்கு
இன்னும் பலவுண்டு
இவ்வுலகில் நீ சுமப்பதற்கு.

செல்வி. என். தனுஷா-
பதுளை.

### இனியும் தணியுமா....?

வாழ்க்கையில் தடம்
இழந்த கண்ணே- நீ
வரிசையில் இடம்
பிடிக்கிறாயா.......?
குடியே வரண்டு
விட்டதடி கண்ணே- இனியும்
குடி நீர் பிச்சை
கேட்கிறாயா.....?

லைலா அக்ஷிய அக்ரம்- குருணாகல்.

### இறக்கி விடுங்கள்

வளரப் போகும்
இளம் சமுதாயம்
கருகிப் போகுமுன்
இறக்கி விடுங்கள் ....!
இளைஞர் எம் சுமையை......!

கை. ரமேஸ்-
பொத்துவில் நகர்.

### வழியில்லை.

குடத்தில் எரியும் விளக்கு
போல
நீ படும் கஷ்டம்
வெளித்தெரிய
வழியில்லை....!

சுகுமாரன் ரஜனி- தலவாக்கலை.



## வாசக[ர்] சாலை

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

தித்திக்கும் இனிய படைப்புகளை அழகு தமிழில் அள்ளி வழங்கும் இனிய முரசே, உனது படைப்புகள் யாவும் பயனுள்ளவை. சிறப்பானவை. 'வினையால் ஒரு வெள்ளைப்புறா' மனதை நெகிழ வைத்த அருமையான சிறுகதை. மேலும், 'நில் கவனி முன்னேறு' தந்த இலட்சியம் உள்ளவரா நீங்கள்? சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருந்தது. 'பிறந்த வீடா? புகுந்த வீடா?' இல்லத்தரசியருக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தது.

மங்களா வாமதேவன்-தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

வாரம் ஒரு முறை வரும் இனிய முரசே!

உனது படைப்புக்கள் அனைத்து அம்சங்களும் சூப்பர் உனது சேவை தொடர எமது வாழ்த்துக்கள். சிறுகதை, 'அரசியல் தொடர்', 'அதிரடி அய்யாத்துரை', 'சிந்தியா' கேள்விபதில்', 'ஸ்போர்ட்ஸ்' அனைத்தும் நன்றாக அமைந்திருக்கிறது உனது பணி மேலும் சிறந்து தமிழ் பேசும் நெஞ்சங்களை மகிழ்விக்கட்டும்.

மை.மைதிலி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அன்புடன் முரசு ஆசிரியர் அவர்களுக்கு!

கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்து இடம்பெற்று வரும் சாதாரணனின் கடிதம் தமிழ் வாசகர்களுக்கு ஒரு மாறுபட்ட அனுபவமாக இருக்கிறது. எமது அரசியல் தலைவர்களின் முகமூடிகளை எளிமையான நடையில் அழகான தொனியில் கிழித்தெறியும் சாதாரணனுக்கு எங்கள் பாராட்டுக்கள்.

எஸ்.யோகேஸ்வரன்- வவுணதீவு.

அன்பின் முரசே!

தினமுரசு வாசகனாகிய நான் கடந்த நான்கு வருடங்களாக தினமுரசு வாரமலரை சவூதி அரேபியாவில் இருந்து பெற்று வருகின்றேன். தினமுரசு வாரமலரின் வளர்ச்சியையிட்டு இங்குள்ள இலங்கையர்கள் மட்டுமின்றி இந்திய தமிழ் நண்பர்கள்கூட தினமுரசு வாரமலரின் ஒவ்வொரு அங்கங்களையும் ரசிக்கின்றனர். இந்திய தமிழ் நாட்டு பத்திரிகைகளை குறை கூறி நம் தினமுரசு வாரமலரை பாராட்டுவது தினமுரசு மலரின் வளர்ச்சியே காரணமாகும்.

குறிப்பிட்டாக வேண்டியது நம் நாட்டு சிங்கள நண்பர்கள்கூட தினமுரசு வாரமலரை சிங்களத்தில் மொழியாக்கம் செய்து தர வேண்டுமென கூறுவது உலக அதிசயங்களில் ஒன்று.

ஆனால் எங்களுக்குள் உள்ள குறை சுமார் ஒரு மாத காலமாக தினமுரசு வாரமலரின் சினிமாப் பகுதியடங்கிய செய்தித்தாள் தொடராக கிடைக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். நம் முரசின் வளர்ச்சியை பாராட்டுவதோடு... நம் பத்திரிகையின் சகல செய்தித் தாள்களையும் தொடராக அனுப்பு மாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாரிஸ் அஹமட், ஜித்தா.

சில நேரங்களில் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் தினமுரசை அனுமதிக்கும்போது சினிமா பகுதி தணிக்கை செய்யப்படுவதாக அறியக்கிடைக்கின்றது. அந்தநாடுகளில் கலாசாரம் சார்ந்த இறுக்கமான ஊடகக்கொள்கை காரணமாகவே இது இடம்பெறுகின்றது. சினிமா பகுதி அகற்றப்படும்போது அதனோடு இணைந்த தேன் கிண்ணம் போன்ற பக்கங்களும் கிடைக்காமல் போகின்றது இது அந்தநாடுகளின் சட்டத்தோடு சம்பந்தப்பட்ட விடயம். இதே போன்ற புகார்களை தொடர்ச்சியாக எமக்கு அனுப்பும் சகல மத்திய கிழக்கு வாசகர்களுக்கும் எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர்-

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள்.

'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம்.

புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாண மீனவர்களின் போராட்டம் முடிவின்றித் தொடர்கின்றது. கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலமாக குடாநாட்டு மீனவர்களாகிய நாம் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் யாவரும் அறிந்த விடயம். காலகாலமாக எம்மை பகடைக்காய்களாக பயன்படுத்தி அரசியல் லாபம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவே தவிர எமது பிரச்சினைகளைத் தீர்த்து விடிவைத் தேடித்தரும் உண்மையான நோக்கத்துடன் நேர்மையாக செயலாற்றியவர்கள் எத்தனைபேர் என்பதை நாம் நன்கறிவோம்.

தேர்தலின்போது எமக்கு ஏராளமான வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்பட்டன. நாம் எதிர்நோக்கும் இடர்பாடுகளை தீர்த்து வைப்பதாக பலரும் உறுதியளித்தார்கள். ஆனால் இன்று எம்மை சந்திக்க வரும் அரசியல் பிரதிநிதிகள் சகலரும் எமது போராட்டத்தை கைவிட வேண்டும் என்று கோருவதற்காக அல்லது பின் தள்ளி வைக்கும்படி கேட்பதற்காகவோ தான் எம்மிடம் வருகிறார்கள். இதை நாம் இவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. இதற்காகவேண்டி நாம் இவர்களை தெரிவு செய்யவுமில்லை. எமக்குத் தீர்வு வேண்டும் எங்களது ஜீவனோபாயத்தை சுதந்திரமாகக் கொண்டு நடத்த வழிவகைகள் செய்யப்படவேண்டும். அரசியல் தலைவர்களின் ஆறுதல் வார்த்தைகளை நம்பி கலைந்து செல்லக்கூடிய நிலையில் யாழ். மீனவர்கள் இல்லை.

மீன்பிடி எல்லையை விஸ்தரிப்பதற்கு முடியாது என்று கூறும் அரசாங்கம் அதற்கு பாதுகாப்பை காரணம் காட்டுகின்றது. இவ்விடயத்தை நாம் முற்றாக நிராகரிக்கவில்லை. அரசாங்கம் எமது பிரச்சினையின் தன்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்கும் அதே நேரம் இதுவிடயத்தில் புலிகளும் தமது அக்கறையை வெளிப்படுத்த வேண்டும். நாம் மீன் பிடிக்க அனுமதி கோரும் கடல் எல்லைக்குள் பாதுகாப்புத் தரப்பினர் நடமாடினால் அந்த இடங்களில் வைத்து அவர்கள் மீது எந்தத்தாக்குதலையும் நடத்தமாட்டோம் என்று புலிகள் உத்தரவாதமளிப்பார்களாயின் பாதுகாப்புத் தரப்பினரால் வேறு நியாயங்களைக் கூறமுடியாது. மீன் பிடிக்க அனுமதித்துதான் ஆகவேண்டும்.

எனவே குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட கடல் எல்லைக்குள் எந்த வித தாக்குதலையும் மேற்கொள்ள மாட்டோம் என புலிகள் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் எமது பிரச்சனை தீர அது பேருதவியாக இருக்கும்.

அரசியல் தலைவர்கள் இம்முறையும் அறிக்கைவிட்டு ஏமாற்ற முயற்சிக்கமாட்டார்கள் என்று நம்பும் அதேவேளை, இந்தப் பிரச்சினை தீர்ந்து எமது அன்றாட வாழ்வை வளம்பெறச் செய்ய புலிகளும் தம்மாலானதை செய்வார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

யாழ். சுதர்சன்,
சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# கடல் ரோந்துகளை நிறுத்துதல், ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் உள்ளிட்ட புலிகளின் சில நிபந்தனைகளை ஏற்க அரசாங்கம் தயக்கம்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பான இறுதி உடன்படிக்கை இன்னும் பூர்த்தியாக வில்லை என்றும் சில விடயங்கள் குறித்து மேலும் ஆராயப்பட வேண்டி இருப்பதாகவும் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருக்கும் அதேவேளை, பாதுகாப்பு தளர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் மேலும் விட்டுக் கொடுப்புக்களை செய்வது ஆபத்தாக அமையும் என்று பாதுகாப்பு அதிகாரிகளினால் அரசாங்கத் தலைவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்பாடு தெரிவிக்க வேண்டுமாயின் அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகளாக புலிகள் குறிப்பிடும் சில விடயங்கள் நேரடியாக யுத்தத்தோடும் அதற்கான தயாரிப்புக்களோடும் சம்பந்தப்பட்டவை என்பதால் இது குறித்த முடிவுகளை நிதானமாகவே மேற்கொள்ள வேண்டும் என சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

கடல் ரோந்துகளை நிறுத்துதல் புலிகளை ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் உள்ளிட்ட புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் சில நிபந்தனைகளை அரசாங்கத் தரப்பு ஏற்பது தொடர்பிலேயே தற்போதைய சிக்கல் நிலை தொடர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ■

## அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் மட்டக்களப்புக்கு திடீர் விஜயம்

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சின் தென் கிழக்காசியப் பிரிவுத் தலைவர் திருமதி மில்லாவொஸ் மற்றும் கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதரக பிரதி அரசியல் செயலாளர் அலிசென் ஹெம் ஆகியோர் அடங்கிய ராஜதந்திரிகள் குழுவொன்று செவ்வாய் அன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

தற்போதைய போர் நிறுத்தக் காலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை குறித்த தகவல்களை நேரில் கண்டறிவதே இந்த விஜயத்தின் நோக்கம் என தூதரக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதன்போது பிரதேசத்தின் மதத் தலைவர்கள் அரசியல் வாதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரை பிரிட்டிஷ் அதிகாரிகள் சந்தித்து உரையாடினர். இதே வேளை அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் தலைமையிலான குழுவொன்றும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

விசேட விமானம் மூலம் மட்டக்களப்புக்குச் சென்ற இவர்கள் கல்லடி, காயத்திரி ஆச்சிரமம், திருச்செந்தூர் முருகன் கோயில் ஆகியவற்றுக்கு விஜயம் செய்ததுடன் சமூகத் தலைவர்களுடனும் உரையாடினர். ■

## வேன் விபத்து

அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் நோக்கிச் சென்ற வேன் ஒன்று திருக்கோவிலில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி வந்த பயணிகள் வேன் ஒன்றுடன் சின்ன முகத் துவாரத் திருப்பத்தில மோதியதில் 9 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ■

## கடத்தல்

மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த 29 வயது நபர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். விஜயநாதன் வித்தியாதரன் என்ற இவர் அண்மையில் ஆட்டோவில் வந்த இளைஞர் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டார்.

இவர் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் புலிகளின் கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பியவர். கடந்தகாலங்களில் இவரது குடும்ப உறுப்பினர் 5 பேர் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் புலிகளால் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக இவரது பெற்றோர் பொலிஸாரிடமும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறைப்பாடு செய்துள்ளனர். ■

## தமிழ்க் கூட்டமைப்புக்குள் இருந்து பல சுயேட்சைக் குழுக்கள்

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அம்பாறை மாவட்ட தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே இருந்து வந்த கருத்து முரண்பாடுகள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதை கையோடு சந்திக்கு வந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேச சபைகளில் கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர் தனித்தனிக் குழுக்களாக நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேசசபைப் பிரிவில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆதரவான சுயேட்சைக் குழுவை எதிர்த்து அதே கூட்டமைப்புக்குள் இருக்கும் மற்றொருவரின் ஆதரவாளர்கள் தனியானதொரு சுயேட்சைக் குழுவை நிறுவியுள்ளனர்.

ஆலையடிவேம்பு பிரதேச சபையிலும் இதே போன்ற நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இவற்றில் ஆலையடி வேம்பு பிரதேசசபைப் பிரிவில் இரு சுயேட்சை அணிகளும் திருக்கோவில் பிரதேசப்பிரிவின் ஒரு அணியினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டுமென தீவிர ஆர்வம் காட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிந்தவூர், அட்டாளைச்சேனை பிரிவுகளுக்காக சமர்பித்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

## மட்டக்களப்பில் மீண்டும் ஒரு காரணமில்லாத ஹர்த்தாலுக்கு அழைப்பு!

இலங்கையின் ஹர்த்தால் நகரம் எனப் பெயர் பெற்றுள்ள மட்டக்களப்பு நகரத்தில் மீண்டும் எதிர்வரும் 16ம் திகதி சனிக்கிழமை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மட்டக்களப்பில் இடம்பெறும் ஹர்த்தால்களுக்கு குறிப்பிட்ட காரணம் குறித்த அல்லது அதற்கான அழைப்பு விடுத்தவர்கள் குறித்தோ போதிய தெளிவு மக்களுக்கு இருப்பதில்லை.

துண்டுப் பிரசுரங்கள் அல்லது சுவரொட்டிகள் மூலமாக விடுக்கப்படும் அறிவிப்புக்களுக்கு அமையவே ஹர்த்தால் இடம்பெறும்.

இம்முறையும் இதே போன்றே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பில் ஹர்த்தால் என்றதும் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள வீதிகளால் செல்லவே மக்கள் அஞ்சுகின்றனர். வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் வீரம் மிக்க மாணவர் குழுக்களின் கல்விச்சே இந்த அச்சத்துக்கு காரணமாகும். வழமையாக மாணவர் முன்னணி, எல்லாளன் படை என்று பல்வேறு பெயர்களில் ஹர்த்தாலுக்கான அழைப்புக்கள் விடுக்கப்படுவதுண்டு. கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் மாத்திரம் மட்டு. அம்பாறை வெகுஜன அமைப்பு என்ற புதிய குழுவொன்றின் பெயரில் வெளிவந்திருந்தது. தற்போது இந்தப் பகுதியில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பொன்றும் ஹர்த்தால்களை ஒழுங்கு செய்யும் பணியில் இறங்கியுள்ளது. ■

## காதலர் தின கொண்டாட்டங்களை எதிர்த்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

பெப்ரவரி 14ம் திகதியை காதலர்கள் தினம் என போலியாகப் பெயரிட்டு இந்த நாட்டின் பாடசாலை மாணவர்களையும் அப்பாவி இளைஞர் சமுதாயத்தையும் தீயவழியில் இட்டுச் சென்று அவர்களது எதிர்காலத்தை நாசம் செய்யும் குறுகிய நோக்கம் கொண்ட வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கோரி மூன்று பௌத்த பீடங்களினதும் மகாநாயக்கத் தேரர்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறப்பான பௌத்த பண்பாட்டு கலாச்சாரங்களுடைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் அண்மைக் காலமாக சில வர்த்தகர்களும் அவர்களுக்கு அனுசரனையாகச் செயற்படும் சில ஊடக நிறுவனங்களும் சேர்ந்து இளைஞர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதாக மகாநாயக்கர்களின் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் இவர்கள் கோரியுள்ளனர். ●

## "முஸ்லிம்கள் கப்பம் செலுத்தியே ஆகவேண்டும்!"

தமிழீழ தாயகத்துக்குள் வாழ்வதால் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்கு கப்பம் செலுத்தித்தான் ஆகவேண்டும் என்று அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் தெரிவித்ததாக கடந்த வாரம் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு சென்று திரும்பிய ஐ.தே.க. திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.எம். தௌபீக் தெரிவித்துள்ளார்.

இவர் தனது விஜயத்தின்போது திருமலை மாவட்ட புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஐங்கரன் மற்றும் முன்னாள் பொறுப்பாளர் ரங்கன் உட்பட பலரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது முஸ்லிம்களிடமிருந்து கப்பம் வாங்குவது தமது இயக்கமே என்பதை புலிகள் ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொண்டதாக தெரிவித்த தௌபீக், தமிழீழ ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வாழும் முஸ்லிம்கள் தங்களுக்கு கப்பம் செலுத்த வேண்டியது அவசியம் என்று புலிகள் கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

இது போராட்டத்திற்கு அவசியமான ஒரு காரணி அத்துடன் இதை கப்பம், பணம் பறித்தல் என்று இழிவுபடுத்தாமல் வரி அறவிடுதல் என்று கௌரவமாக அழைக்கவேண்டும் என புலிகள் தன்னிடம் கூறியதாகவும் தௌபீக் தெரிவித்திருக்கிறார். ■

## ஐ.நா. ஆயுதக் குறைப்பு நிபுணர்கள் வருகை

நாட்டின் வடக்குக்-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் காணப்படும் சட்டவிரோத ஆயுதங்களை மீளப்பெறுவது தொடர்பாக ஆராயவென ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் குறைப்பு தொடர்பான நிபுணர்கள் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இங்கு இது குறித்து பாதுகாப்பு மற்றும் சிவில் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள ஐ.நா. தூதுக்குழுவினர் தற்போது பாவனையில் இருக்கும் சட்டவிரோத ஆயுதங்களை மீளப் பெறுவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

பொது மன்னிப்புக் காலம் ஒன்றை அறிவித்து ஆயுதங்களை மீளப்பெறுவது, அதுசாத்தியப் படாத பட்சத்தில் கொடுப்பனவு ஒன்றை வழங்கியேனும் ஆயுதங்களை மீளப்பெறுவதென்பது போன்ற பல்வேறு யோசனைகள் இவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ■

## மடவளைக் கொலைகள் முஸ்லிம் அமைப்பொன்றின் சதியென்கிறார் ரத்வத்த

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி மடவளையில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் கொலை முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான வேறொரு முஸ்லிம் அமைப்பின் வேலையாக இருக்கலாம் என்று முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 9ம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்கு மூலம் அளித்தபோதே ஜெனரல் ரத்வத்த தனது அபிப்பிராயத்தை இவ்வாறு வெளியிட்டிருக்கிறார்.

இந்தக் கொலைகள் தொடர்பாகவோ இதற்கு உத்தரவிட்டது தொடர்பாகவோ தனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கூறியிருக்கும் அவர், இது முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகச் செயற்படும் மற்றொரு முஸ்லிம் அமைப்பின் செயலாக இருக்கக்கூடும் என்று தான் கருதுவதாக தெரிவித்திருக்கிறார்.

கொலைகள் செய்யப்பட்டுவிட்டதாக ஜெனரல் ரத்வத்தையிடம் கூறிய இராணுவ லெப்டினட் ஒருவரை ரத்வத்தை வாழ்த்தியதாக தெரிவிக்கப்பட்டதை அவர் நிராகரித்தார்.

தனது பிள்ளைகள் இருவரும் தற்போது எங்கிருக்கிறார்கள் என்று தான் அறியவில்லை எனக் குறிப்பிட்ட அவர், அவர்கள் தங்களது சட்டத்தரணிகளின் ஆலோசனைப்படி எங்கேனும் ஓர் இடத்தில் இருக்கலாம் எனறும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் போதியளவு ஊக்கத்துடன் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு கோரி மடவளையில் கடந்த 9ம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம் பெற்றது. ■

# முரசம்

## தெய்வம் வரம்கொடுத்தாலும் பூசாரி இடம்கொடாவிடில்...?

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு, குறிப்பாக இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்குத் தடை செய்யப்பட்டிருந்த பல பொருட்களுக்குத் தடை நீக்கம் செய்யப் பட்டு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டுள்ளமை தற்காலிகமாகவாவது வேதனையை அனுபவித்து வந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதலளிக்கக் கூடிய விடயம்.

எனினும் தெய்வம் வரம்தந்தாலும் பூசாரி இடம் கொடாததுபோல இப்போது ஏற்பட்டுள்ள இந்த வரப்பிரசாதத்தை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைக்கு மக்கள் ஆளாக்கப் பட்டுள்ளனர். அரசாங்கம் என்னதான் பொருட்களையும் போக்குவரத்தையும் அனுமதித்தாலும் இடையில் நிற்கின்ற ஆயுதம் தாங்கிய குழுக்கள் அப் பொருட்களுக்கும் போக்குவரத்துக்கும் வரியும் கப்பமும் வாங்கி வருகின்றன. அதனால் இப் பொருட்கள் அம் மக்களுக்கு எட்ட முடியாத பெருமடங்கு அதிகரித்த விலைக்கே செல்கிறது.

ஏற்கெனவே எவ்வித வருமானமுமின்றி வறுமையின் கடைக்கோட்டிற்குத் தள்ளப்பட்டவர்களாக வாழும் வன்னிப் பகுதி மக்களுக்கு பொருட்கள் சென்றாலும் அவற்றின் விலை வானத்தைத் தொட்டு நிற்குமென்றால் அவர்களுக்கு அது கைக்கெட்டாத நிலவாக வெறுமெனே அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிடவே உதவும்.

இவ்வாறு தாம் பொருளாதாரத் தடையைத் தளர்த்தியும் மக்கள் அவற்றை அனுபவிக்க முடியாதவாறு இவ் விடுதலை இயக்கங்கள் வரி வசூலிக்கின்றனவென புனர்வாழ்வு அமைச்சார் ஜயலத் ஜெயவர்த்தனா பகிரங்கமாகவே விசனித்துமுள்ளார்.

இதேவேளை வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் சிலவும், எந்தெந்த இயக்கங்கள் இவ்வாறு வரி அறவிடுகின்றனவெனக் குறிப்பிட்டு அதனால் எத்தகைய விலையேற்றம் ஏற்படுகிறதெனச் சுட்டிக்காட்டியுமுள்ளன. அண்மையில் ஒரு தொலைகாட்சிப் பேட்டி நிகழ்ச்சியில் இதனை எடுத்துக்காட்டி வினவப்பட்டபோது டெலோ அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவ்வாறாகத் தமது அமைப்பும் வரிவாங்குவது உண்மைதானெனப் பகிரங்கமாகவே ஒத்துக்கொண்டிருந்தார்.

எனினும் மக்களின் அவலங்களைப் போக்கவே தாம் உழைப்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் மக்கள் மீது மனிதாபிமானமற்ற இந்தப் பலாத்தாரச் சுமையைச் சுமத்துவது அவர்களின் அட்டகாசமான இலட்சியப் பேச்சுக்களையெல்லாம் போலித்தனமானதாகக் காட்டுவதாக உள்ளது. வரி வசூலிக்கும் உரிமை இவ் இயக்கங்களுக்கு எந்தச் சட்டத்தினாலும் வழங்கப்பட்டதல்ல. இது முற்று முழுதும் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மக்கள் மீதான பலாத்கார நடவடிக்கையே! தாம் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையெனக் சு றிக்கொண்டாலும் ஏதோ ஒருவகையில் ஆயுதங்களைத் தம்மகத்தே தக்கவைத்துக்கொண்டு அவற்றை இவ்வாறான செயற்பாடுகளுக்கே அவர்கள் பிரயோகிக்கிறார்கள். இத்தகைய சில இயக்கங்களை உள்ளடக்கி அமைந்த தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்றத்திலும் பெரும் பங்கு வகிக்கிறது. பேச்சுவார்த்தைக்கான அழுத்தங்களை வைப்பதில் முன்னிற்கும் இவர்கள் தமக்குள் இருக்கும் இந்த இயக்கங்கள் இத்தகைய மக்கள் விரோத வரிவிதிப்புகளை உடன் நிறுத்தவேண்டுமென நிர்ப்பந்தம் செலுத்தவோ நிபந்தனையிடவோ முன்வரவேண்டும். இல்லையேல் மக்களின் அவலநிலை குறித்து இவர்கள் வெளிப்படுத்தும் ஆதங்கங்கள் வெறும் நாடக வேடங்களாகவே ஆகிவிடும்.

இதேவேளை ஐக்கியதேசியக் கட்சியில் இருந்துகொண்டே தன்னை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராகப் பிரகடனப்படுத்திக்கொண்டு பெரும் ஆரவாரம் செய்கின்ற தமிழ் அமைச்சர் ஒருவரும் யாழ்பாணத்திற்கான எரிபொருள் விநியோகத்தில் தனியார்களூடாக வியாபாரம் நடத்தி விலையேற்றத்திற்கும் சீரற்ற விநியோகத்துக்கும் வழிசமைக்கிறாரெனவும், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்துக்கான கப்பலில் தனது வியாபாரப் பொருட்களை எடுத்துச்செல்லவே முன்னுரிமைகாட்டுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. இதையிட்டு அரசாங்கத்தின் மேல் மட்டம் தமது நன்முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அரசாங்கம் மேற்கொண்ட இந்த நல்லெண்ணச் செயற்பாடானது மக்களை எட்டாத வெறும் பத்திரிகைத் தலைப்புக்களாகவே உறைந்துவிடும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# உள்ளூராட்சித் தேர்தலில் உறைந்திருக்கும் சிக்கல்கள்

நரன்

"காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்பது பழமொழி! அரசியலில் இது ஒரு முக்கிய மான அறிவுரை.

காற்றைவிட அரசியலின் மாற்றங்கள் எதிர்பாரா தவை, வேகமானவை.

எனவே கிடைத்த சந்தர்ப்பத்தில் தமது காரியங்களைச் சாதித்துவிட வேண்டும்.

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் அரசியல் என்று கூறினாலும் தவறில்லையெனலாம்.

இன்றைய காலகட்டத்தில் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் என்ன?

ஆம்! சமாதானத்துக்கும், அரசியல் தீர்வுக்கு மான இன்னொரு சந்தர்ப்பம் இப்போது கிடைத் திருக்கிறது.

இந்த நாட்டைக் கூறுபோடும் யுத்தத்தில் ரத்த ஆறு பாய்ந்துகொண்டிருக்கும் நிலைமையை மாற்றி யமைக்க அதன் இருதரப்பினருக்கும் கிடைத் திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை இருவருமே எத் துணை பொறுப்போடும், சாதுரியத்தோடும் கையாண்டு இந் நாட்டு மக்களின் பேரெதிர்பார்ப் பைப் பூர்த்தி செய்யப் போகிறார்கள் என்பதைத் தான் யாவரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக் கிறார்கள்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பேச்சுவார்த் தையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம் முயற்சியில் யுத்தத்தின் இரு தரப்பினர் மட்டு மன்றி சர்வதேச சமூகமும் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் காட்டிப் பங்கேற்க முன்வந்துள்ளமை தெம்பூட்டும் விடயமாகும்.

இந்நிலையில்தான் இலங்கையில் உள்ளூராட் சித் தேர்தல்கள் தலைதூக்கியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நாட்டின் அடிமட்ட அரசியல் அலகுகளுக்கான தேர்தல்களாக விளங்குகின்றன.

மக்களின் அன்றாடத் தேவைகளையும் பிரதே சங்களின் நாளாந்தப் பராமரிப்பையும் மையமாகக் கொண்ட இந்தச் சபைகளின் இயக்கம் மிக அத்தியாவசியமான ஒரு தேவையுமாகும்.

இன்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை இத் தேர்தலானது மற்றொரு சாதகமான வாய்ப்பாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பாராளுமன்றத் தேர்தலில் பெருவெற்றியீட்டவைத்த மனோநிலையும் சூழ்நிலையும் இன்னும் மாறாதிருக்கின்ற நிலையில், தாம் ஆளும் கட்சி என்ற அதிகாரபலத்தோடு இத் தேர்தலை முகம் கொடுப்பது ஐ.தே.க. வின் வெற்றி வாய்ப்புக்கு மிகவும் சாதகமானது.

இதேவேளை, புலிகளுடனான யுத்த நிறுத்தம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கும் பீதிநீங்கிய ஒரு ஓய் வுணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக கொழும்பை மையமாகக் கொண்ட வர்த்தக சமூகத்தக்கு இந்தச் சூழல் மிக உற்சாகமானதாக இருக்கிறது.

அத்தோடு அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் கான முயற்சிகள் அதுபற்றிய நல்லபிப்பிராயத்தையும் தோற்றுவித்திருக்கிறது.

எனவே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற விவேகம் ஆளும் கட்சிக்குள் முளைவிட்டுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் பின்னர் நிலைமைகள் மாறிவிடலாம்.

இப்போதே மின்சார நெருக்கடி அரசாங்கத்தின் குரல்வளையை நெரிக்கிறது.

விலையேற்றங்களைச் செய்துதான் ஆகவேண் டிய பொருளாதார நெருக்கடி வலுத்து வருகிறது.

விலையேற்றத்துக்கேற்ற ஊதிய அதிகரிப்பு களை வழங்க முடியாததும், தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாததுமான நிதி நெருக்கடிக்குள் அரசாங்கம் தள்ளப்படும் நிலைமை தெரிகிறது.

அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பிதம் அடையும் கட்டங்கள் தோன்றுகின்றன.

ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட் டங்களுக்கான கொந்திராத்துக் காரர்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் அவர்கள் சட்ட நடவடிக்கைகளில் இறங்கவும் முற்படலாம்.

இவற்றுக்கெல்லாம் புறம்பாக, தற்போதைய யுத்த நிறுத்தம் ஏதேனும் காரணத்தினால் குழம்பிப் போகுமானால் அரசாங்கம் மீண்டும் ஒரு பாரிய யுத்த நெருக்கடிக்குள் தள்ளப்படலாம்.

தற்போது யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி, இராணுவ நடவடிக்கைகளுக்கான பெருமளவு நிதியை அரசாங்கம் தனது நிர்வாகத் தேவை களுக்காகத் திசை திருப்பி, நெருக்கடிகளைச் சமாளித்து வருகிறது.

யுத்தம் ஆரம்பித்தால், அப் பெருந்தொகை நிதியை மீண்டும் யுத்தத்துக்கே கொட்டியிறைக்க வேண்டி யேற்படும்.

எனவே எதிர்காலம் வாய்ப்பற்றதாக மாறிவிடு முன் தற்போதய அனுகூலங்களை முழுமையாகப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற் றிக் கொள்ளவே விவேகமுள்ள எந்த ஆளும் கட்சியும் சிந்திக்கும்.

ஐ.தே.க. அதற்கு விதிவிலக்கல்ல.

எனவேதான் அடுத்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்த முடிவெடுத் தது.

இதில்தான் புதிய சிக்கல் முளைத் துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த விளைந்திருக்கும் இவ் வேளையில், இங்கு மேற்கொள்ளப்படும் அர சியல் நடவடிக்கைகள், குறிப்பாக அவர்கள் தமது பாரம்பரியத் தாயகமாகக் கூறிவரும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் நிகழும் அர சியல் நடவடிக்கைகள்பற்றித் தம்முடன் பேசி முடிவெடுக்கப் படவேண்டுமென புலிகள் கருதுகிறார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் வட-கிழக்கு உட்பட முழு நாட்டுக்குமான தேர்தலாக நிகழ்த்தப்படப்போகின்றன.

எனவே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தம்மிடம் ஆலோசிக்காமல் ஒரு தேர்தலை நடத்த அரசாங்கம் தன்னிச்சையாக முடிவெடுத்த தானது அரசாங்கத்தின் நல்லெண்ணத் தைக் காட்டுவதாக இல்லையென்ற குறை பாட்டை அவர்களுக் குத் தோற்றுவிப்பதாக அமைந்திருந்தது.

இருந்தும் தமது எச்சரிக்கையையும் மீறி யாழ். மேயர் பதவியை வகித்தமையால் அவர் புலிகளால் கொல்லப்பட்டார்.

அவர் மட்டுமன்றி அவரை அடுத்து யாழ்.மேயர் பதவியை ஏற்ற சிவபாலனும்கூடப் புலிகளால் கொல்லப்பட்டார்.

அத்தோடு யாழ்ப்பாணத்தின் உள்ளூ ராட்சி சபைகள் பலதிலும் அதன் உறுப்பினர் கள்மீது கொலைகளும் கொலை முயற்சி களும் மேற்கொள்ளப் பட்டன.

புலிகள் சென்றதடவை இவ்வளவு விரோதமாக எதிர்த்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை இம்முறை தம்மைக் கேட்காது நடத்த அனுமதிக்க மாட்டார்களென்பது தெரிந்த விடயமே.

ஆயினும் அரசாங்கம் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தேர்தல்களை அறிவித்துவிட்டது.

தற்போது, புலிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில்தான் அவர்களை எவ்வாறு சமாளிப்பது எனத் திண்டாடுகிறது.

அதனால் வடக்கு கிழக்கில் இத் தேர் தல்களைப் பிற்போட முடியுமாவென முயற்சிக் கிறது.

புலிகளுக்கும் அவ்வாறே அத் தேர்தல் களைப் பிற்போடுவதாக அறிவித்துள்ளது.

ஆனால் அவ்வாறு செய்வதில் சில சிக்கல்கள் உள்ளன.

புலிகளைப் பொறுத்தவரையில் இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் எத்தகைய முக்கியத்துவமும் அற்றவை.

அதேவேளை தம்முடனான பேச்சு வார்த்தை பற்றிய விடயத்தை ஆரம்பித்து விட்டு தாம் தமது பாரம்பரியத் தாயகமெனக் கருதும் பிரதேசத்தில் அரசாங்கம் தன்னிஷ்டப்படி தேர்தல்களை நடத்துவது ஏற்க முடியாத விடயம்.



அதனால் புலிகள் வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடத்தக் கூடாதெனத் தெரிவித்துள்ளார்கள்.

புலிகளைப் பொறுத்தவரை இத் தேர் தலை ஏற்றுக்கொள்ளுவதென்பது சங்டமான தும் நியாயம் கற்பிக்க முடியாததுமான ஒரு விடயம்.

கடந்த காலங்களில் புலிகள் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல்களை நிராகரித்திருந் தார்கள். அத் தேர்தல்களில் பங்கேற்க வேண்டாமென்ற எச்சரிக்கையையும் தமிழ்க் கட்சிகளுக்கு விடுத்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தை கடந்த அரசாங்கம் புலிகளிடமிருந்து கைப்பற்றி அங்கு தமது நிர்வாகத்தை செயற்படுத்துவதற்காகவும் அங்கு நிலைமை சுமுகமாக உள்ளதாக உலகுக்குக் காட்டுவதற்காகவும் இத் தேர் தல்களை நடத்தியதாக அதுபற்றி மிகவும் எதிர்ப்புணர்வு கொண்டிருந்தார்கள் புலிகள்.

> ஒருபுறம், புலிகள் நிராகரிக்கும் இத் தேர்தலையிட்டு, புலிகளை ஒட்டிய நிலைப்பாட்டை அவர்களால் எடுக்க முடியவில்லை.
> புலிகள் இதை நிராகரித்துவிட்டு தம் பாட்டில் இருக்கலாம். ஆனால் இக் கூட்டமைப்பின் கட்சிகள் இவற்றை நிராகரித்து விட்டால் இவற்றை நிராகரித்து விட்டால் அவர்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்களைத் திருப்திசெய்யும் வகையில் பதவிகள் வழங்க முடியாதுபோய்விடும்.

தம்மை மீறி அத் தேர்தலில் பங்கெடுத்த தமிழ்க் கட்சிகள்- தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட - துரோகமிழைத்த கட்சிக ளாகவே அவர்களால் கொள்ளப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகரசபை மேயர் சரோஜினி யோகேஸ்வரன் தனிப்பட்ட முறையில் புலிகளுக்கு வேண்டப் பட்டவராவார்.

துரையப்பா கொலைச்சம்பவத்தில் தேடப் பட்டவராக தமது வீட்டிற்கு வந்த புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு தானே தனது கையால் தேனீர் பரிமாறியிருக்கிறாரென்றும் அதனால் புலிகள் தனக்கு எவ்வித ஊறும் விளைவிக்க மாட்டார்களென்றும் அவரே கூறியுமிருக்கிறார்.

தமது பாரம்பரியத் தாயகத்திலான அடுத்த பாரிய அரசியல் நடவடிக்கையானது தம்முடனான பேச்சுவார்த்தையில் காணப் படும் இணக்கத்தையடுத்தே மேற்கொள்ளப் பட வேண்டுமென்பதே புலிகளின் நிலைப் பாடாகும்.

இதனால் தர்மசங்கடத்துக்குள்ளாகி யிருப்பது அரசாங்கம் மட்டுமல்ல, புலிகளின் குரலாக ஒலிப்பதாகக் காட்டிக்கொண்டு அரசியல் நிகழ்த்த விளைந்த தமிழர் கூட்டமைப்பினரும்தான்.

ஒருபுறம், புலிகள் நிராகரிக்கும் இத் தேர்தலையிட்டு, புலிகளை ஒட்டிய நிலைப் பாட்டை அவர்களால் எடுக்க முடியவில்லை.

புலிகள் இதை நிராகரித்துவிட்டு தம் பாட்டில் இருக்கலாம். ஆனால் இக் கூட்ட மைப்பின் கட்சிகள் இவற்றை நிராகரித்து விட்டால் அவர்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்களைத் திருப்திசெய்யும் வகை யில் பதவிகள் வழங்க முடியாதுபோய்விடும்.

வடக்கு கிழக்கிலான உள்ளூராட்சி சபைகள் பெரும் எண்ணிக்கையான உறுப் பினர்களை உள்ளடக்குவதால் தமது கட்சி யின் அடுத்தமட்டத்தவர்களுக்கும் ஆதர வாளர்களுக்கும் இத் தேர்தலில் தாரளமாக இடமளிக்க முடியும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இக் கட்சிகள் கூட்டாகக் கேட்டதால் தமது முக்கிய உறுப்பினர்களுக்கே வாய்ப்பு வழங்க முடியாது போயிருந்தது.


அந்த மனக்குறைகளைத் தீர்க்கும் வடிகாலாக இவ் உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் அவர்களுக்கு இருந்தன.

அதனால் பாராளுமன்றத் தேர்தலில் தம்மை ஆதரித்த புலிகள் இதிலும் தம்மை ஆதரிப்பார்கள் என்ற நப்பாசையில் புலிகளின் மனநிலை புரிந்தும் புரியாததுபோல இத் தேர்தல்களில் பங்கெடுக்க விளைந்தனர்.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலைப் போலன்றி, உள்ளூராட்சிசபைத் தேர்தகளில் தம்மை அரசியல் ரீதியில் பலப்படுத்தும் தமிழ் கூட்டமைப்பின் தேவை இல்லை. உள்ளூ ராட்சி சபைகள் அன்றாட நிர்வாகத்தை முதன்மையாகக் கொண்டவையே அன்றி அரசியல் அரங்குகள் அல்ல. இதில் தமிழ்க் கூட்டுக் கட்சிகள் பங்குபற்றி புலிகளுக்காக எதையும் சாதிப்பதற்கு இல்லை.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்....)

# சாதாரணன் எழுதுவது....



திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களுக்கு,

ஆரம்பகாலத்தில இருந்து உங்கட கெட்டித்தனங்களை அவதானிச்சு வாற ஆள் எண்ட அளவில, இந்தச் சமூகம் ஒரு விண்ணனைக் கண்டுகொள்ளாமல் இருக்கு எண்ட கவலைதான் எனக்கு. இந்தக் கடித எழுத்தை துவங்கிறதுக்கு முந்தி என்ர கடைக்கு வாற லெக்சரர் க.விட்டைத்தான் என்ர பொங்குமன எழுச்சிகளையெல்லாம் நான் கொட்டித் தீர்க்கிறது.

அந்நாள், இந்தப் புத்திஜீவியள் கதைக்கேக்க காட்டுற நக்கலான பாந்தத்தோட "இப்பிடிக் கண்டதுக்கும் வியக்கிற குணந்தான் எங்களைக் கடைத்தேற விடாமல் பண்ணுது..." எண்டு ஏதோ எனக்கு விளங்காததைச் சொல்ல வேண்டியிருக்கிறதுக்காய்த் தன்னைத் தானே நொந்து கொள்ளுற மாதிரி முணுமுணுத்துப்போட்டுப் போகும்.

"திறமைகளை மதிக்காத சமூகம் கிரிமினல்களை உருவாக்குது" எண்டும் அவர்தான் ஒருக்காச் சொன்னவர்.

எனக்கெண்டால், இவையொருத்தருக்கும் இன்னும் விளங்காமலிருக்கிற உங்கடை கெட்டித்தனங்களை எப்பிடிச் சுருக்கிச் சொல்லுறதெண்ட வெப்பியாரந்தான்!

2000 ஆம் ஆண்டுத் தேர்தல்ல ஆயிரத்திச் சொச்சம் வோட் எடுத்த நீங்கள், தமிழினத்திற்கே துரோகி எண்டு சுட்டிக்காட்டப்பட்டீர்கள்.

அப்பவும், இயக்கத்துக்குள்ளேயே உங்களுக்கு முன்னாள் போட்டியாளராயிரந்த டக்ளஸ், ஒண்ணாம் நம்பர்த் துரோகியாய்க் காட்டப்பட்டதுதான் மனதைச் சுட்டது.

இயக்கத்துக்குள்ள ரெண்டாம் நம்பராயிருந்துகொண்டு காரியங்களை நடத்திறதில இருந்த பாதுகாப்பை அறியாதவரில்லை நீங்கள். ஆனால் பத்மநாபா செத்து அந்தச் செயலாளர் நாயகம் கதிரையைப் பிடிச்சதோடை உங்கட திறமையள் குடத்திலிருந்து குன்றுக்கு ட்ரான்ஸ்பர் ஆச்சு.

அதுக்குப் பிறகு, வேண்டாதவற்றையெல்லாம் வெட்டிக் கழிப்பதுதான் தலைமைப் பதவி எண்ட சிலையைச் செய்யுற வழி எண்டதைக் கணக்காய்ச் செய்து காட்டினீங்கள். கேதீஸ்வரன், வரதர், சுபத்திரன், சுகு, துரைரத்தினம் எண்டு முதலுக்கும் ரெண்டுக்கும் போட்டிக்கு ஆக்களே இல்லாத ஒரு அணிக்குத் தன்னேரில்லாத் தலைவனாகிறதைச் சாதிச்சு முடிச்சீங்கள்.

எல்லாம் முடிச்ச பிறகு தமிழினத்தின் ஒண்ணாம் நம்பர்த் துரோகிகளில் உங்களுக்கு இடமில்லை எண்டு தெரிஞ்சு போச்சு. ஒரு கட்டத்தில துரோகிப் பட்டியலில நீங்கள் பத்தாவதுக்கும் பின்னால தள்ளிப் போயிட்டியள்.

அங்கயிருந்து நீங்கள் பண்ணின 'ஜம்ப்'தான், இனி உங்கட கெட்டித்தனத்தை எடுத்துச் சொன்னால் இந்தச் சனங்களுக்குக் கொஞ்சமாவது விளங்கும் எண்ட நம்பிக்கையை எனக்குத் தந்தது.

தலைவரைக் குடுத்தது. உங்களை நம்பிப் பின்னால நிண்ட ஆயிரம் பேரைப் பலி குடுத்தது. ஐ.பி.கே.எப். காலத்தில தேசிய ராணுவத்துக்குத் தலைமை தாங்கிப் புலி அழிப்பில் தீவிரமாய் நிண்டது. அணிவகுப்புக்குத் தலைமை தாங்கிக் கழுத்தில் மாலைகளை வாங்கித் தலை நிமிர்ந்து தளபதி நடை நடந்தது. புலியளுக்கெதிராய்ப் பக்கம் பக்கமாய் அறிக்கை விட்டுத் தள்ளினது எல்லாத்தையும் மறவுங்கோ... மன்னியிங்கோ எண்டு ஒரு சின்ன அப்ளை! அடடா!

"கருவாடு மீனாகாது சுங்கான் சுடலைக்குப் போனாலும் சுண்ணாம்பைத் தேடாது, ஆட்டக்காரி பின்னால அறிவுள்ளவன் சேரமாட்டான்" எண்டு பேசினவை எல்லாம் அங்கே தமிழ்நாட்டில "அம்மாவே தெய்வம் உலகினிலே" எண்டு பிளேட்டைத் திருப்பிவிட்டால் அமைச்சர்களாகி விடலாம்... ஆகினார்கள் எண்டதெல்லாம் நாங்களும் அறிஞ்சதுதான்.

ஆனால் இது அந்தமாதிரிச் சாமானியமானதில்லை எண்டது உங்களைப் போல நூறில் ஒரு பங்காவது எதிர்ப்பாய் இருந்து பாத்தவைக்குத்தான் கொஞ்சமெண்டாலும் விளங்கிக் கொள்ளேலும். அந்தரத்தில ஒரு வளையத்தில தொங்கி ஆடி இன்னொரு வளையத்தைப் பாய்ஞ்சு பிடிக்கிற மாதிரியான ஒரு மரண விளையாட்டு இது. அந்த வித்தையைக் கனகச்சிதமாய்ச் செய்துகாட்டியிருக்கிற ஒண்டுக்காவே உங்களை விண்ணன் எண்டு இந்தச் சமூகம் அங்கீகரிச்சுத்தான் ஆகவேண்டும்.

2000த்தில ஆயிரத்திச் சொச்ச வோட் எடுத்த நீங்கள், 2001 இல பதினாலு மடங்காய் பதினாலாயிரத்துச் சொச்சம் வோட் எடுத்தது உங்கட தனி மூளையில்லாமல் வேறையென்ன? ஒரு வளையத்தில ஆடேக்க 'துரோகி' எண்டு வாயைப் பிளந்து பாத்திருந்த சனம், நீங்கள் அந்தரத்திலேயே கையை விட்டிட்டுக் 'கப்'பெண்டு மற்ற வளையத்தைப் பிடிச்ச உடனே 'ஆஹா! வீரன்' எண்டு கையைத் தட்ட வைச்சதை வேறெந்த நாட்டிலயும் ஆரும் செய்துகாட்டேலாது.

நாரந்தனைப் பிரச்சினையிலதான் உங்கட கல்குலேசன் கொஞ்சம் மிஸ்ஸாகிப் போச்சுது. காயம் படாமலே பின்னுக்கு நிண்டுகொண்டு, "மாவையையும் சிவாஜிலிங்கத்தையும் உயிர்போக விடாமல் காயங்களோடு காப்பாற்றிய மாவீரர்" எண்டு உதயனில ஒரு கிழமைக்கு விளம்பரம் குடுத்தால் மிச்சத்தைக் கம்பஸ் பொடியள் ஒப்பேத்திப் போடுவாங்கள். எண்டு கணக்காய்த்தான் யோசிச்சனீங்கள். ஆனால், ஆஸ்பத்திரியில கட்டுப் போட்டுக் கொண்டு குடுத்த விளம்பரத்தால சிவாஜிலிங்கத்துக்கு எப்பன் எகிறிப் போச்சு. என்ன செய்ய? இந்தக் கோதாரிப் பொடியளை நம்பி வன்னியைக் கைவிட்டதும், அங்கை நிண்டு எம்.பியாகிவிட்ட ஆனந்தனைக் கடைசிவரை கழட்டேலாமல் போனதும் உங்கட ராஜதந்திரத்தில சின்னச் சறுக்கலதான்.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்...)

# அயோத்தி ராமர் கோயிலும், தமிழக அரசியலும்

அயோத்தி விவகாரம் மீண்டும் அனல் பறக்கத் தொடங்கிவிட்டது. இது இந்திய அரசியல் கூட்டணிகளையே மாற்றியமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு சுமார் பத்தாண்டுகளான நிலையில் விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பு பெரும் முயற்சி எடுத்து ராமர்கோயில் கட்டுமானப் பணிகளை 100 கோடிக்கும் மேற்பட்ட செலவில் செய்து கொண்டுள்ளது. இதற்காக விசேஷ தூண்கள், விக்கிரகங்கள், தரைக்கற்கள், கூரைக்கற்கள் போன்ற அனைத்தும் தயாரான நிலையில் உள்ளது. மார்ச் 12ந் தேதியோ அல்லது இந்த தேதிக்கு சில நாட்கள் கழித்தோ கண்டிப்பாக ராமர்கோயில் கட்டும் பணி சம்பந்தப்பட்ட இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு விடும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று வி.ஹெச்.பி.சவால் விட்டுள்ளது.

சமீபத்தில் பிரதமர் வாஜ்பாயை சந்தித்த வி.ஹெச்.பி. தலைவர்களும், சாதுக்களும் அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதிக்கு அருகில் உள்ள, அதே சமயம் சர்ச்சையில் சிக்காத 67 ஏக்கர் நிலத்தை ராமஜென்மபூமி அறக்கட்டளையிடமே திருப்பித்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். ஆனால் இந்த கோரிக்கையை சட்ட அமைச்சகத்தை கலந்து ஆலோசித்துவிட்டு முடிவு தெரிவிப்பதாகக் கூறி பிரதமர் சமாளித்தார்.

ஆனால் வி.ஹெச்.பி. இந்த விஷயத்தில் மிகவும் உறுதியான நிலையை எடுத்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது. "மார்ச் 12ந் தேதி வரை மத்திய அரசு பதில் சொல்லக் கெடு தந்துள்ளோம். அதன் பிறகும் நாங்கள் எங்கள் கெடுவை ஒத்திவைப்போம் என்று மத்திய அரசுக்கு உத்தரவாதம் எதையும் நாங்கள் தரவில்லை. மத நம்பிக்கை விஷயத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்கு இடமில்லை" என்று வி.ஹெச்.பி. தலைவர் அசோக்சிங்கால் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள மதச் சார்பற்ற தன்மையில் நம்பிக்கையுள்ள- தமிழகக் கட்சிகளான தி.மு.க.வும், ம.தி.மு.கவும், பா.ம.கவும் என்ன நிலை எடுக்கப்போகின்றன. மத்திய அரசில் தங்களுக்கு கிடைத்துள்ள முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ராமர் கோயில் கட்டப்படுவதை வேடிக்கை பார்க்குமா? அல்லது இது நாள்வரை தாங்கள் பேசி வந்த கொள்கையை வெளிப்படுத்தி ராமர் கோயில் கட்டப்படுவதைத் தடுக்குமா? என்பது மிகப்பெரிய கேள்வியாக எழுந்துள்ளது.

ஆனால், "அயோத்தி ராமர் கோயில் பிரச்சனையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்போம் என்ற தி.மு.க. நிலையில் மாற்றம் இல்லை" என்று பொத்தாம் பொதுவாக தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார். மேலும் அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டபோது ராமஜென்மபூமி பிரச்சனையில் என்ன முடிவு எடுக்கப்பட்டதோ அந்த முடிவிலிருந்து மத்திய அரசு மாறாது. பிரதமர் வாஜ்பேயி நிதானத்துடன் செயல்படுகிறார்" என்றும் தெரிவித்துள்ளார்.

கருணாநிதியின் இந்த பதில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சங்கரய்யாவை அதிகமாகவே கோபப்படுத்தியுள்ளது. "அயோத்தியில் நீதிமன்றத்தின் கட்டுப் பாட்டில் இல்லாத, சார்ச்சைக்கு அப்பாற்பட்ட 67 ஏக்கர் நிலத்தை விஸ்வஹிந்து பரிஷத்திடம் தரலாமா என்பது பற்றி சட்ட அமைச்சகத்தின் கருத்தை கேட்டிருக்கிறார் வாஜ்பேயி.

சட்ட அமைச்சகத்திடம் கருத்துக் கேட்கலாம் என்பது தான் தி.மு.க. கொண்டிருந்த நிலையா? இது தான் தேசிய ஜனநாயக் கூட்டணியின் செயல் திட்டத்தில் கூறப்பட்டிருந்ததா? என்பதற்கு பதில் கூற வேண்டும்" என்று சங்கரய்யா காட்டமாக கருணாநிதிக்கு கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார்.

அயோத்தி விவகாரம் பற்றி தி.மு.க.வில் ஒரு தரப்பினரே உள்ளுக்குள் புழுங்கிய வண்ணம் தான் உள்ளனர். "அயோத்தியில் தடைகளை மீறி வி.ஹெச்.பி. ராமர்கோயில் கட்ட முயற்சிக்குமானால் அதை மத்திய அரசு தடுக்காமல் வேடிக்கை பார்க்குமானால் அப்போது நிச்சயம் தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலக வேண்டியதாகிவிடும். கொள்கைகளில் எவ்வளவோ பல சமரசங்களைக் கண்ட கட்சி தான் தி.மு.க. என்றபோதிலும் இது பெரியார், அண்ணா வழி வந்த கட்சி. ஒரு போதும் இந்துத்துவா சக்திகளின் அராஜகத்தை அனுமதிக்காது. உள்ளே இருந்து கொண்டே மத்திய அரசை ராமர் கோயில் கட்ட அனுமதிக்காமல் பார்த்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம். நாங்கள் இப்போதே வெளியேறினால் உடனே அ.தி.மு.க., பா.ஜ.க.வில் சேர்ந்து கொண்டு அயோத்தியில் ராமர்கோயில் கட்ட ஆதரவ தெரிவித்து நசுக்க நினைக்கும். ஆகவேதான் பொறுமை காட்டுகிறோம். ஆனால் தி.மு.க. சரியான நேரத்தில் சரியானபடி வெளிப்படும் என்று தி.மு.க. வட்டாரத்தில் முக்கியஸ்தர்கள் சிலர் தெரிவித்தனர்.



ஆனால் தி.மு.க.வைப் போலில்லாமல் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் விவகாரத்தை கடுமையாக எதிர்த்து மத்திய அரசை எச்சரித்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழக அரசியல் கட்சிகளில் இந்துத்துவா கொள்கைகளுக்கு இசைவான கட்சியாக அ.இ.அ.தி.மு.க.வைத்தான் விஸ்வஹிந்து பரிஷத் கருதுகிறது. ஆகவே தான் அவர் அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவை நேரில் வந்து சந்தித்து ஆலோசனை நடத்திவிட்டுச் சென்றுள்ளார். இந்து முன்னணி இராம கோபாலனும் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் ஜெயலலிதாவிற்கு வெளிப்படையாக தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலை வைத்துப் பார்க்கும்போது உத்திரபிரதேசத்தில் இராமர் கோயில் எழுமானால் தமிழகத்தில் தேசிய ஜனநாயக் கூட்டணியில் தி.மு.க. நிலைப்பது இயலாததாகிவிடும். ஏற்கனவே பா.ஜ.க.தி.மு.க. உறவு மோசமடைந்து வரும் நிலையில் பா.ஜ.க. உறவை துண்டித்துக் கொள்ள ராமர் கோயில் விவகாரத்தை தி.மு.க, பயன்படுத்தலாம்.

(தொடர்ச்சி 17ம் பக்கத்தில்.....)

அண்டை மண்டலத்திலிருந்து

கானகன்

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.

**T.P. 0041-31-8191837**

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

## ஆரோக்கிய வாழ்வுக்கோர் ஆயுர்வேத இயற்கை மருத்துவம்.

சுவிஸ் நாட்டின் இயற்கை வைத்தியர் சங்கம் (NVS), மாற்றீட்டு மருத்துவர்கள் சங்கம் (EMR) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று பின்வரும் வைத்திய முறைகள் கீழுள்ள முகவரியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ★ ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள்
- ★ ஆயுர்வேத 'தெரப்பி' முறைகள்
- ★ ஏழுநிலை மசாஜ் (முதுகு வலி)
- ★ ஒற்றைத்தலைவலி மசாஜ்
- ★ பிராணசக்தி மூலம் சிகிச்சை
- ★ கிசு உப்பு மருத்துவம்
- ★ அதிர்வு முறையிலான சீன மருத்துவம் (அலர்ஜி)

அனேகமான மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் இவற்றுக்கான செலவினை ஏற்றுக்கொள்கின்றன. (பெண்களுக்கான தனி மருத்துவ பிரிவும் உண்டு)

தொடர்புகளுக்கு:- Dr.இளங்கோ ஏரம்பமூர்த்தி ( ஆயுர்வேத இயற்கை வைத்தியர்)
Dip.in Ayurvedischer Medizin, A.Mitglied NVS, Praxis Ayurveda Siddha, Bellevuestr.12
3095 Spiegel b.Bern, Switzerland

Tel.031 9742021 Nat.0764112021
Fax. 031 9742024

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜனவரி 20 முதல் 27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஜனவரி 28 - 29 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் பெப் 02, 03 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் பெப் 09, 10 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## M.C.S. CARGO SERVICE ZURICH TO COLOMBO

*இலங்கைக்கான அடுத்த கொள்கலன் 12/03/2002 அன்று புறப்பட்டு 05/04/2002 அன்று இலங்கையை வந்தடையும்.*

| சேகரிப்பு தினங்கள் | இடங்கள் |
|---|---|
| மார்ச் 06-08-2002 | சூரிச், சூரிச்சுக்கு அண்மையிலுள்ள இடங்கள். |
| மார்ச் 09-2002 | பேர்ண், ஜெனீவா, லௌஸன் ∴பிரிபேர்க் |
| மார்ச் 10-2002 | பாஸல், பேடன் |
| மார்ச் 11-2002 | லூஸன் |
| மார்ச் 12-2002 | சென் செலன் |

தொடர்புக்கு:

Oscar -079.6319288, Winsent- 031 9925739
Ranjith Fernando- 041 3600912
Mohan Fernando- 071-2223214
Munasinghe 079-6656553/ 01-3025838
Perlyn Tour's 01-440 7115

## சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமணசேவை சிறந்த முறையிலும் சமய முறைப்படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மேலும் எங்கள் சேவைகளில் பதிவு திருமணம் தங்கும் இடவசதி போக்குவரத்து வசதியுடன் குறித்தநேரத்தில் சிறந்த முறையிலும் நிறைவான சேவைக்கு நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் நாணயம், நேர்மை, செயல் திறன் மிகுந்த துரித சேவைகளுக்கும் எங்களை அழைக்கவும்.
அரசாங்க அனுமதிபெற்ற எங்கள் சிங்கப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

S.மோகனதாஸ்-R.பரமசிவம்
LAVENDER WEDDING SERVICE
BLK-808 FRENCH ROAD
#01-159 SINGAPORE 200 808
TELEPHONE NO: (HP) 65-92714294
T.P &FAX 65-2946580
65-3720592
E-MAIL VS BOY @ HOT MAIL.COM.

எமது வாடிக்கையாளர்களுக்கான ஒரு சேவைகளை பூர்த்தி செய்கின்றோம். உலகில் அனைத்து பாகங்களில் இருந்து சிங்கைக்கு வருவதற்கான விமானபயண சீட்டுகளை பெற்று தருகின்றோம் கீழ்காணும் எங்கள் நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும்.

இலங்கை தொடர்புக்கு:
**A.ரமேஸ்**
(T.P) 01-259344

லண்டன் தொடர்புக்கு
**திரு.சுரேஸ்குமார்**
(HP) 44-77-63343591


கனடா தொடர்புக்கு:
**திரு மோகன ராஜ்**
(HP) 1416-8586413 (5.P.M)
1416-2867936

பிரான்ஸ் தொடர்புக்கு:
**திரு ரவி**
(HP) 33 623589520
331 536204787

# விளம்பரப் பகுதி

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங்களையும் கைரேகைகளையும் தெட்டத்தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி (16.02.2002)



### வேலாயுதம் பரமேஸ்வரி

**மலர்வு: 05.11.1941** **உதிர்வு: 10.03.2000**

புன்னகைத்த எம் பூமரங்கள்
பூப்பூக்க மறுத்தனவோ
விண்ணகத்து கண்ணீரும்-எம்
விழியை நிறைத்தனவோ
வெண்ணிறத்து பால் கொடுத்து-எமக்கு
செந்நீரைத் தந்தவரே
சித்தங்கலங்கவிட்டு எவ்வுலகம்
சென்றீங்களோ.

மலையின் உறுதியை உங்களின்
மனதில் பார்த்தோம்
மலரின் மென்மையை-உங்களின்
இதயத்தில் பார்த்தோம்
புயலைத்தள்ளிய புறங்கை உங்களுக்கு
கர்ணன் பரம்பரை கர்வம் எங்களுக்கு

உங்களைப் பெற்றதால்-உங்கள்
அன்னைக்கு பெருமை-உங்களால்
பிறந்ததால் எங்களுக்கு பெருமை
தாயே நீங்கள் வேராய் இருந்து
கணவன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
பெறாமக்கள் மருமக்கள் என
விழுதுகளைப் பரப்பிவிட்டீர்கள்-அவை
விருட்சமாகி உங்களை வேண்டி நிற்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் நேர்ந்து நிற்கிறோம்.

தகவல்:- மகன்-வே. சிவவேல்.


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**நீங்கள் நாடுவது வெளிநாட்டு வேலைவாய்ப்பானால் பல வருட அனுபவம் வாய்ந்த முன்னோடிகளையே நாடுங்கள்.**

### பணிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| சவுதி அரேபியா | பணிப்பெண் | ரூபா. 12,500/- முதல் |
| | சாரதி | ரூபா. 17,500/- முதல் |
| சிங்கப்பூர் | பணிப்பெண் | ரூபா. 11,000/- முதல் |
| குவைட் | பணிப்பெண் | ரூபா. 12,000/- முதல் |
| பஹ்ரைன் | பணிப்பெண் | ரூபா. 10,710/- முதல் |
| அபுதாபி | புணிப்பெண் | ரூபா. 12,000/- முதல் |
| டுபாய் | பணிப்பெண் | ரூபா. 12,000/- முதல் |
| லெபனான் | பணிப்பெண் | ரூபா. 12,700/- முதல் |
| ஜோர்தான் | பணிப்பெண் | ரூபா. 11,090/- முதல் |
| மலேசியா | பணிப்பெண் | ரூபா. 10,800/- முதல் |
| ஓமான் | பணிப்பெண் | ரூபா. 11,650/- முதல் |
| தோஹா கட்டார் | பணிப்பெண் | ரூபா. 12,500/- முதல் |

### ஜூகி இயக்குனர்கள்

| | | |
|---|---|---|
| டுபாய் | ஜூகி இயக்குனர் | ரூபா. 11,400/- முதல் |
| ஓமான் | ஜூகி இயக்குனர் | ரூபா. 11,625/- முதல் |
| | மேற்பார்வையாளர் | ரூபா. 18,600/- முதல் |

நேர்முகப் பரீட்சை: கிழமை நாட்களில் காலை 9.00 – மாலை 5.00 வரை
சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் காலை 10.00 – பகல் 2.00 வரை

- ■ வயது - பணிப்பெண்கள் 20 முதல் 40 வரை, ஜூகி இயக்குனர்கள் 18 முதல் 35 வரை, சவூதி சாரதி 30 இற்கு மேல், ஏனைய நாடுகளிற்கு வயது 20 இற்கு மேல்.
- ■ இரு வருட ஒப்பந்தம்.
- ■ உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி, இலவசம்.
- ■ பணிப்பெண், ஜூகி இயக்குனர்களிற்கு இருவழி விமான டிக்கட் இலவசம்.
- ■ ஆண்களுக்கு ஒப்பந்த கால முடிவில் திரும்பிவர இலவச விமான டிக்கட்.
- ■ கடவுச் சீட்டு இல்லாதவர்களுக்கு கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள ஆலோசனை வழங்கப்படும்.
- ■ பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 6 வர்ண புகைப்படங்கள், போஸ்ட்காட் அளவிலான முழு வர்ண புகைப்படங்கள் இரண்டு சகிதம் நேரில் சமூகமளிக்கவும்.

நீங்கள் இதற்கு முன் வெளிநாட்டில் பணிபுரிந்த அனுபவமுள்ளவராக இருந்தால், ஆங்கிலம் அல்லது அரபு பேசக்கூடியவராகவும் இருந்தால் கூடுதலான சம்பளத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இல்லங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எம்மை நேரில் தொடர்பு கொள்ளவும்.

TRANS GULF TGL GROUP
Since 1990
அரச அங்கீகார இலக்கம்-742

## ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்

இலக்கம் 47, இரண்டாம் மாடி, ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு 01.
தொலைபேசி இலக்கங்கள்: 321133, 329258.

AL/742/Advt:/13/14/15/16/2001

WAZ

*உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாய் மாற்றிடும் நிரந்தர ஸ்தாபனம்*

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர்குல வேளாள பிரித்தானிய குடியுரிமை பெற்றவரும் தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (STORE MANAGER) பூரம் 3ம் பாதம் (பாவங்கள் குறைவு) உயரம் 5' 4", 34 வயது மணமகனுக்கு பொருத்தமான மணமகளை விரும்புகின்றனர். சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

www. THIRAJH @ AOL.Com.
MRS.Jegatheswaran
No:- 46
Boswal Place
Colombo-06.

## முஸ்லிம் திருமண சேவை

**Muslim Marriage Service**

நீங்கள் உங்களின் தராதரத்திற்கு தகுதியான மணமகனையோ, மணமகளையோ, நாடு பூராவிலிருந்து, திருமணம் முடிப்பதற்கு எதிர்பார்ப்பவர்கள், எங்களின் கணனியில் அவர்களுடைய முழு விபரங்களையும் பதிவு செய்து அதன் மூலம் தெரிவு செய்யலாம். அதேபோல் மற்றவர்கள் உங்களையும் தெரிவு செய்யலாம். எங்கள் சேவை திருமணம் வரை தொடரும். இரகசியமும் பாதுகாக்கப்படும் விண்ணப்பப்படிவம் பெற 3/50 பெறுமதியான இரண்டு முத்திரைகளும் உங்கள் விலாசம் எழுதிய முத்திரை ஒட்டிய கடித உறையும் அனுப்பவும்.

**Director,
Noor Imam NP.,
P.O.BOX 1898,
Colombo.**

# சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகள்!

அலசுவது-இராஜதந்திரி

அரச தரப்புக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே காத்திரமான புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னேற்றங் கண்டு வருகின்றன.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெஸன் தலைமையிலான சமரச முயற்சிக்குழு ஒஸ்லோ, லண்டன், கொழும்பு என ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தை கண்டம் விட்டுக் கண்டந்தாவிச் சென்று தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

வன்னிக்கானகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனும், லண்டனில் அவரது பேச்சாளரும் அரசியல் ஆலோசகருமான அன்டன் பாலசிங்கமும், கொழும்பில் இலங்கை அரச தரப்பும், புவியின் வடக்கே ஒஸ்லோ நகரில் நோர்வே அனுசரணையாளர்களுமாக சமரச நடவடிக்கைகள் ஒருவான் வெளிப் பயணமாகவே இருந்து வருகின்றது.

இதுவரை நடந்தேறியுள்ள பேச்சுவார்தைகள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரச தரப்புக்குமிடையே புரிந்தணர்வு ஒப்பந்தமொன்றைக் கொண்டு வருமளவுக்கு முன்னேற்றங் கண்டுள்ளன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் பட்சத்தில் எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கும், இலங்கை அரச தரப்புக்குமிடையே ஒரு நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்படுவதோடு, சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியுமெனவும் நம்பப்படுகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாகத் தயார் செய்வதற்கு முன்னோடியாக ஒரு நகல் அறிக்கை தயாராகியுள்ளது. இதில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பும், ஆயுதப்படைகளும் நிரந்தர யுத்த நிறுத்தமொன்று ஏற்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு இரு தரப்பையும் சேர்ந்தோர் உட்பட ஸ்கன்டிநேவிய நாடொன்றைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரும் அடங்கிய கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நிறுத்தங்கள் ஒரு தலைப் பட்சமானவையாகவும், நம்பிக்கையீனங்களைக் கொண்டவையாகவும் இருந்தன. போதியளவு புரிந்துணர்வோ அல்லது தகுந்த கண்காணிப்பாளர்களோ இல்லாதிருந்ததால் முன்னைய யுத்த நிறுத்தங்கள் குறுகிய காலத்தில் முறிவடைந்திருந்தன.

ஆனால் இத்தடவை ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்தை உறுதியாக ஏற்படுத்துவதன் அடிப்படையிலேயே ஏனைய விடயங்களைக் கையாளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் உத்வேகம் பெற ஆரம்பித்துள்ள இத் தருணத்தில், சிறைக் கூடங்களில் நீதிமன்ற விசாரணைகளின்றி அடைபட்டுக்கிடக்கின்ற தமிழ்க்கைதிகள் பற்றியும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

பலவருடகாலமாக வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்போடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற ரீதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சிறைகளில் வாடிவருகின்றனர்.

இந்த இளைஞர்களது விடுதலை குறித்தோ, அல்லது அவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகள் பற்றியோ கரிசனைப்படாத ஒரு நிலையே காணப்படுகின்றது.

தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்கள் அனுபவிக்கும் சிறைவாசம், தடுப்புக்காவல் போன்றவை அபாயகரமானவையாகவே இருக்கின்றன.

விசாரணைகளின் பொருட்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் மீது உரிய விசாரணைகள் நடத்தப்படுவதுமில்லை. அத்துடன் நீதிமன்றங்களில் கூட கைதாகும் தமிழ் இளைஞர்கள் நிறுத்தப்படுவதுமில்லை.

சிறைக் கூடங்களில் வெறுமனே கைதிகளாக மட்டுமல்ல; தீண்டத்தகாத பயங்கரவாதிகள் போல இனத்துவேச மனப்பாங்குடனேயே தமிழ்க் கைதிகள் நடத்தப்படுவதை அவர்கள் வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது கொழும்பு வெலிக்கடைச் சிறையில் ஐம்பதுக்குமதிகமான தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவமே சிறைவைக்கப்பட்ட தமிழ்க் கதைகள்மீதான முதலாவது படுபாதகமாக விளங்கியிருந்தது.

இச்சம்பவத்தையடுத்தே சிறைகளில் இருக்கும் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியிருந்தது.

களுத்துறை, நீர்கொழும்பு, பூஸா போன்ற ஏனைய இடங்களில் இருக்கும் தமிழ்க் கைதிகள் கூட அவ்வப்போது தமது விடுதலை வேண்டி சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இக் கைதிகள் சம்பந்தமாக பாராமுகமான போக்கே அரச தரப்பினால் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் தமது விடுதலை வேண்டிக் குரலெழுப்பிய போது பல தடவைகள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஒரு வருடத்துக்கு முன்னர் பண்டாரவளைப் பிரதேசத்திலுள்ள பிந்துனுவெவப்பகுதியில் இருக்கும் புனர்வாழ்வு மையமொன்றிலிருந்த தமிழ் இளைஞர்களில் முப்பது பேர்வரை படுமோசமான முறையில் தாக்கிக் கொல்லப்பட்டிருந்தனர்.

பண்டாரவளை பிந்துனுவெவவில் கைதிகள் என்றில்லாது புனர்வாழ்வு பெறுவோர் என்ற வகையிலேயே தமிழ் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இந்த அப்பாவித் தமிழ்க் கைதிகள் பிந்துனுவெவ முகாமின் பாதுகாப்புக்கும் பொறுப்பாகவிருந்த சில அதிகாரிகளின் ஒத்தாசையுடன் வெளியே இருந்துவந்த கும்பல்களால் மிக மூர்க்கத்தனமான முறையில் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள், ஆணைக்குழு என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் ஒழுங்கான நீதிமன்ற விசாரணை நடத்தப்படாதிருப்பதோடு, குற்றவாளிகளும் இதுவரை கண்டறியப்படாமலேயே இருக்கின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஓர் உள்நாட்டு யுத்தமாக ஆரம்பமான காலம் முதல் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இலங்கையின் பல்வேறு சிறைக் கூடங்களிலும் பலதரப்பட்ட பாதிப்புக்களையும் எதிர்நோக்கியிருந்தனர்.

சுற்றிவளைப்ப, தேடுதல் நடவடிக்கைகள் போன்றவற்றின்போது கைதான தமிழ் இளைஞர்கள் தென்னிலங்கைச் சிறைக் கூடங்களில் விசாரணைகளின்றி நீண்ட காலமாகவே தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

ஆனால் பலதரப்பட்ட அரசியல் வன்முறைகளிலும் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படாமல், செல்வாக்குடைய அரசியல்வாதிகளால் காப்பாற்றப்பட்டு வருகின்றனர்.

கடந்த பொதுத் தேர்தலின்போது கண்டி மடவளைப் பிரதேசத்தில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் துப்பாக்கி நபர்கள் சிலரால் வான் ஒன்றினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டுவரும் முக்கிய சந்தேக நபர்களில் முன்னாள் பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்தரத்வத்தையின் இரு புதல்வர்களும் அடங்குகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் இந்த இரு பிரதான சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த இருவருமே பொலிஸாரின் பிடியில் சிக்காது தொடர்ந்தும் தலைமறைவாகவே இருந்து வருகின்றனர்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு நெருக்கமான அதிகாரிகள் தலைமறைவாக இருந்து வருகின்ற அவரது இரு புதல்வர்களுக்கும் புகலிடம் வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர கடந்த பொதுத் தேர்தல், மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்கள் என்பவற்றில் கொலைகள் உட்பட பல்வேறு வடிவிலுமான வன்முறைகளில் ஈடுபட்டோர் மீது உரிய விசாரணைகளோ, அல்லது சட்ட நடவடிக்கைகளோ இதுவரை எடுக்கப்படாமலேயே இருந்து வருகின்றது.

ஆனால் எவ்வித குற்றமும் நிரூபிக்கப்படாத நூற்றுக்கணக்கான வடக்கு-கிழக்குத் தமிழ் இளைஞர்கள் பல வருடகாலமாக சொந்த பந்தங்களைப் பிரிந்து சிறைக் கூடங்களில் வாடி வருகின்றனர்.

சிறைகளில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் ஒரு புறமிருக்க, கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பட்டியலிலும் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் இடம்பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


வடக்கே யாழ்ப்பாணக்குடா நாட்டில் செம்மணிப் பகுதியில் பலர் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள்கூட வெளியாகியிருந்தன.

ஆனால் செம்மணி விவகாரம் குறித்த விசாரணைகள் பூர்வாங்கக் கட்டத்தை மட்டும் எட்டியிருந்ததே தவிர விரிவாக எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கைதானோர், காணாமல் போனோர், வன்முறைகளில் ஈடுபட்டோர் தொடர்பாக அரச தரப்பின்மீது மலைபோல் குற்றச் சாட்டுக்கள் குவிந்திருக்கின்றன.

ஆனால் இவை குறித்து சட்டத்தின் பிடி வெகுவாகவே தளர்ந்திருக்கிறது.

சிறைக் கூடங்களில் இருக்கும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் மட்டும் சட்டத்தின் இரும்புக் கதவுகள் வெகு இறுக்கமாகவே மூடப்பட்டிருக்கின்றது.



## அதிரடி அய்யாத்துரை

**உள்ளூராட்சித்** தேர்தல் வந்துதுதான் பாருங்கோ கூட்டுக் கட்சிக்குள்ள ஒரு கோழிச் சண்டையே மூண்டுட்டுது. ஆட்தெரிவில இழுபறிப்பட்டு நேரத்துக்குப் போகாமலும் கட்டுக் காசு கட்டாமலும் திருமலை உட்பட ரெண்டு மூன்று இடத்திலை கட்சி நிராகரிக்கப்பட்டுப் போச்சு. திருமலைக் குளறுபடிக்குச் சம்பந்தமான ஐயாதான் முழுக்காரணமெண்டு சீறிற காந்தா அறிக்கைவிட, கூட்டுக்குள்ள யாரும் தனியறிக்கை விடகூடாதெண்டிருக்க சீறிறவர் வரவர வரம்பு மீறிறாரெண்டு சம்பந்தமானவர் செல்வத்தாரிட்டக் கொம்ப அவரைக் கட்டுப்படுத்த என்னால ஏலாதெண்டு கைவிரிக்கிறாராம் செல்வத்தார். ஆனால் பாருங்கோ, கொக்கரிக்கிற கூட்டுக்காரர் புலிகள் நிராகரிச்ச தேர்தலொண்டில விழுந்தடிச்சுப்போட்டுட்டு என்னத்தைக் கொத்தித் தின்ன இப்பிடி மல்லுக் கட்டினமெண்டுதான் தெரியேல்லை.

**செல்வத்திற்** சிறந்தசெல்வம் என்ன செல்வமெண்டு எவர் சொல்லியிருந்தாலும் எங்கட செல்வத்தாரைப் பொறுத்தவரை செல்வந்தான் செல்வமாம். போன தேர்தலில ஐக்கியமான தேசியக் கட்சிக்காரரிட்டயிருந்து ரெண்டு கோடிக்குக்கிட்ட வாங்கி வைச்சுக்கொண்டு கட்சிக்காரருக்கு கஞ்சல்தனமா ஒரு கொஞ்ச லகரங்களத்தான் தேர்தல் செலவுக்குக் குடுத்தாராமெண்டு வெந்து போய் நிக்கினம். நொந்துபோன உறுப்பினர்கள் கட்சியெண்டு சேத்துவைச்சுக் கேம்ப் வழிய நிரம்பியிருக்கிற பெடியளுக்குக் கஞ்சியூத்திறதே பெரும் பாடாயிருக்குதாம். ஆனால் சிலபேர் தாங்கள் தாங்கள் நெனச்சமாதிரி கப்பம் வரியெண்டு இறங்கி கலெக்ஷன்காசில ஒரு ரொக்கத்தக் கையில குடுத்தால் என்ன கூத்தாடினாலும் கண்டு கொள்ளாமல் போயிடுவாராம். இத்தனைக்கும் அவர் புத்திசாலித்தனமா, எந்நேரமும் அரசியல் பிழைச்சால் விட்ரோ பண்ண ரெடியா ஃபெமிலி எல்லாத்தையும் இந்தியாவில நல்ல வசதியா செட்டில் பண்ணி வைச்சிட்டாராம். பாவம் தொண்டர்கள்! இது உள் வீட்டு நெருப்பில வெளிவந்த புகை கண்டியளோ!

**மலையகத் தலைவர்** அமைச்சர் பதவிய ரிசைன் பண்ணின வேகத்தைக் கண்டு மலைச்சுப்போட்டேனுங்கோ. நல்லவேளை, பிறகு அதே வேகத்தில தானே தேடிப்போய் ரிசைன் பண்ணினதை வாபஸ் வாங்கி ரிவைன் (ரீ-வைன்) பண்ணிக்கொண்டார். உள்ளூராட்சித் தேர்தலில மலையகத் தலைவற்ற ஆக்களின்ர பெயர்களை ஆளுந்தரப்பினர் அழிச்சு மாத்திப் போட்டினமெண்டதுதான் ரிசைனுக்கான காரணமெண்டது சரி, ரிவைனுக்கான காரணம் என்னவோ? அந்த ஆறுமுகனுக்குத்தான் வெளிச்சம்!

**இவ்வாரப் பொன் மொழி** கலைஞருக்குச் சொந்தமானது.

**மனிதனுக்குப் புரியவைக்க சொற்களைத் தேடாதீர்கள்; சொற்களைப் புரிந்துகொள்ள மனிதனைத் தேடுங்கள்.**


## உண்மைத் தொடர் 42

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

போரில் ஹிட்லர் கூட்டணிக்கு கிடைத்த தோல்வியோடு அவனுக்கு ஆதரவளித்த அண்டை நாடுகளிலும் பதற்றம் அதிகரித்தது. குறிப்பாக "இத்தாலி விடுதலை இயக்க புரட்சிக்காரர்கள்" நாடு முழுவதிலும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

புரட்சிக்காரர்களால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்ட முசோலினி, தன் மனைவியுடனும், காதலியுடனும் அண்டை நாடான சுவிட்சர்லாந்துக்கு தப்பி ஓட முடிவு செய்தார்.

இரண்டு ராணுவ லாரிகளில் தனது இரண்டு குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.



### படுகொலை

ஆனால், வழியிலேயே அந்த லாரிகளை புரட்சிக்காரர்கள் மடக்கினார்கள். முசோலினியை கைது செய்தார்கள்.

இதைக் கண்ட முசோலினியின் காதலி கிளாரா, அலறிக் கொண்டு, லாரியிலிருந்து குதித்தாள். அவளையும் புரட்சிக் காரர்கள் பிடித்துக் கொண்டனர்.

முசோலினியின் மனைவி லாரிக்குள் பதுங்கிக் கொண்டதால், அவள் புரட்சிக்காரர்களின் கண்ணில் படவில்லை.

இது நடந்தது 1945ம் ஆண்டு ஏப்ரல் 27ந் தேதி.

அன்று, டோங்கோ நகரில் ஒரு அறையில் முசோலினியும் கிளாராவும் அடைத்து வைக்கப்பட்டனர். இரண்டு நாள் கழித்து அவர்களை புரட்சிக்காரர்கள் ஒரு காரில் அழைத்துச் சென்றனர்.

மலைப் பகுதியிலிருந்து கீழே இறங்கியதும், காரை நிறுத்தினார்கள். முசோலினியையும், காதலி கிளாராவையும் கீழே இறங்கச் சொன்னார்கள்.

கீழே இறங்கியதும், இருவரையும் நடுரோட்டில் நிற்க வைத்தார்கள்.

தங்களைச் சுடப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட கிளாரா முசோலினியின் முன்னால் வந்து நின்று, "முதலில் என்னைச் சுடுங்கள்" என்றாள்.

இயந்திரத் துப்பாக்கிகளால் புரட்சிக்காரர்கள் சரமாரியாகச் சுட்டார்கள். இருவர் உடல்களும் குண்டுகளால் துளைக்கப்பட்டு, ரத்தவெள்ளத்தில் மிதந்தன.

முசோலினிக்கு உதவியாக இருந்த வேறு சிலரையும் சுட்டுக் கொன்றார்கள். முசோலினியின் உடலையும், மற்றவர்களின் உடல்களையும் புரட்சிக்காரர்கள் மிலான் நகருக்கு கொண்ட சென்றார்கள். அங்கு விளக்குக் கம்பத்தில் தலை கீழாகக் தொங்க விட்டார்கள்.

அன்று மாலை, உடல்கள் கீழே இறக்கப்பட்டு, அடையாளம் தெரியாத இடத்துக்கு கொண்டு போகப்பட்டு, புதைக்கப்பட்டன.

புதைப்பதற்கு முன், குற்ற இயல் ஆராய்ச்சி நிபுணர்கள் வந்து, முசோலினியின் மண்டை ஓட்டைப் பிளந்து, அவருடைய மூளையை எடுத்துச் சென்று விட்டார்கள், ஆராய்ச்சி செய்வதற்காக!

★★★

30ந் தேதி இரவு 9 மணி.

"இன்று மாலை 4 மணிக்கு இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும் அவர் மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். என்று சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்தது.

ரேடியோச் செய்தியை ஹிட்லர் நேரடியாகக் கேட்டார். முசோலினியின் முடிவு, ஹிட்லருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது.

அன்றிரவு 12 மணி. பெர்லின் நகரம் முற்றிலுமாக ரஷியப் படைகள் வசமாகிவிட்டது என்றும், எந்த நேரத்திலும், சுரங்க மாளிகை தகர்க்கப்படலாம் என்றும், ஹிட்லருக்குத் தகவல் கிடைத்தது.

ஹிட்லரின் முகம் இருண்டது. மௌனமாக எழுந்து, தன் தோழர்களுடன் கை குலுக்கினான். பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து, "நானும் ஈவாவும் ஒன்றாக இறந்து விடப் போகிறோம். நாங்கள் இறந்த பின், எங்கள் உடல்களை ஒரு போர்வையில் சுருட்டி, பெட்ரோல் ஊற்றி எரித்துச் சாம்பலாக்கி விடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டயரிகள், என் உடைகள், என் பேனா, கண்ணாடி முதலிய பொருள்களை சேகரித்து, ஒன்று விடாமல் எரித்து விடுங்கள்." என்று கூறிவிட்டு, மனைவியையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றான்.

அறைக் கதவு சாத்தப்பட்டது. வெகு நேரமாகியும் கதவு திறக்கப் படவில்லை. ஹிட்லரும், ஈவாவும் என்ன ஆனார்கள் என்று வெளியே இருந்தவர்களுக்குத் தெரியவில்லை.

வெளியே நீண்ட நேரம் காத்திருந்த மந்திரிகளும், தளபதிகளும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி:

ஒரு சோபாவில், உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல்.

அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியிலிருந்து புகை வந்து கொண்டிருந்ததால், அவர் சற்று நேரத்துக்கு முன்தான் தன்னைச் சுட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிந்தது. அவருடைய வலது காதுக்கு கீழ் அரை அங்குல அளவுக்கு துவாரம் விழுந்து, அதிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

ஹிட்லர், துப்பாக்கி முனையை வாய்க்குள் வைத்து சுட்டதால் தான், குண்டு காதுக்கு அருகே துளைத்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று தளபதிகள் கருதினார்கள்.

ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப் படத்தை மார்போடு அணைத்தபடி இருந்தது. அந்தப் படம், ஹிட்லரின் தாயாரின் புகைப்படம். தாயின் மீது ஹிட்லர் கொண்டிருந்த பாசத்தை எண்ணி, அவர் நண்பர்கள் கண்ணீர் சிந்தினர்.

ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்தபடி பிணமாகியிருந்தாள், அவருடைய மனைவி ஈவா. வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருநீல "மாக்சி" உடை அணிந்திருந்தாள். அவள் உடல் நீலம் பாய்ந்திருந்தது. எனவே அவள் சயனைடு விஷம் சாப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது.

ஹிட்லர் உடலையும், ஈவா உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப் போர்வையில் சுற்றினார்கள். பிறகு அந்த உடல்களை அந்த அறையிலிருந்து தலைமைச் செயலகத் தோட்டத்திற்கு தூக்கிக் கொண்டு போனார்கள்.

அங்கே, பெட்ரோலையும், எரிவாயுவையும் கொண்டு இரு உடல்களையும் எரித்துச் சாம்பலாக்கினார்கள்.


சில மணி நேரம் கழித்து அங்கு வந்த ரஷ்யப் படையினர் ஹிட்லரை காணாமல் திகைத்துப் போனார்கள்.

அவர் தற்கொலை செய்து கொண்டதும், பிணம் எரிக்கப்பட்டதும் பிறகுதான் தெரிந்தது.

எனினும் ஹிட்லர் சாகவில்லை, தலைமறைவாக இருக்கிறார் என்று நீண்டகாலம் நம்பியவர்கள் ஏராளம்!

**(அடுத்தவாரம் முடியும்)**

# செக்ஸ் டாக்டர் ஸ்டைலில் செக்ஸ் டைரக்டர்!



மும்பை நடிகைகளும், பிரபல மாடல்களும் மிரண்டு போயிருக்கிறார்கள். டாக்டர் பிரகாஷ் விஷயம் வெளிவந்தபோது சென்னையில் பிரபல நடிகைகளும் நடிகர்களும் நடுங்கியது போன்ற ஒரு நிலை. மும்பை ஃபிலிம் டிவிஷனின் தலைமைத் தயாரிப்பாளரான பங்கிம் கபாடியாதான் இப்போதைக்கு அவர்களின் வில்லன்.

கடந்த ஜனவரி 31 ம் தேதி மாலை இவரது வீட்டையும், அலுவல கத்தையும் மத்திய உளவுத் துறையினர் அதிரடி சோதனை செய்தனர். எண்பது லட்ச ரூபாய்க்கான முதலீட்டுப் பத்திரங்களும், இருபத்தி ஆறு லட்ச ரூபாய் ரொக்கப் பணமும் கிடைத்தது. இவரின் மாதச் சம்பளத்தோடு ஒப்பிடுகையில் பத்து மடங்குக்கு மேலிருக்கும் இப்பணம் ஆவணங்கள் நேர்மையான வழியில் வந்திருக்க வாய்ப்பில்லை என்பது உளவுத் துறையின் குற்றச்சாட்டு.

பெப்ரவரி 3ல் தொடங்கி பெப்ரவரி 9ம் தேதி வரை நடக்கும் மும்பை சர்வதேச திரைப்பட விழாவில் இவர் தயாரித்த ஃபிலிம் டிவிஷனுக்காக ஏழு படங்கள் திரையிடப்பட இருக்கின்றன. இந்த திரைப்பட விழா தலைவராகவும் இவர் தான் பொறுப்பேற்றிருந்தார்.

சாதாரண அரசு உயர் அதிகாரியான இவரிடம் எப்படி இவ்வளவு பணம் வந்திருக்கும் என்று அதிகாரிகள் அரண்டு போயிருக்கிறார்கள். இந்நிலையில்தான் கபாடியாவின் இன்னொரு முகம் தெரியவந்திருக்கிறது. செக்ஸ் விஷயத்தில் அவர் கில்லாடியாக இருந்திருக்கிறார். அவரது வீட்டைச் சோதனை போட்டபோது தகவல் தொடர்புத் துறையில் உயர் பதவியில் இருக்கும் ஒரு பெண்மணி எழுதிய ஐம்பதுக்கும் அதிகமான காதல் கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. தவிர, பதினேழு பிரபல பெண் மாடல்களின் நிர்வாண போட்டோ, வீடியோ படக்காட்சிகளும் சிக்கி உள்ளன. அதிலிருந்த படங்களையும், ஆட்களையும் பார்த்தபோது சி.பி.ஐ. அதிகாரிகள் நம்பவே முடியாமல் திகைத்திருக்கிறார்கள். அதிலிருந்ததெல்லாம் முன்னணி நடிகைகள். சூடான போஸ்களில்.. இந்த நிர்வாணப் புகைப்படங்கள், வீடியோ படங்களை கபாடியா வெளிநாட்டிற்கு அனுப்பி பணம் சம்பாதித்திருப்பார். அதுதான் அவரிடம் இவ்வளவு சொத்து இருந்ததற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கிறது உளவுத் துறை. கபாடியாவின் விஷயத்தைக் கிளறக் கிளற பல பாலிவுட் நடிகைகளும்கூட சிக்கலாம் என்று தெரிகிறது. அதனால் இவ்வழக்கை மும்பை போலீஸ் வசம் ஒப்படைக்கப் போவதாக சி.பி.ஐ. அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

"அந்த ஆள் இங்கு வந்ததுலேர்ந்து கூட வேல பார்க்குற பொம்பளைங்ககிட்ட தொட்டுத்தான் பேசுவாரு. சில சமயம் செக்ஸ் ஜோக்கடிப்பாரு. பெரிய பதவியில இருந்ததால பல சினிமாக்காரங்க இவருக்கு நெருக்கம். ஆனா இந்த கேஸ் போலீஸ் கைக்குப் போச்சுன்னா விஷயத்தை வெளியே விடாம ரகசியமாகத்தான் ஹாண்டில் பண்ணுவாங்க. ஏன்னா, கபாடியா சாரோட செல்வாக்கு அதிகம்" என்றார், பெட்டர் ரோட்டிலுள்ள ஃபிலிம் டிவிஷன் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர். யாருடைய படம் வெளியாகும்? எப்போது கபாடியா படம் எடுத்திருப்பார்? என்று தெரியாமல் பாலிவுட்காரர்கள் தீவிர யோசனையில் உள்ளார்கள்.

இவரின் ஙகது சம்பவம் பாலிவுட் காரர்களை மட்டுமல்லாது, அரசியல் வாதிகளையும் பயமுறுத்தியுள்ளது. மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சரான சுஷ்மா ஸ்வராஜும்கூட சில விவரங்களுக்காக அதிகாரிகளால் அணுகப்படலாம் என்றே தெரிகிறது. இன்னும் கொஞ்ச நாட்களுக்கு மும்பை படவுலகில் திக்... திக்தான்.

# அழிந்தும் அழியாத... கனவுக் கன்னி!



ஹாலிவுட்டைப் பல கவர்ச்சிப் புயல்கள் அசைத்துப் பார்த்ததுண்டு.க்ரேடா கார்போ, ஜீன் ஹார்லோ, மே வெஸ்ட் ஆகியோர் சில உதாரணங்கள். ஆனால் அத்தனை பேரையும் விட இன்றுவரை 'கவர்ச்சிப் பேரழகியாய்' விளங்குபவர் மர்லின் மன்றோதான்.

இன்னமும் மர்லின் மன்றோவின் பெயரில் அமைக்கப்பட்ட ரசிகர் மன்றங்கள் கலைக்கப்படவில்லை. இன்றும் உலகெங்கிலிருந்தும் அவருக்கு ஆயிரக் கணக்கான கடிதங்கள் எழுதப்படுகின்றன. இரு மாதங்களுக்கு முன் ஏலத்தில் விடப்பட்ட அவரது ஷூக்களும் கையெழுத்துப் பிரதியும் எக்கச்சக்கமான தொகைக்கு விலை போயிருக்கின்றன.

ஒருவேளை இளம் வயதிலேயே இறந்ததுகூட அவரது இறவாமைக்கும் காரணமாக இருக்கலாம்!

முகத்தில் அப்பாவித்தனம், உடலில் செக்ஸ் அப்பீல், நகைச்சுவைப் பாத்திரங்களையும் உணர்ந்து கையாளும் லாவகம் இவற்றால் அவர் பெற்றது திரையுலக அங்கீகாரம். ஆனால் அன்புக்காக இவர் அடைந்த ஏக்கம் (தன் தாய்க்குத் தவறான முறையில் பிறந்தவர் இவர். மர்லின் மன்றோவின் தாய் தன் வாழ்க்கையில் பெரும்பகுதியை மனநல விடுதியிலேயே கழித்தவர்), அந்த ஏக்கத்தில் தன் பாதுகாப்பு அரண்களையெல்லாம் அழித்துக் கொண்ட குணம்- இவைதான் அவரை சரித்திரமாக்கியது.

நார்மே ஜீன் பேகர் (அதுதான் மர்லின் மன்றோவின் இயற்பெயர்) சிறு வயதில் பல அனாதை இல்லங்களில் தங்கியிருக்கிறார். பிறகு ஒரு தூரத்து சொந்தமான அத்தையுடன் சேரி-வாசம். தன் பதினாறாவது வயதில் ஜேம்ஸ் என்ற அடுத்த வீட்டு இளைஞனைக் கல்யாணம் செய்து கொண்டார். அவன் இவள் குறித்துக் கவலைப்படாமல் கடற்படையில் சேர்ந்து விட்டான்.

அப்போது டேவிட் கானோவர் என்ற புகைப்படக்காரரின் கண்களில் மர்லின் சிக்க, விளம்பரத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு திரையுலகம். அடுத்தடுத்து மூவரைத் திருமணம் செய்து கொண்டார். மூன்றாவது நபரையும் கழற்றிவிட்டபோது, "இன்னும் எவ்வளவு பேரைக் கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டபோது மர்லின் மன்றோ கூறிய பதில்- "நான் கணக்கில் ரொம்ப வீக்"!

காலண்டர் ஒன்றில் அவர் நிர்வாண போஸ் கொடுத்ததை அறிந்து கொண்ட ஒரு நிருபர் "நிஜமாகவே நீங்கள் அப்போது எதுவுமே போட்டுக் கொண்டிருக்கவில்லையா?" என்று கேட்க, "யார் சொன்னது போட்டுக் கொண்டிருந்ததாகத்தான் நினைவு-ரேடியோவை!" என்றாராம் அப்பாவித்தனமாக!

நடிகர் ஜாக் லெமன் மற்றும் பாபி கென்னடி ஆகியோருடன் அவர் கொண்ட காதல் உலகறிந்தது. போதை மருந்து, குடி ஆகியவற்றை அவர் நாட, திரையுலகம் அவரை ஒதுக்கத் தொடங்கியது. நிராகரிப்பைத் தாங்க முடியாது துடித்தார் அவர். 'சம்திங்காட்ட சிவ்' என்ற படத்திற்கு 32 நாட்கள் கால்ஷீட் கொடுத்து விட்டு வெறும் 12 நாட்களே பணியாற்றியதில் கோபமடைந்த தயாரிப்பாளர் அவர் மீது 750 ஆயிரம் டாலர் நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடுத்தார்.

நண்பர்கள் எவருமின்றி, திரைப்பட வாய்ப்புமின்றி தூக்க மாத்திரைகளை அருந்தித் தற்கொலை செய்து கொண்டார் மர்லின் மன்றோ (கொலை என்ற சந்தேகமும் இன்னமும் தொடருகிறது).

ஆனால் இன்றும் உலகம் அவரது காதல் வலையில் சிக்கி இருக்கிறது.




# காதல் என்றால் என்ன அர்த்தம்?

**ஃபோன்** காதல். லெட்டர் காதல். பார்த்துக்காதல். பார்க்காமல் காதல். முக்கோணக் காதல். ஒரு தலைக் காதல். இன்டர்நெட் காதல் என்று வகை வகையான காதலை மைய மாகக் கொண்ட திரைப்படங்கள் காதலுக்குப் பல்வேறு விளக்கங் களைக் கொடுத்திருக்கின்றன.




திரைப்படங்களை விடுங்கள் மக்கள் என்ன சொல்கிறார்கள்.

காதல் என்பது வயது, சூழல் இரண்டையும் பொறுத்து ஒவ்வொரு வருக்கும் வேறுவேறாக அர்த்தம் கொடுக்கும் என்னைப் பொறுத்த வரை காதல் என்பது மனசின் பகிர்ந்து கொள்ளல். அதாவது அனுப வங்களையும் வழிகளையும் ஒரு ஆணும் பெண்ணும் பகிர்ந்துகொள் வது.

இருவரும் ஒருவர் தோளில் மற்றவர் சாய்ந்துகொள்ள உதவும். இதமான உணர்வு அது என்கிறார் தனியார் நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட கணக்காளராகப் பணி புரியும் 57 வயதான பிரமிளா.

தனியார் விளம்பர நிறுவனம் ஒன்றில் விளம்பர முகாமையாளரா கப் பணிபுரியும் சத்தியாவைப் பொறுத்தவரையில் காதல் என்பது ஒரு வானவில். "ஐயோ... அது ஒரு வித 'கலர் புல்'லான சந்தோஷம்...! அப் படியே இரண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டே இருக்கணும் போல, அர்த்தமே இல்லாம பேசிக் கிட்டே இருக்கணும் போல தோணும்," என்கிறார் சத்யா.

காதலன் எப்படி இருக்கவேண்டு மாம்? "ம.. ம...! உருக்கத்தில் கொஞ்சம் அஜித். துருதுருப்பில் கொஞ்சம் விஜய். கியூமரில் கொஞ்சம் கார்த்திக். லுக்கில் கொஞ்சம் மாதவன். இப்படி எல்லாம் கலந்த கலவையாய் ஒரு சூப்பர் ஹீரோ வேண்டும்!..." என் கிறார் சத்யா.

விஜிக்கு?

"லுக்கையும் வயசையும் விட, அவன் தன்மேல் நிஜமாகவே அக்கறை உள்ள வனா, பிரெண்லி ஆனவனா, படபடப் பின்றி பிரச்சனைகளை மெச்சூர்டா கப் புரிந்துகொள்கிறவனா இருக்கிற துதான் என் போன்ற பெண்களைப் பொறுத்த வரை முக்கியம்!" என் கிறார் விஜி.

என் கணவர் தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் அதிகாரியாக இருக் கிறார். அவருக்கும் என்னைப் போலவே 48 வயது. ஆனால் முன் தலை வழுக்கை விழுந்து சின்னத் தொப்பையுடன் ஆளும் குள்ளமாக வேதான் இருப்பார். நானோ ஒரு சாயலில் நடிகை ஜெயப்பிரதா போல இருக்கிறேன் என்று என் தோழிகள் சொல்வதுண்டு. நானும் அவரும் சேர்ந்து நடந்தால் உருவ வேற்றுமை பலர் கண்களை உறுத்தத்தான் செய் கிறது. ஆனால் என் கணவர் என்மேல் வைத்திருக்கும் அந்த அக்கறை போல் என் பிரச்சனைகளை அழகாகப் புரிந்து கொள்வது போல் வேறு யாரால் புரிந்து கொள்ள முடியும்? எங்கள் காதல் வெள்ளி விழாக் கொண்டாடிய பின்னும், திருமண உறவு இப்படி திருப்தியான காத லுடன் இருக்கிறது என்றால் நான் கொடுத்து வைத்திருக்கிறேன் என்றே அர்த்தம் என்கிறார் விஜி.

"காதல் என்பது உடம்பின் இர சாயனம். புல் தானாக முளைக் கிறது. தெருவோரங்களில் அதை யாரும் முயன்று பயிர் செய்வதில்லை. அதுபோல உடம்பும் மனசும் ஒரு குறிப்பிட்ட பருவத்துக்கு வந்ததன் சமிக்ஞைதான் காதல்" என்று சொல் லும் எழுத்தாளர் பிரபஞ்சன். அதை இன்னும் விளக்குகிறார்.

"உணவு, அமைதி, பாதுகாப்பான சூழ்நிலை போன்ற வசதிகள் இருந் தால் மட்டுமே காதலிக்க முடியும். அதோடு காதலின் ஆரம்பத்தில் ஒரு பரவசம் உண்டு. உடம்பும், மூளையும், ரசாயனக் கொந்தளிப்புகளும் காதலர்களை ஆட்டுவிக்கும். இந்த வெள்ளம் வடிய கொஞ்ச நாள் ஆகும். அதன் பிறகே முழுமையான காதல் சாத்தியப்படும்" என்கிறார்.

"ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, கஷ்ட நஷ்டத்தை உணர்ந்து, இருவரும் வாழ்வதுதான் காதல். காதலில் பொறாமை கிடையாது. கோபம் கிடையாது. சண்டை கிடையாது. சகிப்புத் தன்மை அதிகம்" தத்துவ ரீதியாக காதலைப் பார்க்கிறார் 62 வயதான கலை மகள்.

"ஒரு தாய் அல்லது தந்தை தன் குழந்தைகளிடம் காட்டும் அன்பு அல்லது ஒரு கணவன் தன் மனைவி யிடம் காட்டும் பரிவு அல்லது குழந்தை கள் பெற்றோரிடம் காட்டும் மரி யாதைதான் காதல்" என்கிறார் 35 வயதான குடும்பத் தலைவி சசிகலா.

காதல் விஷயத்தில் கல்லூரி மாண விகளுக்குள் பலவித கருத்துக்கள் இருக்கின்றன. "காதல் ஒரு கௌர வம்... எனக்கு ஒரு காதலன் இல் லேன்னா என் ஃப்ரெண்ட்ஸே என்னை மதிக்க மாட்டாங்க..." என்று சொல்லும் ப்ரீத்தியிலிருந்து "லவ் பண்றது ஸ்வீட் பாய்சன் மாதிரி... காதலிக்கிற வரை க்கும் சந்தோஷமா இருக்கும். அந்த ஃபீலிங்ஸ் எப்படி இருக்கும்னு ஒத்தை வரியில் சொல்ல முடியாது. பிரியிற போது தான் வலி தெரியும்..." என்று உருகி கவிதை எழுதும் சுபோதினி வரை இருக்கிறார்கள்.

"காதலிக்கும்போது ஏற்படுற சந் தோஷத்துக்காகச் செத்துப்போயிட லாம். அவ்ளோ பரவசமா இருக்கும். காதலிக்கும்போது ஒளிவு மறைவு ரெண்டு பேர்க்கிட்டயும் இருக்கக் கூடாது. கல்யாணம் பண்ணிக்கிட்டா கணவனிடம் எவ்ளோ உரிமையோட இருக்கிறோமோ அதே மாதிரி லவ் பண்றப்பவும் இருக்கணும்" என்று அனுபவித்துச் சொல்கிறார் றினோ.

"காதல் விஷயத்தைப் பொறுத்த வரை நம் நாட்டில் தாய், தந்தை, அரசு, சட்டங்கள், சம்பிரதாயங்கள் என்று அத்தனை திசைகளிலும் இருந் தும் நிமிஷத்துக்கு நிமிஷம் வன்முறை கிளம்புகிறது. அதனால், இப்படி ஒடுக்கப்படும் வன்முறைக்கு எதிர கவே காதலும் மலர்கிறது. பையன் களுடன் சேராதே என்று ஒரு அம்மா மகளிடம் சொல்லச் சொல்ல. மகள் சீக்கிரமே காதலிப்பாள்! அதனால் தான் இங்கே காதலிப்பவர்கள் ஓடிப் போகிறார்கள். இந்த சமூக வன்முறை யிலிருந்து அவர்கள் தப்பிக்கத்தான் ஓடுகிறார்கள்!" என்று யோசிக்க வைக் கிறார் பிரபஞ்சன்.

முகம் காட்டிய அகத்தின் அழகை பவுடர்களும் கிரீமும் மறைத்துக் கொண்டதால், இன்றைய இளசுகளில் ஒருவரின் மனதை மற்றவர் புரிந்துகொள்வதில் பெரும் சிக்கல் உருவாகிவிட்டது போலும். காதலுக்கான சிக்னலை இப்போதெல்லாம் அவர்கள் அணியும் உடைகளின் மூலமே தர ஆரம்பித்து விட்டார்கள்! பொதுவாக, இது காதலர்க்ள ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்ளும் சிக்னல் என்றாலும் வாலன்டைன் தினத்தன்று (பிப்ரவரி-14) இது பொதுமக்கள் (மற்ற இளைஞர்கள், இளைஞிகள்) அனைவருக்குமான அறிவிப்பாக இருக்கும்! அது சரி... என்ன கலர் உடைக்கு என்ன அர்த்தமாம்?

**மஞ்சள் நிறம்** : நான் ஏற்கெனவே காதல்ல விழுந்தாச்சு... டோண்ட் டிஸ்டர்ப் மீ!

**பச்சை நிறம்** : ம்ம்...! நான் ரெடி! தகுதியானவர்கள் லவ் அப்ளிகேஷனோடு அணுகலாம்.

**சிவப்பு நிறம்** : ஏய் ஜாக்கிரதை... இனிமே காதல் கீதல்னு சொல்லிக்கிட்டு என்பின்னாலே அலையாதே!

**பிங்க் நிறம்** : சரி சரி... உன் காதலை நான் ஏத்துக்கிட்டேன். ஐ லவ் யூ!

**கறுப்பு நிறம்** : ஹும்... ஹும்...! லவ் ஃபெயிலியராயிடுச்சு! விடுங்க.. நான் கொஞ்சம் அழணும்!

**நீல நிறம்** : ஹைய்யா.....! என் காதலுக்கு அந்தப் பக்கமும் ஓ.கே. கிடைச் சாச்சு!

(ஐயோ... நகருங்க... நகருங்க..! நான் முதல்ல என் பச்சைக் கலர் சுடிதார்ல இருந்து வெள்ளைக் கலருக்கு மாறணும். அப்பாடி வெள்ளைக் கலர் உடுத்தினாத்தான் நான் எந்த சேதியும் சொல்லலைன்னு அர்த்தமாம்.

# உங்களால் காதலிக்க முடியுமா?

"**இ**ந்தப் பெரிசுகளுக்கு நம் ஃபீலிங்ஸ் பத்தி என்ன தெரியும்?" என்று பெற்றோர் குறித்து அலுத்துக் கொண்டதுண்டா? வாலன்டைன் வாழ்த்து அட்டைகளை டஜன் கணக்கில் வாங்குபவரா நீங்கள்

கீழே உள்ள பதினாறு கேள்வி களுக்கு பதிலளியுங்கள். உங்களால் காதலிக்க முடியுமா என்று தெரிந்து விடும்.

1. "ஐ லவ் யூ" என்று யாராவது கூறினால் உடனடியாக "நானும் தான் என்று சொல்வீர்களா?

2. அமீர்கான் அல்லது சல்மான் கான் அல்லது ஷாருக்கானின் முக- ஜாடையில் கொஞ்சமாவது உங்களுக்கு உண்டா? (ஏதோ ஒரு 'கான்' தானே என்கிற நினைப்பில் அம் ஜத்கான் ரேஞ்சுக்குப் போய் விடவேண்டாம்.)

3. வாலன்டைன் வாழ்த்து அட்டைகளை டஜன் கணக்கில் வாங்குபவரா நீங்கள்?

4. காலேஜை 'கட்டடித்து விட்டு சினிமாபோக வேண்டும் என்ற தீர்மானமான முடிவு உங்களுக்கு உண்டா?

5. குறைந்தபட்சம் ஒரு 'மொபெட்'டுக்காவது நீங்கள் உரிமையாளரா?

6. பண்பாடு என்றெல்லாம் யாராவது சொன்னால் 'புல்ஷிட். இது உலக கிராமம்' என்பீர்களா?

7. காதலி வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே கடற்கரையில் உள்ள படகு மறைவு ஒன்றை ரிசர்வ் செய்து வைத்துக் கொள்ளும் பொறுமை உண்டா?

8. தமிழ் சேக்கிழாராகவும் இருக் கக்கூடாது. ஆங்கிலத்தில் பீட்டராகவும் இருக்கக்கூடாது. தடங்கலற்ற தமிங்கி லீஷ் வருமா உங்களுக்கு?

9. பொரும்பாலான நேரம் வீட்டுக்கு வெளியில்தான் சுற்றுவீர்களா?

10. பத்து பைசா சம்பாதிக்க வழி யில்லாவிட்டாலும் "நான் ஒரு சுதந் திரப் பறவை" என்பது போன்ற வசனங் களை வாரிவிடத் தெரியுமா உங்களுக்கு?

11. நிறைய நோட்டுக்களை கைவசம் வைத்திருப்பதுண்டா? (நாஸிக் நோட் டுக்கள்)

12. சர்தார்ஜி ஜோக்குகள்-அவற் றிலும் குறிப்பாக 'ஏ' ஜோக்ஸ் நிறைய ஸ்டொக் உண்டா?

13. "இந்தப் பெரிசுகளுக்கு நம் ஃபீலிங்ஸ் பத்தி என்ன தெரியும்?" என்று பெற்றோர் குறித்து அலுத்துக் கொண்டதுண்டா?

14. நெட்டில் 'சாட்' செய்வீர்களா? அல்லது குறைந்தது அப்படி சொல்லிக் கொள்வீர்களா?



15. டிஸ்கொத்தேவுக்குப் போனால் உங்கள் காதலி உங்க ளோடு மட்டும்தான் இணைந்து ஆடவேண்டும் என்று எதிர் பார்க்க மாட்டீர்கள் இல்லையா?

16. தடகள வீரரா? (ஓடிப் போக சௌகரியம்)

ஓ.கே. எல்லா கேள்விகளுக் கும் பதிலளித்து வீட்டீர்கள்? இதில் எத்தனைக்கும் ஆமாம் போட்டீர்கள்? குறைந்தபட்சம் பன்னிரண்டு கேள்விகளுக்கா வது போட்டால் உங்களால் காதல் செய்ய இயலும்.

இல்லை யென்றால் வேடிக் கைப் பார்த்துக்கொண்டு கல்லறை ஓட்ட வேண்டியது தான்.

# பூக்களால் ஒரு சேதி...

**த**ன் காதலை காதலன் அல்லது காதலிக்குத் தெரியப்படுத்தும் சிறப்புமிக்க ஒரு தினம்- வாலன்டைன்ஸ் டே...!

காதலைப் பூக்களோடு சொல்வது என்பது நம் முன்னோருக்கு முன்னோர் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் வாச னையான விஷயம்! அதிலும ரோஜாக் களுக்கும் காதலுக்கும் மிகவும் அதிகப் பொருத்தம் உண்டு!

ஒற்றை ரோஜாவோ அல்லது ஒரு கொத்து ரோஜாவோ ஏந்தி நின்று "ஐ லவ் யூ" சொன்னதெல்லாம் அந்தக் காலம். இப்போது அழகான இதய வடிவ 'பொக் கே'க்களே காதலர்களுக்குக் கிடைக் கின்றன. அநேகமாக எல்லா பெரிய நக ரங்களிலும் உள்ள பொக்கே கடைகளில் வாலன்டைன்ஸ் தினத்துக்கான இந்த ஸ்பெஷல் இதய வடிவ பொக்கேக்கள் கிடைக்கின்றன.

"ப்பூ! இதென்ன பிர மாதம்... ரோஜாப்பூ மட்டும் வாங்கிவாங்க..! இதைவிட இன்னும் அழகான டைப்பில் காதல் பொக்கேக்களை நாங் களே தயாரிச்சுக்கிறோம்!" என்று கைவினைக் கலைகளில் தேர்ச்சி பெற்ற நம் சிநேகிதி களில் பலர்கூட சொல்லக் கூடும்.

காதல் சின்னமான சிவப்பு ரோஜாக்களினால் அழகுற வரி சைப்படுத்தப்பட்டிருக்கும் இதய வடிவ பொக்கே. கடைகளில் ஒவ்வொரு விலைகளில் கிடைக்கின்றது! குழந்தை உள் ளம் கொண்ட சில காதலர் களுக்கு கூடுதல் எ.:.பெக்டுக் காக இதய வடிவ பொக்கோ யுடன் அழகான டெடிபியரை யும் பொருத்தி வைத்துத் தர லாம். தரச்சொல்லி விற் கிறார்கள்!



பூங்கொத்துடன் இதயவடிவ கேக்கை யும் சேர்த்துக் கொடுக்கும்போது காதலி களிடமிருந்து காதலர்கள் இலவச முத்தம் பெறக்கூட வாய்ப்பிருக்கிறது.

இதய வடிவ பலூனை பூங்கொத்துடன் சேர்த்துக் கொடுத்து, ஜோடியாக சந் தோஷ வானில் பறக்கவும் செய்கிறார்கள் சில காதலர்கள்! பலூனுக்குப் பதில் இதய வடிவ குஷனைக்கூட வைத்துக் கொள்ள லாம்!

"சேச்சே! ரெடிமேடாக கடை களிலேயே வைத்துத் தரும் இந்தக் குஷன், பலூன். கேக் சமாச்சாரம் எல்லாம் வேண் டாம்... நான் ஆசையோடு வாங்கிக் கொண்டு வந்த பரிசைத்தான் என் காதலன் அல்லது காதலிக்குக் கொடுப்பேன்..." என்கிறீர்களா!

கவலையே வேண்டாம். அந்தப் பரி சைக் கையோடு கொண்டு வந்து, இந்தப் பூக்கடைகளில் கொடுத்துவிட்டால், பரிசைச் சுற்றிப் பூக்களைப் பின்னி அட்ட காசமான பொக்கேயும் ரெடியாகிவிடும்!

இதயங்கள் உராயும் தினத்தன்று லேசாக இதயம் குலுங்க பூக்களைப் பின்னி அட்டகாசமாக பொக்கேயும் ரெடியாகி விடும்!

காதலர் தினத்தன்று காதலின் சின்ன மான சிவப்பு ரோஜாக்களுக்கு இருக்கும் மவுசே தனிதான், ஆனை விலை குதிரை விலை என்பார்களே அந்தக் கதைதான் சிவப்பு ரோஜாக்களுக்கும்! எனவே பர்ஸை வழக்கத்தைவிட சற்றே கனமாக எடுத்து வருவது பெட்டர்!

காதலர் தினம் என்று மட்டுமல்ல குழந்தை பிறப்பு. வரவேற்பு. பிறந்தநாள். திருமணம் தவிர உங்கள் நண்பருக்கு விளையாட்டாகப் பரிசளிக்க விரும்பினால் கூட அந்தத் தருணத்தைப பிரதிபலிக்கும் வகையில் பிரத்தியேக டிசைனில் பொக்கேக்கள் இப்போது கிடைக் கின்றன.

"ஒருமுறை அப்படித்தான். 'தோழிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கு ஒரு பூச்செண்டு கொடுக்கத் தயார் செய்யுங்கள்' என்று எங்களுக்கு ஒரு போன்கால்... நாங்கள் சிறு ஐடியாவுடன் பூச்செண்டைத் தயார் செய்து அதன் நடுவே ஜான்சன் பேபி சோப். பவுடர், எண்ணெய் என்று ஒரு குட்டி கி.:.ப்ட் பேக்கையே வைத்துக் கொடுத் தோம். வாடிக்கையாளருக்கு ஒரே சந்தோ ஷம்...!

நீங்கள் ஒரு பேனா பரிசளித்தாலும் அதை மலர்களுடன் வைத்துக் கொடுத்துப் பாருங்கள். அந்த மனமலர்ச்சியே தனி தான்!" என்கிறார்கள் காதல் நிபுணர் கள்.

# எங்கும் சிம்பு எதிலும் சிம்பு

தமிழ் திரையுலகில் கடந்த பல ஆண்டுகளாக சகலகலா வல்லவனாக வலம் வந்து கொண்டிருக்கும் டி.ராஜேந்திரனின் மூத்த புதல்வன் சிலம்பரசன் கதாநாயகனாக நடிக்கும் 'காதல் அழிவதில்லை' என்ற படம் மிக வேகமாக திரைக்கு வரத் தயாராகிக் கொண்டிருக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் 'லிட்டில் சூப்பர் ஸ்டார்' ஆக ரசிகர்களின் உள்ளங்களில் மகிழ்ச்சிப் பூக்களை வீசிய சிலம்பரசன் கதாநாயகனாக அறிமுகம் ஆகும் 'காதல் அழிவதில்லை' படத்தின் நாயகியாக புதுமுகம் சார்மி நடிக்கின்றார்.



மந்த்ரா

'காதல் அழிவதில்லை' படத்தின் தொடக்க விழாவின் போது பல திரையுலக நட்சத்திரங்களும், டெக்னீஷியன்களும் மற்றும் டி.ஆர்., சிலம்பரசன் ஆகியோரின் ரசிகர்கள், பூங்கா நகர் தொகுதி மக்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டு சிம்புவை வாழ்த்தினர். விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கி கௌரவித்தார் டி.ஆர்.

முதல் காட்சியை ஒரே தடவையில் நடித்து முடித்த சிலம்பரசனின் போஸ்டர்களை ஒரு இரவிலேயே சென்னையின் அனைத்து சுவர்களிலும் ஒட்டி முடித்தனர் சிலம்பரசனின் ரசிகர்கள். எனவே, மறுநாள் சென்னை முழுவதுமே சிம்பு மயமாக காட்சியளித்தது.

ஒரு காலத்தில் லிட்டில் சூப்பர் ஸ்டாராக 'சபாஷ் பாபு', 'இது ஒரு வசந்த கீதம்' போன்ற படங்களின் மூலம் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்திய சிம்பு கதாநாயகனாக களத்தில் குதித்துள்ளார். அவரின் வருகை நல்வரவாகட்டும்.

# கோழிக் கூண்டிற்குள் மாதவன்

சைவ உணவின் அவசியத்தை வலியுறுத்தி சென்னையில் நேற்று நடிகர் மாதவன் அரை மணி நேரம் கோழிக்கூண்டுக்குள் அடைபட்டு இருந்தார்.

பீட்டா என்னும் சர்வதேச அமைப்பு சைவ உணவின் அவசியத்தையும், மனிதர்களின் இறைச்சித் தேவைக்காக ஆடு, மாடு, கோழி இன்னும் பல பிராணிகள் அன்றாடம் வெட்டப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பிரச்சாரம் செய்து வருகிறது.

இந்த அமைப்பின் இந்திய பிரிவு, நடிகர் மாதவனை வைத்து சைவ உணவு சாப்பிடுவதன் அவசியத்தை வலியுறுத்தும் புகைப்படங்களை எடுக்க விரும்பியது. இதற்கு மாதவனும் ஒப்புக்கொண்டார்.

அதன்படி அண்மையில் சென்னை தாஜ் கோரமண்டல் ஓட்டலில் உள்ள வரவேற்பு மண்டபத்திற்கு மாதவன் வந்தார். அவரை அடைப்பதற்கென்றே 4 அடி உயரம், 3 அடி நீளம், 3 அடி அகலம் கொண்ட கம்பிபோட்ட கோழிக்கூண்டு ஒன்று அந்த அறையில் தயாராக இருந்தது. அதில் அவரை உள்ளே வைத்து அடைத்தார்கள். பிரபல புகைப்பட கலைஞர் அதுல் கஸ்பேகர் மாதவனை பலவித கோணங்களில் புகைப்படம் பிடித்து தள்ளினார்.

அரை மணி நேரத்திற்கும் மேலாக மாதவன் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தார். அப்போது, அவர் கோழிகள் பரிதவிப்பதை போன்று பாவனை செய்து காட்டினார். அதன் பிறகு வெளியே வந்த அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில்,

இன்று உணவுக்காக கொல்லப்படும் கோழிகள் கோழிப்பண்ணையில் மோசமான நிலையில் அடைத்து வைக்கப்படுகின்றன. அவைகளுக்கு மயக்க மருந்து தராமலே அலகு மற்றும் நகங்கள் நீக்கப்படுகின்றன. மரபு ரீதியை மீறி கோழிகளை இனப்பெருக்கம் செய்கிறார்கள். இதனால் கோழிகளுக்கு மூச்சுத் திணறல், அழுத்தம், இதயநோய், நீர்ச்சத்து இழப்பு போன்றவை ஏற்படுகின்றன. இந்த சூழ்நிலையிலேயே அவை இறைச்சி கடைகளில் கொல்லப்படுகின்றன.

இத்தகைய நிலைமை கோழிகளுக்கு மட்டுமல்ல. எந்த பிராணிகளுக்கும் ஏற்படக்கூடாது. சைவ உணவை கடைப்பிடிப்பதன் மூலம்தான் இது சாத்தியமாகும். எனவேதான் சிரமத்தையும் பாராமல் கூண்டுக்குள் அரை மணி நேரம் அடைபட்டுக் கிடந்தேன் என்றார்.

ஊருக்கு உபதேசம் செய்கிறீர்கள். நீங்கள் மாமிசம் உண்பதில்லையா? என்று கேட்டபோது படத்தில் நடிப்புக்காக கூட அசைவத்தை தொட்டதில்லை. அதனால்தான் என்னை இதில் நடிக்க கேட்டவுடன் சம்மதம் தெரிவித்தேன். இதில் நடிப்பதற்காக சம்பளம் எதுவும் வாங்கவில்லை என்று உற்சாகமாக பதிலளித்தார்.

என்னதான் சொல்லியபோதும் உண்மையை அறிவது என்றால் அவரது மனைவியுடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும்.

தயாரிப்பு:
ப. ராஜ், அர்ஹாம் பாரூக்

# காதோடு …

இடையழகி நடிகையும் தங்…
பேட்டி புத்தாண்டு தினத்தன்று …
புக்காரர் நம்மட அரசியல் …
சேர்த்து தடா போட்டு விட்ட…
சென்று தொலைக்காட்சி நிறுவ…
திற்கு முன்பு பெற்ற பேட்டி என்…
அடைத்து விட்டார்களாம்.

ஆங்கிலத்தில் அரசன் என்…
வர்கள் புலம்பிக் கொண்டிருக்கிற…
தாரேன் என்று நடப்பு நடிகை …
கொடுத்து விட்டார்களாம். ஆனா…
அண்ணனை கேள் அம்மாவை…
பொறுத்துப் பார்த்த தயாரிப்பா…
எண்ணியுள்ளார்களாம்.

லைலாவின் காதலர் பெயர்…
இரண்டெழுத்துப் படம் ஆகியவற்றி…
பிரயோகித்துள்ளார்களாம். தாய்க்கு…
தண்டனையா..? என்று தடா சட்ட…
குமுறுகிறார்களாம்..

தற்போது முதலிடத்தில் இரு…
எல்லாம் மட்டம் தட்டிவிடுகிறா…
மட்டந்தட்டி சொந்த டயலாக்கை …
நடிகர் 'நாக்கை அடக்கி வாசி…
எச்சரித்துள்ளார். இதை கேள்வி…
பாராட்டுகிறார்களாம். அட…

'சைலன்'ஸுக்கு எதி…
மறுபெயர் கொண்ட…
நடிகருடன் நடித்தா…
'தலைமுறை' நடிகை…
இருவரும் டும் டு…
கொட்ட இருப்பதா…

'சப்தம்'போட்டு…
சொல்கிறார் பட…
தின் இயக்குந…
எல்லாமே சம்தி…
தராத கோப…
தானாம் நடி…
மேல்.

பிர…
* …
என்ப…
* வி…
'செக்ஸ் ப…
* 'புன…
வருத்தப்படு…
* 'நதி' பட…
பெயர்களை சூட…
* நடிகை செ…
மாற்றியமைத்துள்ள…
* ஆர்.கே.செல்…



சிம்ரன்

# காதலர் தினத்தை யொட்டி நட்சத்திரங்களின் பார்வையில்



மீனா

பெப்ரவரி 14- காதலர்களால் காதலர்களுக்காகக் கொண்டாடப்படும் காதலர் தினம் இன்ப வானில் சிறகடித்துப் பறக்கும் காதல் நெஞ்சங்களின் பெருநாளான காதலர் தினத்தை யொட்டி சினிமாவில் மின்னும் நட்சத்திரங்கள் என்ன சொல்கின்றன...?

**சூப்பர் ஸ்டார் ரஜனியின் உள்ளத்திலிருந்து:-**
காதல் என்கிறது சேர்ந்து வாழ்கிற வாழ்க்கையில மட்டும் இல்லை. உள்ளத்தில் நினைச்சுக் கொண்டு தனிமையில வாழ்கிற வாழ்க்கையும் காதல்தான்.

**உலக நாயகனின் பார்வையில்:-**
இதயத்தின் சுவாசத்தால் பூப்பது தான் காதல் அது எந்த சிறைக்குள்ளும் அடைபட்டுக் கிடக்க சம்மதிக்காது.

**இளைய தளபதி விஜய் இயம்புவது:-** கண்களால் பேசப்படும் வார்த்தைகளின் மொழி பெயர்ப்புத் தான் காதல். ஆண்டாண்டு காலமாக மரணிக்காது உயிர் வாழும் ஒரே உணர்வு காதல்தான்.

**அல்டிமேட் ஸ்டார் அஜித்திடமிருந்து:-**
அமுங்கிக் கிடக்கும் வயசும் உணர்வும் விழித்துக் கொள்ளும் போது காதல் உருவெடுக்கிறது. காதல் வயப்பட்ட நெஞ்சங்கள் சிறகே இல்லாமல் வானில் பறக்கின்றன.

**காதல் இளவரசன் பிரசாந்தின் இதயத்தில் இருந்து:-**
இதயங்களை இணைத்து வைக்க உறவுப் பாலமாக காதல் பங்காற்றுகிறது. இது இதயங்களுக்கு வலியை ஏற்படுத்தினாலும் அதனை தடவிக் கொடுக்கும் சக்தியையும் கொண்டுள்ளது.

**இடையழகி சிம்ரன் தடை மீறிச் சொல்வது:-**
வாழ்க்கையை கேள்விக் குறியாக்குவதும் காதல் தான். வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுப்பதும் காதல் தான். புனிதமான இதயங்களினால் பரிமாறிக்கொள்ளப்படும் காதல் வாழ்வை உச்சிக்கே இட்டுச் செல்லும்.

**கண்ணழகி மீனாவின் மனத்தில் இருந்து:-** நல்ல நட்பு, அந்த இருவருக்கும் இடையேயான புரிந்துணர்வு, நம்பிக்கை என்ற காரணங்களோடு நட்பையும் தாண்டிச் செல்லும் போது காதலப் பூ மலர்கிறது.

**ரோஜா மனந்திறந்து சொல்வது:-**
கட்டியணைப்பதோடும், முத்தமிடுவதோடும் கை கழுவி விடக்கூடியதல்ல காதல். காதலன் காதலியையும் காதலி காதலனையும் நேசிப்பதோடு நின்று விடாது காதலையும் நேசியுங்கள் காதல் உங்களை நேசிக்கும்.

# மீண்டும் திரையில் நதியா

தெலுங்கில் உருவாகும் 'அண்ணி' உட்பட ஓரிரு படங்களில் நடிப்பதற்காக, முன்னாள் நாயகி நதியா இந்தியா வந்துள்ளார்.

சுட்டிப் பெண்ணாக தமிழ் சினிமாவில் அறிமுகமாகி ரசிகர் உள்ளங்களில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் நதியா. பின்னர் 1989ம் ஆண்டு திருமண பந்தத்தில் தன்னை இணைத்துக் கொண்டு திரையுலக வாழ்வுக்கு முடிவுரை எழுதினார். தற்போது B.B.C இல் செய்தி வாசித்துவரும் நதியா ஏறத்தாழ ஏழு வருடங்களின் பின் மீண்டும் சினிமாவில் தலை காட்டவுள்ளார்.

எதற்காக மீண்டும் நடிக்க வந்தீர்கள் என்று கேட்ட கேள்விக்கு பதிலளித்த நதியா "எனது விடுமுறையை கழிப்பதற்காக எனது சொந்த மண்ணான இந்தியாவிற்கு வந்துள்ளேன். இன்னமும் என் மீது பாசம் வைத்துள்ள ரசிகர்களுக்காவும், எனது திறமைமீது நம்பிக்கை வைத்துள்ள தயாரிப்பாளர்களுக்காவும் ஓரிரு படங்களில் நடிக்கவுள்ளேன். இவற்றை முடித்துக் கொண்டு மீண்டும் லண்டன் பறந்து விடுவேன். என்று கூறுகின்றார்.

## சொல்லுகிறோம்

சேர்ந்து நட்சத்திர டிவிக்கு வழங்கிய ப்பபட்டது. இதனைக் கண்ட கூட்டமைப் அல்ல) அக்காவுக்கும் தங்கைக்கும் பதைத்துப் போன சகோதரிகள் ஓடிச் ரின் கால்களில் விழுந்து மூன்று மாதத் டிதம் வாங்கி கூட்டமைப்பின் வாயை

பொருள்படும் படத்திற்கு பணம் போட்ட ராம். எப்ப வேணுமானாலும் கால்ஷீட் ன்னதை நம்பி இருபது லைரங்களை இப்போது கால் ஷீட் கேட்டுப் போனால் கேள் என்று அலைக்கழிக்கிறாராம். கூட்டமைப்பிடம் பஞ்சாயத்துக்கு போக

ண்ட படம் மற்றும் வாலி நாயகனின் து கூட்டமைப்புக்காரர் தடா சட்டத்தை ளுக்கு மன்னிப்பு தயாரிப்பாளர்களுக்கு ால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள்

கும் நகைச்சுவை நடிகர் நடிகர்களை அண்மையில் உயரமான நடிகரை த்து விட்டாராம். கடுப்பாகிப் போன லலென்னா நடக்கிறதே வேற என்று ட மற்ற நடிகர்கள் உயரமான நடிகரை கொமடியன் மீது இவ்வளவு வெறுப்பா..? அர்த்தம் வரும் படத்தில் முனிவரின்

## ஜோதிகா, மோனல் வழியில் ஷமீதா

குஷி படத்தில் 'மெகரீனா' என்ற பாடலுக்கு சூறாவளியாய் புகுந்து தூள் கிளப்பிய ஷில்பா செட்டியின் தங்கை ஷமீதா ஷெட்டி ராஜ்ஜியம் மூலம் தமிழ்த் திரையில் கால் பதிக்கவுள்ளார்.ஜோதிகா, மோனல் வழியில் தமிழ்த் திரையில் புகுந்திருக்கும் கவர்ச்சி தாரகையை படப்பிடிப்புத் தளத்தில் வைத்து சந்தித்தபோது சிக்கனமான உடையில் சிக்கென காட்சியளித்தார்.

இந்தியில் நீங்கள் நடித்த முதல் படமான 'மொஹபரீன்' என்ற படம் எதிர்பார்த்தளவு ஷமீதா அலையை ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தினால் தானா தமிழ் திரைக்கு வந்துள்ளீர்கள் என்று கேட்டபோது,

மற்றவர்கள் வேணும்னா மார்க்கட் இல்லாம வேறு மொழிக்கு தாவலாம் ஆனால் என்னை பொறுத்தவரையில் நடிப்பு என்று வந்து விட்டால்மொழி வேறுபாடு இல்லை. என்று ஒரேபோடு போட்டார்.

கவர்ச்சி மூலமா நடிப்பின் மூலமா உங்களை நிலை நிறுத்தவுள்ளீர்கள் என்று கேட்ட போது கிளாமர் தான் என்று ஒரே வரியில் பதில் சொன்னார்.




பிரியா ராமன்

### முகப்பில்

பிரசாந்த்-சிம்ரன்

ஐஸ்வர்யா ராய்



பிரகாஷ்ராஜ்-அபிராமி-அர்ஜுன் படம்: வானவில்

திரையுலக மறுபக்கம் 225 — தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

## பொழுதொரு மேனிக்குத் தாவும் கட்டுடல் நாயகன்

**த**மிழ் திரையுலகில் வில்லனாக கால் பதித்து தனது நடிப்பு திறமையால் கதாநாயகனாக உயர்ந்தவர். திரையில் 'நாட்டாமை' செய்வதன் மூலம் தமிழ் ரசிகர்கள் நெஞ்சங்களில் தனக்கென தனியிடத்தை பிடித்து வைத்திருக்கும் அந்த நடிகர் தன்னுடன் நடிக்கும் நடிகைகளுடனும் நாட்டாமை செய்ய தயக்கம் காட்டுவதேயில்லை.

இவ்வாறு நாள் ஒரு பெண்ணும் பொழு தொரு மேனியுமாய் தாவிச் செல்லும் அந்த கட்டு டல் நாயகன் தான் முறைப்படி மணந்த மனைவிக்கும் அல்வா கொடுத்து விட்டு முன்னாள் நாயகி ஒருவருடன் குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்தக் குடித்தனம் இன்னும் எத்தனை நாட்கள் தொடரும் என்பது அந்த கடவுளுக்குத் தான் வெளிச்சம்.!!!

அந்த கட்டுடல் நாயகன் நடித்து அண்மையில் வெளி வந்த ஹிந்தியில் 'நண்பன்' எனப் பொருள் படும் பெயர் கொண்ட படத்தில் நாயகியாக நடித்த நடிகை அவர். திரையுலகில் சகஜமெனப் பேசப் படும் அந்த விசயத்திற்கு தடா போட்ட நடிகை என கோடம்பாக்கத்தில் பெயரெடுத்துள்ளார். அந்தளவிற்கு திரையுலகப் புள்ளிகள் பலர் வலை விசிய போதும் தனது கொள்கையில் உறுதியாக நின்று ஓடும் நீரில் நழுவும் மீனாக எல்லோருக்கும் தண்ணி காட்டிக் கொண்டிருந்தார்.

இருந்த போதும், ஹிந்தியில் நண்பன் பொருள்படும் படத்தில் நடிக்கும்போது, நாயகனின் கட்டுடலை கண்டு கதிகலங்கிப் போனார் நடிகை. இதனால் உறுதியாக கடைப்பிடித்து வந்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்தார். இதன் மூலம் கொள்கைகளை தளர்த்தி நடிகரின் கட்டுடலில் கட்டுண்டார் நடிகை. அந்தப் படத்தில் டூயட் காட்சிகளில் மிகவும் தாராளமாக ஒத்துழைத்து நடித்த நடிகை படப்பிடிப்பு இல்லாத நேரங்களிலும் தாராளமாக ஒத்துழைக்க ஆரம் பித்தார். இவ்வாறு திரையுலகத்தாருக்கு தண்ணி காட்டிக்கொண்டு தொடர் கதையாக தொடர்ந்த இருவரினது நட்பும் படப்பிடிப்பு முடிந்து படம் திரைக்கு வந்த பின்பும் தொடர்ந்து கொண்டே யிருந்தது. தங்களது நட்பை அரங்கேற்றும் களங்களாக, பீச், ஹோட்டல் ஆகிய பொழுதுபோக்கு மையங்களை பயன்படுத்தி வந்தனர்.

இவ்வாறு, ஒருநாள் நடிகரின் காரில் ஏறிக் கொண்ட நடிகை சென்னையில் உள்ள பிரபலம் வாய்ந்த 'பீச்' ஒன்றில் நடிகருடன் இணைந்து தனது இனிய பொழுதைக் கழிக்க விரும்பினார். சனக் கூட்டத்தினால் நிரம்பி வழிந்த கடற்கரையில் காரை நிறுத்தியவர்களுக்கு கடற் காற்று இதமாக அவர் களின் மேனியை வருடிச் சென்றது. கடல் காற்றின் வருடலில் மெய்மறந்த நடிகை நடிகரின் கட்டுடலில் கட்டுண்டார். நடிகரும் தனது உருண்டு திரண்ட கரங்களால் நடிகையை சிறைப்படுத்தினார். அதுவரை வாய்மூலம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருந்த வர்கள் இப்போது கைகளினால் கருத்துக்களை பரி மாறிக் கொண்டிருந்தார்கள். அசையாது நிறுத்தப் பட்டிருந்த காரின் மெல்லிய அசைவுகள் காரினுள் நடந்து கொண்டிருக்கும் திருவிளையாடலை கடற் கரையில் கூடி நின்ற ஜொள்ளுப் பாட்டிகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. இதமாக அசைந்து கொண்டிருந்த காரின் கண்ணாடியையும் துளைத்து தமது பார்வையை ஊடுருவ விட்ட ஜொள்ளுப் பாட்டி கள் பெருமூச்சு விட்டுக் கொண்டு அவ் இடத்தை விட்டு நகர்ந்தனர்.

## களத்தில் குதித்துள்ள டி.ஆரின் அடுத்த வாரிசு

'காதல் அழிவதில்லை' என்ற படத்தின் மூலம் டி.ஆரின் அடுத்த வாரிசும் களமிறங்குகின்றது!

ஏற்கனவே, சிலம்பரசன், குறளரசன் ஆகியோரை திரையுலகில் வலம் வர வைத்திருக்கும் டி.ராஜேந்தர், இப்போது தனது மகள் இலக்கியாவையும் திரைப்பட துறைக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

காதல் அழிவதில்லை என்ற படத்தில் சிம்பு, சார்மி ஆகியோரது உடைகளை டிசைனிங் செய்வதன் மூலம் திரைப்பட துறையில் காலடி எடுத்து வைத்திருக்கும் இலக்கியா, 'மோனிஷா என் மோனலிஷா' என்ற படத்திலும் தனது பங்களிப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளதோடு 'காதல் அழிவதில்லை' என்ற படத்தின் வெற்றிக்காக காத்திருப்பதாகவும் கூறுகின்றார்.



தேவயானி குழுவினருடன்

## மினி சினி

* ஐ லவ் யூடா' படத்தை வாங்கி தான் 'ராஜ்ஜியம்' படத்தை வேலை என்கிறார் மனோஜ்குமார்

* முருகதாஸ் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் படத்தில் கி ஜோதிகா ஆனால் விஜய காந்திற்கும் ஜோதிகா ம் டூயட்டே கிடையாதாம். ஏன் என்று கேட்டால் பென்ஸ் என்கிறார் இயக்குநர்.

* நடிகர் முரளிக்கு சென்னை கிளைமேட் ஒத்துக் ள்ளாமல் காய்ச்சலில் படுத்து விட்டார். கொடுத்த ஷீட்டையும் கான்சல் செய்து விட்டாராம்.

அஜித் நடிக்கும் 'மகா' படத்தை இயக்கும் ரவிராதா பத்திரிகையாளராம்.

சீரியலில் நடிக்கும் நக்மாவுக்கு ஒரு நாள் சம்பளம் ம் ரூபாவாம்.

நாதன் டைரக்ஷனில் ஒரு படத்தில் நடிக்கிறார் மும்தாஜ்.

தேசம்' படத்தில் தன்னை டம்மியாக்கி விட்டதாக நடிகை சினேகா.

நடித்து வரும் அத்தனை பாத்திரங்களுக்கும் நதிகளின் ளார் இயக்குநர்.

லினி இப்போது தன் பெயரை விசாலினி என்று

இயக்கும் புதிய படத்தின் பெயர் 'ஆ'!


# என் பேசாமடந்தைக்கு...

என் பாதையோரங்களில்
எங்காவது பாதச்சுவடுகள்
கண்டால்...
கார்முகிலே நீ
கால்பதித்துப் போயிருப்பாய்
என்றே நினைத்து
முட்டுக்காலிட்டு முகர்வேன்
***
எங்கே...!
உன் மௌன
பாஷைகளின்
பரிணாமங்களாவது
இறக்கி வைக்கப்படுமா
என்றவொரு
ஏக்கப் பெருமூச்சில்...!
***
ஸகி...!
உன்னை
அல்லாவிட்டாலும்
நின் நினைவுகளையாவது
நிரந்தரமாய் நேசிக்கும்
பாக்கியத்தைப் பெற்றுத் தா!
அதுவே எனக்கு
ஆனந்தமாயிருக்கும்!
***
ஆள்பாதி ஆடைபாதி
என்றெல்லாம் இருப்பதுபோல்
நீ
தென்றல்பாதி புயல் பாதி
சில நேரங்களில்
தென்றலாய்த் தீண்டி...
தேகத்தை
வருடிச் செல்வாய்!
பல வேளைகளில்
புயலாகச் சீறி...
என் பொறுமையினை
சோதிப்பாய்!
***
ஸகி..!
உன் தனிமைக்கு(த்)
தகுந்த துணைவேண்டும்
என்பதே என்
தணியாத தாகம்!
***
அதுவே
நானாக இருந்தால்
என் தாகமும்
முற்றாகத் தீரும்!
***
பேசு...!
நீ பேசு!
உன் பாஷைகளின்
அர்த்தங்களை அறியத்தான்
பாவியிவன்
உண்ணாவிரதம்!
***
ஸகி..!
உன்
கண் சிமிட்டல்களின்
சின்னச் சின்ன
சில்மிஷங்களைக்கூட
கருத்தாழமாய்
நோக்குபவன்...!
உன்
வார்த்தைகளை மட்டும்
வரவேற்கமாட்டேனா...?
பேசு...
நீ பேசு!
உன் பூவிதழ்
விலகினால்தான்
என் புதையலை(ப்)
பார்க்கக்கூடிய பாக்கியமே
எனக்குக் கிட்டும்!
அதனால்-
பேசு...!
நீ பேசு!
உனக்கு(ப்)
புண்ணியமாய்ப் போகும்
மௌனத்தை விடுத்து
மின்மினியாய் பேசு!
பேசு...!
நீ பேசு!

து. பிரபாஹர்-ஹப்புத்தளையூர்.

## தேன் கிண்ணம்


## பேனா நண்பர்கள்



பெயர்:
வி.வி. குமார்
வயது: 21
முகவரி:
த.பெ. இல. 885,
தேகா, கட்டார்.
பொழுது போக்கு:
ரி.வி.,பத்திரிகை.



பெயர்:
நா. சுரேந்தினி
வயது: 17
முகவரி:
நெடுந்தீவு கிழக்கு,
வட்டாரம்-15.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.



பெயர்:
எஸ்.எம். தௌபீக்
வயது: 19
முகவரி:
பூவரசந்தீவு-05,
கிண்ணியா.
பொழுது போக்கு:
பத்திரிகை,
கிரிக்கெட்.

## சுவாச ஊழி...

வாழ்க்கையின் அர்த்த
வார்ப்புக்களை தேடல்
பட்ட அந்த
அசல் சொப்பனங்களும்
பூமி புழுங்கும் குருதி
நீராய் குரூரம் கொள்கிறது.
***
உன் யௌவனம்
மத்திய வங்கியாகி
பிரபஞ்சம் முழுவதும்
கால வெளியாய் விரி படுதனால்
இந்த இளைய நிலவும்
உடைந்து வழிகிறதோ...?
***
உன் உதட்டு
வார்த்தை வரிகளை
சுவடு கொண்டு தான்
திராட்சைப் பழம் ரசமாய்
மென்மை கொள்கிறதாம்.
***
நான்-உன்
இதயப் பாசறை
நோக்கி பயணப்பட்டு தான்
காதலுக்கான-கழி விரக்கம்-
கொண்டிருக்கிறேன்.
***
நீ விட்ட
கொட்டாவிக் காற்றில்
நான் நொருங்கி
எறும்பைப் போல
ஊர்ந்து-உன்
காலடியில் முடங்கிறேன்.
***
என் வாழ்க்கை
உன் சுவாச காற்றினை
ஜதரில்லா தாவரமாகி
ஈர்ப்பு கொண்டு
ஆலாபனைப் படுகிறது.
***
உன் புன்னகையால்
பிரமை ஜனித்தவைகள்
ஞாபக தொழுவல்களால்
பிரியம் தொனிக்கிறது.
***
என் ஏகாந்தப்
பொழுதுகள் ஒரு கணம்
காதல் களம் பற்ற-உன்
பார்வைப் பனியை ஊழி
தொடுத்து செல்ல
வேண்டுகிறேன்.

கோபால் நாதன்-பொத்துவில்.

## பிரிய சகியே...!

உன்னைக் கண்ட
நாள் முதலாய்
பிறப்பால் வரும்
உறவை விட
பிணைப்பால் வரும்
உறவே புனிதமானது
என்பதை அறிந்தேன்
ஆனால் நீயோ
அதனை
மறந்துவிட்டாய்!
***
கண்வழி புகுந்து
உயிரில் கலந்த
என் நட்பை
துச்சமென
நினைத்து-உன்
பூப்பாதத்தால்
மிதித்துவிட்டாயே
இதுதான்-நீ
நட்பிற்கு தரும்
மதிப்பா?
***
உயிர் பிரியும்
வரை நம்
நட்பு வாழும்
என்று கூறிய
உன் இதழ்களா
என் நட்பு இனி
வேண்டாம்
என்று கூறியது?
***
நீ என் நட்பை
மதிக்காத போதும்
நான்
உன்னை
உன் ஸ்நேகத்தை
மதிக்கிறேன்
துதிக்கிறேன்
***
நீ
என்னை விட்டு
காத தூரம்
சென்றாலும்
நான்
உன்னைப்
பிரியேன் சகியே...!
பிரிய சகியே...!

எஸ். டனிதா-
களுதாவளை.

## பூ

நீ ரசிக்கின்ற பூ
சில நாளிகைகளே
வாசம் வீசும்
நானோ
உன் இதயத்தோட்டத்தில்
நீ சுவாசிக்கும்வரை
வாசம் வீசும்
பூவாக இருப்பேன்!

ஜி. புஷ்பா, வெல்லம்பிட்டிய.


## நிச்சயமாக சம்மதிக்க மாட்டாள்!

நான் இன்றே உயிரோடு
'கண்தானம்' செய்துவிட்டு
கபோதியாக அலையத்தயார்
'பெண்ணே நீ- 'கண்தானம்'
செய்கிறாய் என்றால்!'
***
நீ மரணித்த பின் உன்
கண்களைக் கொண்டு
இவ்வுலகை ரசிக்க ஆசை
கொள்ளவில்லை,
உன் இதயத்தில்தான்
ஓரிடம் தரவில்லை
எனக்கு-நீ!
உன் சொத்தாக
என் சொத்தென்று ஏதுமில்லை
என்னில்!
ஆதலால்தான்
உன் அங்கங்களில்
ஒன்றையாவது என்னில்
பொருத்திக் கொண்டு
மரணிக்க ஆசைப்படுகிறேன்
உன்னோடு..!
***
அதுவரைக்கும் நான்
'கண்தானம்' செய்யும்
காரணம் தெரியாமல்
இருக்க வேண்டும்-அவளுக்கு!
***
தெரிந்தால்
அதற்கும் சம்மதிக்க மாட்டாள்
நிச்சயமாக...!!!

ஏ. எப். எம். றியாட்-
முள்ளிப்பொத்தானை.

## காதல் துயரம்

என்னை அணைத்துச் செல்வாயென்று
எதிர்பார்த்தேன்-நீயோ
என்னை மறந்து சென்றுவிட்டாய்.
இருந்தாலும் என் உள்ளத்தில்
ஓயாது உன் நினைவு தான்.
எனது நினைவு வீட்டில்
நீ...
வெளிச்ச நட்சத்திரமாய்
வாழ்கின்றாய்.
***
எனது கன்னங்களில்
உன் உதடுகள்
முத்தமிட்டதால்
அவை அழியக்கூடாதென்று
தண்ணீரில் முகங்கழுவாது
காப்பாற்றி வந்தேன்.
***
அந்த முத்தங்களோ!
இன்று கண்ணீரில்
கரைகின்றன.
***
குளிர் காலத்தில் நீ
போர்த்திக் கொண்டிருக்கும்
போர்வைகூட
கொடுத்து வைத்தது தான்
ஆனால்-உனது
பார்வையில்
குளிர் காயும்
பாக்கியம்கூட
எனக்கில்லை.



***
பிரியமானவனே!
பிரியமாட்டேன்
என்றாய்-எனைவிட்டு
ஏன் பிரிந்தாய் இன்று!
உனக்கு மட்டும் தெரியும்
என் உயிர் துடிக்கும்
சத்தம்.

பொ. துஷ்யந்தி-
கோணாவளை வசாவிளான்.

## வழிசொல்

நீண்ட இரவுகள்
சிதறிய கனவுகள்
சொல்ல முடியா சோகத்தில்
என் உணர்வுகள்
அடைப்பட்டு கிடந்த என் இளமையின்
சிறகுகள் உன்னை கண்டல்லவா
வானத்தை நோக்கி பறந்தன...
இதோ இன்று
உன் பிரிவினால் சிறகுகள் மட்டும்மல்ல
என் உணர்வுகளும் பூமியை நோக்கி
புதைகின்றன..
துள்ளி திரிந்த என் சந்தோசங்களை
அள்ளிகொண்டு நீ புறப்படடபோது
உன் நினைவுகளை மட்டும்
பொறுக்கிகொண்டு
வழியனுப்பி வைத்தேன் உன்னை
அன்பே...
இப்போதாவது சொல்
புறப்பட தயங்கும் என் ஒவ்வொரு
இரவுகளையும் வழியனுப்புவதற்கு
ஒரு வழியை!

சுகுமாரன் ரஜனி-தலவாக்கலை.

## நில் கவனி முன்னேறு

# செயல்பாட்டில் உறுதிவேண்டும்

**வா**ழ்க்கையில் நாம் முன்னேற்றங்களைக் காண்பதற்கும்,உற்சாகத்துடன் உழைப்பதற்கும், எடுத்துக் கொண்ட இலட்சியம் வெற்றி பெறுவதற்கும் புது மறுமலர்ச்சியைக் காண்பதற்கும் அடிப்படையாக அமைவது முடியும் என்ற வைராக்கியம்தான்.

ஆனால் நாம் எடுத்துக் கொண்ட காரியம் உடனே நிறைவேறாமல் போனால் தடைப்பட்டுக் கொண்டே வந்தால் சோர்ந்துவிடும். பணம் இல்லை, வேலை கிடைக்கவில்லை, மற்றவர்களுடைய உதவி பெற முடியவில்லை என்று எண்ணிக் கவலைப் பட வேண்டியதில்லை.

ஏன் என்றால் நம்மிடம் எல்லா வித சௌகரியங்களைப் பெறக்கூடிய சக்தி இருக்கிறது. முடியும் என்ற செயலாற்றல் உள்ளது. இதனை வைத்துக் கொண்டு செயல்பட்டால் நிச்சயமாக வெற்றி பெற இயலும்.

விடியாத இரவு இல்லை. நல்ல வேளை கட்டாயம் வந்தே தீரும். இயற்கையின் அமைப்பிலேகூட வெப்பமும், குளிரும் மாறி மாறித்தான் வரும். கோடை காலம் போலவே குளிர் காலமும் உண்டு அல்லவா!

நமக்கும் மட்டும்தான் கஷ்டம் மற்றவர்களுக்கு எல்லாம் இன்பம் இருக்கிறது என்று எண்ணிக் கொள்ள வேண்டாம். ஒவ்வொரு எண்ணினால் மனம் தளராது. முயற்சி மேல் முயற்சி என்ற முன்னேற்றப் பாதையில் வேகமாக நடக்கத் தோன்றும்.

உலகப் புகழ்பெற்ற அன்னை எமிகா மைக்கேல் அம்மா அயர்லாந்தை விட்டு ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் கப்பலில் பயணம் செய்து கடல் கடந்து வந்தார்.

அவர் தங்கிய ஊர் அனாதைகளின் சரணாலயம் ஆனது.

எல்லா கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு அனாதை இல்லத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டே வந்தார். அனாதைப் பிள்ளைகளுக்காக ஊர் ஊராகச் சென்று உதவி கேட்டார்.

யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக நின்று எல்லாவித கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு அனாதை இல்லத்தை நடத்திக் காண்பித்தார். காலப்போக்கிலே இவருடைய தொண்டு அனைவரையும் கவர்ந்தது.

எப்படி இவரால் மட்டும் முடிந்தது? தன்னால் இல்லத்தை உருவாக்க முடியும் என்று உறுதியாக நம்பிச் செயல்பட்டதுதான். அதன் பயன் வெற்றி பெற்றார்.

கட்டாயம் நம்மால் முடியும்!! உறுதியுடனும் கொள்கைப்பிடிப்புடனும், தளராத நெஞ்சுடனும் செயல்பட்டார்!!

வருக்கும் ஒவ்வொரு விதமான கஷ்டமும் துயரமும் இருந்துதான் தீரும்.

அதனைத் தங்களுடைய செயல்பாட்டின் மூலமாக அறவே அகற்றி விட்டார்கள். அதிகமான துன்பம் நம்மை நெருங்கும்போது இன்பம் துளிர்விட ஆரம்பிக்கும்.

துன்பத்தின் முடிவிலேதான் இன்பத்தின் வாசல் இருக்கிறது என்று

# இந்தவாரம் உங்கள் பலன்

17.02.2002 தொடங்கி 23.02.2002வரை

### கிரக நிலை

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், வெள்ளி |
| மேடம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி, இராகு |
| மிதுனம் | - வியாழன் |
| விருட்சிகம் | - கேது. |
| விருட்சிகம் | - கேது. |

சந்திரன், மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மேடம்:
அ(ச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) தொழில் நிலையில் மாற்றம், பொருள்வரவு மந்தம், பெரியோர் உதவி உண்டு. உத்தியோக ரீதியான முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் உயர்நிலை பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### இடபம்:
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் கஷ்டம் தீரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகஸ்தர்களின் உயர்வுகள் தாமதமாகும். மாணவர்களுக்கு கல்வி மந்தமடையும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மிதுனம்:
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால் மனதில் கவலைகளுக்கு இடமுண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்த்துக் கொள்ளவும். பணக்கஷ்டம் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். பணக்கஷ்டம் தீரும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு சுமாராக அமையும். மறைமுக எதிர்ப்புக்களால் வார இறுதியில் மனக் குழப்பம் உண்டாகும். உத்தியோகத்தில் சில மாற்றங்களுக்கு ஆளாகுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சி எடுப்பது நல்லது. விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

### கன்னி:
(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) பெரியோர் உதவி, காரியானுகூலம், வெளியிடவாசம் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி குழப்பம் தீரும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 06.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) மனதில் தெளிவும், வாக்கு வசிகரமும் ஏற்படும். பணக்கஷ்டங்கள் குறையும். வெளியிட பிரயாணங்களில் அவதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை முயற்சிகளில் தடை) பணவரவு தாமதம், உண்டு. பெரியோர் உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை,) பணவரவு, தேகாரோக்கியம், திருப்தி தரும். வீண் மனக்கவலையால் வார இறுதியில் பிரச்சனையுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 02.


### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) தொழிலில் நன்மையும், பெரியோர் உதவியும் ஏற்படும். பிரயாணங்களை தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் மறைமுக எதிர்ப்புக்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு வீண் பிரச்சனைகள் குறையும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) எதிலும் கவனமுடன் செயலாற்றவும், விண் பிரச்சனைகள் தோன்றும். நிலைப்பிரிவுண்டு. உத்தியோகத்தில் கஷ்டங்களுக்கு இடம் தரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது?



முதலிரவு; முதல் உறவு தம்பதியர் இருவருக்கும் இன்ப வாசல் திறந்த அனுபவம். கன்னி கழிந்த மணப் பெண்ணுக்கோ இன்பத்தில் துன்பம். ஆம். உடலுறவின்போது பெண்ணுறுப்பில் காயம்பட்டது போல் வலி. ரத்தக் கசிவின் நசநசப்பு. அரிதாகச் சிலருக்கு அதிக வலியும் மிகுந்த ரத்தப்போக்கும் கூட ஏற்படும். இது கன்னித்திரை (HYMEN) கிழிந்ததன் விளைவு.

இப்படி 'ஹைமன்' சிதைந்தால்தான் சம்பந்தப்பட்ட பெண் கற்புடையவள் என்பது பரவலான ஒரு நம்பிக்கை. இன்னும் நமது கிராமங்களில் முதலிரவின்போது மணமகளின் உடையில் ரத்தம் படிந்திருக்கிறதா என்று விடிந்ததும் மாமி யார் வீட்டில் பார்க்கிறார்கள். ரத்தம் தெரியாவிட்டால் ரணகளமாகிவிடுகிறது அந்தப் பெண்ணின் வாழ்க்கை. அரபு நாடுகளில் நிலைமை இன்னும் மோசம். அவமானம், விவாகரத்து, படுகொலை என எதையும் எதிர்கொள்ள வேண்டும், கன்னித்திரை இல்லாத பெண்கள். இதற்கு அஞ்சி தற்கொலை செய்து கொள்ளும் பெண்கள் துருக்கி நாட்டில் அதிகம் என்கிறது ஒரு புள்ளி விவரம்.

ஒரு பெண்ணின் ஹைமன் திரையை வைத்து அவளது கற்பை அளக்கலாமா? கன்னித்திரை இல்லையென்றால் கன்னித்தன்மை இழந்தவள் என்பது எந்த அளவுக்கு உண்மை?

"எந்த அளவுக்கும் அது உண்மை இல்லை" என்கிறார் டாக்டர் ஷர்மிளா. "இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. வயதுக்கு வந்த ஒவ்வோர் ஆணும் ஒவ்வொரு பெண்ணும் ஹைமன் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்" என்கிறார் அவர். அவர் மேலும் கூறும்போது...

'கன்னித்திரை கிழியாத பெண்தான் கற்புடையவள். அப்படிப்பட்டவளே தனக்கு மனைவியாக வர வேண்டும்' என்று பழங்காலத்திலிருந்தே ஆண்கள் நினைத்து வந்திருக்கிறார்கள். கற்பு நெறியை வலியுறுத்தி வந்த ஒரு சமுகத்தில் மக்களாக ஏற்படுத்திக் கொண்டதுதான் இந்த எண்ணம். ஆணின் கற்பை அளவிட இதுபோல் ஒரு ஏற்பாடு இருந்திருந்தால் நமது ஆண்களில் பாதிப் பேருக்குத் திருமணமே நடக்காது.

கன்னித்திரைக்கும் கற்புக்கும் முடிச்சுப்போடுவது சரியல்ல. ஹைமன் என்பது குடல்வால் (Appendis) போல ஒரு பயனற்ற பகுதி. உடல் ரீதியாகப் பார்த்தால் ஹைமனுக்கு என்று எந்த வேலையும் கிடையாது. சும்மா அது பாட்டுக்கு இருக்கிறது. It is just there. அவ்வளவுதான். அதைப்போய் கற்புக் கவசம் அது, இது என்பது அபத்தம்.

ஒரு பெண்ணுக்குக் கன்னித்திரை உண்டு அல்லது இல்லை என்பதற்கும் கன்னித்தன்மைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைப் பெற்றோர்கள் அல்லது குடும்பத்தில் மூத்தவர்கள் இளம் பெண்களுக்குச் சொல்லித் தர வேண்டும். வடிவத்திலும் அளவிலும் நிறத்திலும் ஹைமன் ஆளுக்கு ஆள் மாறுபடும் என்பது போன்ற தகவல்களை அவர்களுக்குப் புகட்ட வேண்டும். அப்படிச் செய்தால் ஹைமன் குறித்த மூட நம்பிக்கைகளிலிருந்து முதலில் அவர்கள் விடுபடுவார்கள்.

ஹைமன் என்பது சமூகத்தின் கவலைக்கு உட்பட்டதல்ல. கணவன் புரிந்துகொண்டவனாக அமைந்துவிட்டால் இது தனிநபர் விஷயமாகிவிடும். அப்புறம் உண்டு என்பதும் இல்லை என்பதும் கவனத்துக்குதவாத பேச்சாகிவிடும். விவாகரத்தான, மறுமணம் செய்து கொள்கிற பெண்களிடம் கன்னித்திரையை எதிர்பார்க்காத பரந்த உள்ளம் கொண்ட ஆண்கள், தங்கள் புதுமனைவியிடமும் அப்படியே நடந்து கொண்டால் இந்த மூட நம்பிக்கைக்கு (Myth) இடம் ஏது?"


செல்வாஸின் 7 சல்வார் பரிசுப் போட்டி



நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 6

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-02-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**யாழ்ப்பாண வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞ மைக்கல் மிருனா, 39, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


"கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு? கல்யாணம் ஆனப்புறம் எப்படி...? அந்த ஃபீலிங் எப்படி? ஏழாவது சொர்க்கம்னு இங்கிலீஷ்ல சொலறாளே அது மாதிரியா?" என்று கேட்டாள் மல்லிகா.

"அனிதா யுரோப்புக்குப் போகப் போறா" என்று சீதா பேச்சை மாற்றினான்.

"எங்கெல்லாம் போகப் போறீங்க?"- மல்லிகா கேட்டாள்.

"தெரியல்ல... அவர்தான் ப்ளான் பண்ணியிருக்கார்"- சொன்னாள் அனிதா.

வைரவனைப்பத்தி சீ அப்படி சிலாகிச்சு சொன்னார். ரொம்ப பெரிய ஆளாம்... நான் கல்யாணத்துக்கு வந்திருக்கலாம். இன்விடேஷன்தான் கெடைக்கலை" மல்லிகா சொல்ல.

"அனிதா பீச்சுக்குப் போகலாம்னு சொன்னா" என்றாள் சீதா.

"பீச்சுக்கா! அனிதா ஒண்ணு செய்யுங்களேன்... எங்க வீட்டுக்கு வாங்களேன்... என் பிரதரை நீங்க அவசியம்




சந்திக்கணும்!"

"ஆமாம்... பயங்கர அரட்டை அவன்..." -சீதா சொன்னான்.

"சரி, வரேன்" என்றாள் அனிதா.

'போய்தான் பார்க்கலாமே என்றிருந்தாலும், உள்ளுக்குள்ளே 'வைரவனிடம் சொல்லிக்கொண்டு வரவில்லையே' என்ற பயம் அனிதாவுக்கு இருந்தது. 'என்ன... வைரவன் வீட்டுக்கு வரவே ராத்திரி ஒன்பதரை ஆகும்!' தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் அனிதா.

மல்லிகாவின் வீடு அருகில்தான் இருந்தது.

சைக்கிள் ரிக்ஷா வைத்துக் கொண்டு போனார்கள். துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் இருந்தது. ஒன்றுடன் ஒன்று ஒட்டிய வீட்டு வாசலில் டைலரிங் க்ளாஸ் இருந்தது. வாய்ப்பாட்டு கேட்டது. சென்னை வானொலி நிலையத்தில் விரும்பிக் கேட்ட டி.எம்.எஸ். பாட்டுகள் ஒலித்தன.

மல்லிகாவின் சகோதரன், மல்லிகாவின் ஆண் வேஷம் போல இருந்தான். வேஷ்டியும் கழுத்தில் சங்கிலியுமாக, தலையை சுத்தமாக க்ராப் வெட்டி, கையில் 'ஜீனியஸ்' என்கிற புத்தகம் வைத்திருந்தான்.

இவர்களைக் கண்டதும் "வாங்க வாங்க" என்றான். ரொம்ப நாள் சிநேகிதம் போல, அனிதாவிடம் "உங்க ஹஸ்பண்டு போட்டோவை 'பிஸினஸ் இண்டியா'வில் அடிக்கடி பார்க்கறேன். உங்களைத்தான் பார்த்ததில்லை. நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க... ஏதோ ஒரு தேவதைக் கதையில் வர்ற கல்யாணம் போல பேசிக்கிறாங்க... உங்க கல்யாணத்தைப் பத்தி!" என்று ஒரு ஆங்கிலப் பத்திரிகையை எடுத்து, அதன் கடைசி பக்கத்தைக் காட்டினான்.

"உங்க கல்யாணத்தைப் பத்தி வந்திருக்கு... படிங்க" என்றான்.

"அய்யா... நீ கொஞ்சம் சும்மா இருக்கியா?" என்றாள் மல்லிகா.

"என் பேர் விஸ்வநாதன்! விசுன்னு கூப்ட்டா எனக்குப் பிடிக்காது" என்றான்.

"விச்சுன்னுதான் கூப்பிடணும்" என்று மல்லிகா கிண்டலடிக்க,

அவள் தலையில் மொத்தினான். "இவ பேரு மல்லிக்காபி! கொத்தமல்லில காபி இருக்கும் பாருங்க. ரிக்ஷாக்காரங்கள்லாம் சாப்பிடுவாங்க. அதான் இவ" என்றான்.

பிறகு, ஸாரி, உங்களை நிக்க வெச்சே பேசிக்கிட்டிருக்கேன்... உக்காருங்க" என்றான்.

"இந்த கிதார் யாருது?"- அனிதா கேட்க.

"அய்யோ கேட்டுட்டியா? அறுத்துருவான்! அரை குறையா வாசிக்கத் தெரியும். போட்டு உடைப்பான்" என்றாள் மல்லிகா.

"இந்த ஞான சூன்யத்துக்கு க்ரெடிட், டெபிட் விட்டா ஏதும் தெரியாது. இவளுக்கு எங்கயாவது கல்யாணம் ஆகுமா சொல்லுங்கோ. போய் யாரை யாவது காதல் பண்ணேன்னு தினம் அடிச்சுக்கறேன்" என்றான் விஸ்வநாதன்.

"அதுக்குள்ள இவளுக்குக் கல்யாணம் பண்ணாதீங்க. நல்லா படிக்கட்டும்" என்றாள் அனிதா.

"கை குடுங்க அனிதா." மல்லிகா கை நீட்டினாள்.

"மல்ஸ் சும்மா சொல்றா... விசு ரொம்ப நல்லா கிதார் வாசிப்பான். என்ன.. மாதா மாதம், வாசிக்கிற வாத்தியத்தை மாத்திக்கிட்டே இருப்பான்! ஸ்திர புத்தி கிடையாது. இந்த மாசம் என்ன விசு சின்தஸைஸரா?"- சீதா கேட்டான்.



"இல்லை கிதார்..."

பிகு பண்ணாமல் கிதாரில் 'அம்சத்வனி' என்று அவன் சொன்ன ராகத்தை விசு வாசித்துக் காட்டினான். இனிமையாக இருந்தது.

"டென்ஷனைக் குறைச்சுட்டு கமகங்கள் கொண்டு வரலாம்னு இருக்கேன் வீணை மாதிரி! சீதா... நான் புதுசா ஒரு ராகம் கண்டுபிடிச்சிருக்கேன் தெரியுமா? கொஞ்சம் கொஞ்சம் 'சந்திர கோன்ஸ்' மாதிரி இருக்கும்... பரவாயில்லை வாசிக்கட்டுமா?"- விசு கேட்க.

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"வாசிச்சுத் தொலை" என்றாள் மல்லிகா.

விசு வாசிக்கத் துவங்க வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது.

சீதாராமனின் ஃப்ரெண்ட் மல்லிகாவின் வீட்டில் அனிதா இருந்த போது போலீஸ் ஜீப் வந்தது. "அட... நம்மை தேடிண்டு போலீஸ் வந்திருக்கு" என்றான் மல்லிகாவின் அண்ணன் விஸ்வநாதன். அனிதாவக்குத் திக்கென்றது.

அந்த போலீஸ் இன்ஸ் பெக்டர் தன் தொப்பியைச் சரி பண்ணிக்கொண்டு உள்ளேவர, "வாங்க... வாங்க... காபி சாப்பிடறீங்களா?" என்றான் விஸ்வநாதன். மல்லிகா சற்று பயந்து போனாள்.

சீதாராமன் அனிதாவைப் பார்த்து "உன்னைத்தான் தேடிண்டு வந்திருக்கணும். என்ன இது.. போலீஸுக்கு எல்லாம் சொல்லிண்டு..?" என்றான்.

"இங்க அனிதா யாரு?"- இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"நான்தான்" என்றாள் அனிதா.

"என்னம்மா இது... உங்களை உங்க வீட்டுல தேடிக் கிட்டு இருக்காங்க. சொல்லாம இங்க வந்துட்டிங்க" என்றார் அவர். "சரி... சரி... வாங்க... உங்க ஹஸ்பண்ட் வைரவன் அநாவசியமா கமிஷனர் வரைக்கும் போய்ட்டார்" என்றார்.

கான்ஸ்டபிளை விளித்து, "இந்தம்மா இங்க இருக்கறதா வயர்லஸ் ரேடியோல சொல்லிடுப்பா" என்றார் இன்ஸ்பெக்டர். பிறகு உள்ளே வந்து பார்த்து சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "ஏம்மா... நீங்க எத்தனை மணிக்கு வீட்டை விட்டுக் காணாம போனீங்க? ஏதாவது லெட்டர் கிட்டர் எழுதி வெச்சீங்களா?" என்று விசாரித்தார்.

"நான் காணாமப் போகலை. சும்மா வெளியே போனேன்" என்றாள் அனிதா.

"எப்ப?"

"மத்யானம் ரெண்டு மணி இருக்கும்."

"நாலு மணி நேரத்தில் இந்தப் பாடா? அட ராமா! உங்க ஹஸ்பண்ட பெரிய ஆளுதான். ஆனா, இந்த மாதிரி நாலு மணி நேரம் காணாம போனதுக்கெல்லாம் கமிஷனர்கிட்ட சொன்னா நடக்காது. சொல்லுங்கம்மா... நான் அங்கு ஒரு மர்டர் கேஸை விட்டுட்டு ஓடி வந்தேன். ஏம்மா... ஏதாவது வீட்டுல தகராறா?"

"சேச்சே... அதெல்லாம் இல்லை" என்றான் சீதா ராமன்.

வயர்லெஸ் ரேடியோவில் தகவல் சொல்லச் சென்றிருந்த கான்ஸ்டபிள் திரும்ப வந்து "அவங்க வராங்களாம்... அதுவரைக்கும் இங்கியே இருக்கச் சொன்னாங்க" என்றார்.

"அப்ப நான் வரேன்மா... உங்க ஹஸ்பண்ட்கிட்ட சொல்லுங்க" என்றார்.


"உங்களையும் இருக்கச் சொன்னாருங்க" என்றார் கான்ஸ்டபிள், அவரைப் பயத்துடன் பார்த்துக்கொண்டு.

அனிதாவுக்குப் பிரமிப்பாக இருந்தது.

விஸ்வநாதன், "இன்ஸ்பெக்டர்... எப்படி நீங்க..."

"இங்க வந்தேன்னு கேக்கறீங்களா? இந்தம்மாவோட உறவுக்காரங்க அத்தனை பேர் வீட்லயும் விசாரிக்கச் சொன்னாங்க. இங்க சீதாராமன்னு ஒருத்தர் ரூமுக்கு வந்தபோது சைக்கிள் ரிக்ஷாவில போனதா சொன்னாங்க. ஸ்டாண்டுல விசாரிச்சதில, ரிக்ஷாக்காரர் இங்க கொண்டு விட்டதா சொன்னாரு. அவரையும் இட்டாந்தோம். பேஜாருங்க இந்தப் பணம் படைச்சவங்கபண்ற கூத்து" என்றார்.

[அனிதா வருவாள்...]



## பாப்பா முரசு சிறுகதை

# கஞ்சனுக்குக் கிடைத்த பரிசு!

டோனி என்பவனும் அகாய் என்பவனும் நண்பர்கள். இருவருமே இளைஞர்கள். வேலை பார்த்து கை நிறைய சம்பாதிப்பவர்கள்.

இவர்களில் அகாய் என்பவன் மிகுந்த இரக்க குணம் கொண்டவன். பிறரை அன்போடு நேசிப்பவன். பிறருக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்பவன். எப்பொழுதுமே சிரித்த முகத்துடன் இருப்பான்.



இதற்கு நேர்மாறான குணம் கொண்டவன் டோனி. எப்பொழுதும் கடு.. கடு... வென்று முகத்தை வைத்துக் கொண்டு இருப்பான். ஒரு புன்னகையை அவன் முகத்தில் பார்க்க முடியாது. பிறரிடமிருந்து உதவியை எதிர்பார்ப்பானே தவிர, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் அவனுக்கு வரவே வராது.யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுவான்.

ஒரு நாள், இருவரும் கடைத் தெருவில் சென்று கொண்டு இருந்தனர்.

அப்போது-

வயோதிபப் பிச்சைகாரன் ஒருவன் அவர்கள் முன்னே தோன்றி, “ஐயா! ஏதாவது தர்மம் பண்ணுங்கய்யா!” என்று சொல்லி இரண்டு கைகளையும் நீட்டினான்.

அகாய் உடனே ஒரு ரூபாய் பணத்தை எடுத்து அவனுக்குக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்ட அந்த பிச்சைக்காரன் டோனியிடம் கை நீட்டி, “ஐயா!” என்றான்.

“அதுதான் அவன் கொடுத்து விட்டேனே. என்னிடம் சில்லரை இல்லை. போ... போ!” என்று எரிந்து விழுந்தான் டோனி.

சிறிது தூரம் சென்றதும் ஒரு துறவி வருவதை இருவரும் கண்டனர்.

உடனே அகாய் துறவியை வணங்கினான். டோனி மிகுந்த இறுமாப்புடன் திரும்பி நின்று கொண்டான்.

இருவரையும் தனது ஞானப் பார்வையால் பார்த்த அந்த துறவி, அகாயைப் பார்த்து, “நீ நீண்ட ஆயுள் பெற்று வளமுடன் வாழ்வாய்!” என்று வாழ்த்தினார்.

துறவி டோனியைப் பார்த்து, “நீ விரைவில் மரணமடைவாய்!” என்றார்.

அதைக் கேட்ட இருவருமே திடுக்கிட்டனர்.

டோனிக்கு அடி வயிறே கலங்கிவிட்டது.

அவன் ‘தடால்’ என்று துறவியின் கால்களில் விழுந்து, “ஐயா! நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? எனக்கு ஏன் சீக்கிரம் மரணம் வரப்போகிறது? அகாய் மட்டும் நீண்ட ஆயுளைப் பெற, நான் விரைவில் சாகவா? ஐயோ.. ஏன்... ஏன்..?” என்று கேட்டு அழுதான்.

“அந்த இளைஞன் சற்று நேரத்துக்கு முன்பு ஒரு வயோதிபப் பிச்சைக்காரனுக்கு தர்மம் செய்தான். அதனால், அவன் நீண்ட ஆயுளுடன் இருந்தால் எத்தனையோ பேருக்கு தர்மம் செய்வான் என்பதற்காக, இறைவன் அவனது ஆயுளை கூட்டியுள்ளான். இருக்கின்ற உன் ஆயுள் குறைந்து போனதுக்கு காரணம், உன்னிடம் கை நீட்டிப் பிச்சை கேட்ட அந்த வயோதிகப் பிச்சைக்காரனுக்கு ஒரு பைசா கூட தர்மம் செய்யாமல், சில்லறை இல்லை போ.. போ... என்று விரட்டியடித்தாய். நீ நீண்ட ஆயுளுடன் இருப்பதால் யாருக்கு என்ன லாபம்? அதனால் தான் இறைவன் உனது ஆயுளைக் குறைத்து விட்டார்,”என்றார் துறவி.

“அப்படியா! நான் மாபெரும் தவறு தான் செய்து விட்டேன். இப்பொழுதே ஓடிச் சென்று அந்தப் பிச்சைக்காரனுக்கு பத்துப் பணத்தை தர்மம் செய்துவிட்டு வருகிறேன்!” என்றான் டோனி.

அதைக் கேட்டு முறுவலித்த துறவி, “இனிமேல் நீ சென்று ஒரு லட்சம் பணத்தைத் தருமம் செய்தால்கூட யாதொரு பயனும் கிடைக்கப் போவதில்லை. உன் ஆயுள் குறைந்தது, குறைந்தது தான் என்றார்.

அதன் பிறகு டோனியை மரண பயம் தொற்றிக் கொண்டு விட்டது.


இருபத்தி நான்கு மணி நேரமும் மரணத்தைப் பற்றியே நினைத்தான். நாளடைவில் உடல் எலும்புக்கூடு போல் ஆனது.

ஒரு நாள். அவன் எதிர்பார்த்தது போல் அவன் இறந்தே விட்டான்.

அவன் நினைத்திருந்தால் மரணத்தைக் கூட வென்றிருக்க முடியும். ஆனால் மரண பயத்தில் அவன் பீடிக்கப்பட்டு விட்டதால், அவனால் அதை வெற்றி கொள்ள முடியவில்லை. பயந்தே செத்தான்.


இப்படிப்பட்ட கோழைகளால் இந்த உலகத்தில் எதையுமே சாதிக்க முடியாது. ■

**சத்யா**



1-35 வரையான புள்ளிகளை இணைத்து, மறைந்திருப்பது என்ன என்பதை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.02.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **434**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 432

பரிசுக்குரியவர்:
ஏ.எல்.எம். றாபி,
பொலன்னறுவ முஸ்லிம் மத்திய கல்லூரி, பொலன்னறுவ.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கந்தசாமி ஜசிந்தன், ஒந்தாச்சி மடம், களுவாஞ்சிக்குடி. | கே. சகானா, பெல் பாஸ்ட் சர்வதேச பாடசாலை,திருமலை. |
| எஸ். டிலுக்ஷிகா, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | சிவலிங்கம் ஜி. காயத்திரி, கு/வ தமிழ் ம.வி. ரோசல்ல, சிலாபம். |
| எஸ். மகிந்தகுமார், பாசிக்குடா வீதி, கல்குடா. | யுவேந்திரா–சகானா, கமு/இராமகிருஷ்ண வித்.,அக்கரைப்பற்று. |
| கோ. வினேஸ்வரன், நெலுக்குளம், சுற்றுட்ட வீதி, வவுனியா. | எம்.எஸ்.ரமீஷா, பது/தமிழ் மகா வித்.(தே.பாடசாலை),பசறை. |
| ஏ.ஹரிஸ், சென். ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | என். அர்ச்சனா, இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06. |

## ஏன் இப்படி?



ரஷியாவில் உள்ள புகழ் பெற்ற செஞ்சதுக்கம் சிவப்பு வண்ணம் கொண்டது. 1917ல் ரஷியாவில் நடந்த கம்யூனிச புரட்சிக்கும் இந்த சிவப்பு நிறத்துக்கும் சம்பந்தம் இல்லை. மத்திய கால நூற்றாண்டிலேயே இங்குள்ள பூங்கா சிவப்பு வண்ணத்திலேயே வடிவமைக்கப்பட்டது. எனவே கம்யூனிசத்துக்கும் சிவப்பு வண்ணத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

நெப்போலியன் துருக்கி மீது 1799ல் படையெடுத்து வென்றான். ஹுக்கா குடித்து பழகியிருந்த துருக்கிய போர் வீரர்கள், போரில் ஏற்பட்ட தீவிபத்தில் அவற்றை இழக்க நேரிட்டதால் தங்கள் கைவசம் இருந்த புகையிலையை வெள்ளைப் பேப்பரில் சுருட்டி, அதை பற்ற வைத்து புகையாக இழுத்தனர். இதுதான் சிகரெட் உருவாக ஆரம்ப காரணம்.



மாட்டு முகம் கொண்ட ‘புல் டாக்’ குக்கு மாட்டு முகத்துக்காக அந்த பெயர் வந்துவிடவில்லை. இந்த நாய்கள் உண்மையிலேயே மாடுகளோடு நேருக்கு நேராக மோதும். அதனால்தான் ‘புல்டாக்’ என்ற பெயர் நிலைத்து விட்டது.



# மூன்றாவது காதல்



இணுவில் உத்திரன்

"மூன்றாவது தடவையாக காதல் வசப்பட்டாள் அவள். முதல்க் காதல்! பள்ளிக்கூடக்காதலாக பத்தாம் ஆண்டில் படலைவரை கூட இல்லை. அந்த அறியாப் பருவத்திலே விஞ்ஞான வகுப்பிலே நிறைய சண்டைப்பிடிப்பான். அன்று ஒரு காதலர் தினம். அந்தச் சண்டை இறுக்கமாகி, இரக்கமாகி, காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கி,... அவ்வளவுதான். ஆனாலும் அவன் இன்னொரு பெண்ணுக்குப் பின்னால் தாவியபோது இது பருவக் கோளாறு என்று நினைத்துக் கொண்டாள். அது ஒன்றும் அவளைக் காயப்படுத்தவில்லை. முதல்க் காதல் என்பது முழுமையான தொன்றல்ல, அது கனவுகளின் ஆரம்பம். அது நீடிப்பதில்லை. அது நிறைவேறாது போனாலும் வாழ்க்கையைப் பாதிப்பதில்லை. அத்தோடு அது சரி. அமுங்கிப் போனது.

இரண்டாவது காதல்! அந்த வளாகத்துக்குள் நுளைந்தது முதல் அவளையே சுற்றிச் சுற்றி வந்த அவன்! மணிக்கணக்காய் தொலைபேசியில் பேசிக்கொள்வாள். "யாரோடு?" என்று அம்மா கேட்டபோது "சினேகிதிகளுடன்." என்று அம்மாவுக்கு பொய் சொன்னபோது அவன் மெல்ல அவளுள் புகுந்து கொண்டான். அதுவும் ஒரு காதலர் தினம். ஒருவரை ஒருவர் அங்கீகரித்துக் கொண்டார்கள். அவனை நம்பினாள். நேசித்தாள். காதலித்தாள். ஆனால் அவன்? கனடா போனான். கல்யாணமும் செய்து கொண்டான். "காதலித்தல், பிரிதல் எல்லாம் இன்று சர்வசாதாரணம் தானே." என்று கூறினான். ஆனால் அவளால் அப்படி நினைக்க முடியவில்லை. வாழ்க்கைமீதே ஒரு பிடிப்பு இல்லாமல் போனது. ஏதோ ஆசிரியைத் தொழில் செய்ததால் கொஞ்சம் நிம்மதி! காதல் பொய். வாழ்க்கை பொய். இந்த உலகத்திலே எல்லாருமே ஏமாற்றுக்காரர்கள். என்று நினைத்துக்கொண்டாள் அவள்!

மூன்றாவது காதல்! அவள் எப்படித்தான் மறுத்தபோதும் அவளுடைய சம்மதம் கூட இல்லாமல் அவளுக்கும் அருணாச்சலத்துக்கும் திருமணம் செய்து வைத்தார்கள், பெரியோர்கள். அவளைப் பொறுத்தவரை அது திருமணம் அல்ல, ஊர் உலகத்திற்காக பெற்றோரின் சுமையை இறக்குவதற்காக நடத்தப்பட்ட ஒரு சடங்கு. அவ்வளவுதான். அருண்யார்? எப்படிப்பட்டவன்? என்றெல்லாம் அவள் ஆராயவில்லை. அது அவளுக்கு அவசியமும் இல்லை. அருணோடு அதிக மாகப் பேசுவது கிடையாது. வெளியே சேர்ந்து போவது கிடையாது. தான் உண்டு தன் வேலை உண்டு. என்று இருந்து விடுவாள். ஒட்டாத உறவு என்றாலும் இருவருமே மற்றவருக்காக கணவன் மனைவியாக நடித்துக் கொண்டார்கள்.

அன்று பாடசாலை முடித்து வீட்டுக்கு வந்தவள் கண்களில் தற்செயலாகப் பட்டது அந்தக் கடதாசி. அது அவனுடைய டயரியில் இருந்து விழுந்து இருக்க வேண்டும். அதைப் படித்தபோது...! அவளுக்கு தலை சுற்றியது. கட்டிலில் விழுந்தாள். துக்கம் நெஞ்சை அடைத்தது. அழுதாள். ஆம் அந்த மொட்டைக் கடிதத்தில் அவளுடைய கடந்த காலத்தைப்பற்றி, காதலைப்பற்றி எல்லாம் தாறுமாறாக எழுதப்பட்டு இருந்தது. இதுவரை இல்லாத ஏதோ ஒரு குற்ற உணர்ச்சி இப்போதுதான் முதல்த் தடவையாக தலைதூக்கி இருந்தது. அருணை நான் ஏமாற்றி விட்டேனோ? அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்! இந்த வாழ்க்கை இதற்கு பிறகும் தொடருமா? அவளுள் நிறைய கேள்விகள் எழுந்தன. வேதனையாக இருந்தது. அழுதாள். கண்ணீர் தீரும் வரை அழுதாள். அறியாபபருவத்திலே செய்த தவறுகளுக்காக சேர்த்து அழுதாள்.

நீண்டநேரத்துக்குப் பின்னர் அவள் தலையை ஒருகரம் ஆதரவாக வருடியது. திடுக்கிட்டு நிமிர்ந்தாள். பக்கத்தில் அருணாச்சலம். பயமாக இருந்தது.

"உடம்புக்கு என்ன தலைவலியா?" "ம் இல்லை"...

"அப்போ அம்மா ஞாபகமா?" "இல்லை"...

"வேற ஏதாவது பிரச்சனையா?"

அதற்குமேலும் அவளால் பொறுக்க முடியவில்லை. அந்தக் கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டியபடி அழுதாள். "ஓ அதுவா! ஒருவாரத்துக்கு முன்னாலை வந்த கடிதம்." என சாதாரணமாக சொன்னான் அவ. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "அப்போ நீங்கள் ஏன் அதைப் பற்றி என்னட்டை கேட்கேல்லை...?"

"எதற்காக கேட்கவேணும்? அந்தக்கடிதம் உண்மையாகவோ இல்லை பொய்யாகவோ இருந்திட்டுப் போகட்டுமே அதற்காக உன்ரை கடந்த காலத்தைப்பற்றிக் கேட்டு உன்ரை மனசை புண்படுத்திக் கொள்ள நான் விரும்பேல்லை. சிலவேளை நீ யாரையாவது காதலித்து இருக்கலாம். ஆனால் நீ யாராலும் காதலிக்கப்படவில்லை. எப்பவுமே காதலும் அறிவும் ஒத்துப் போகாத விசயம்தான். உண்மையான அன்பு என்பது அது காரண காரியத்துக்கு அப்பாற்பட்டது. உன்னை உண்மையாக நேசிக்கக் கூடியவனை உன்னாலை சரியாக இனம் காண முடியாமல் போச்சு. இதிலை உன்ரை தவறு எதுகுமே இல்ல. நீ என்ரை மனைவி! உன்னைப் புரிஞ்சு கொள்ளுறதென்பது எனக்கு அப்படியொன்றும் கஸ்ரமான விசயமே இல்லை.." என்று அருண் கூறியபோது முதல்த் தடவையாக அவனுடைய கண்களை நேருக்குநேராக சந்தித்தாள். அந்த பார்வை...! அதில் ஏதோ ஒரு சக்தி இருந்தது. அது அவள் கண் வழி புகுந்து இயத்தைத் தொட்டது. என்ன ஒரு தெளிவு? அவள் உடம்பெல்லாம் புதுவிதமான ஒரு உணர்ச்சி! உதடுகள் தடிக்தன...

"அருண் அந்தக் கடிதத்தை நீங்..." அவன் இடைமறித்தான். "இதோபார். ஒரு பெண் தன்ரை வாழ்க்கையிலை ஒரே ஒரு ஆணுக்கு மட்டும்தான் மனசைப் பறிகொடுக்க வேணும். இது ஆணுக்கும் பொருந்தும். ஆனால் இப்படி யாராவது இருக்க முடியுமா? முடியாது. கல்யாணத்துக்கு முன்னாலை ஆணசரி பெண்சரி, யாராவது ஒருவன் மீதோ இருவர் மீதோ, விருப்பப்பட்டுத்தான் இருப்பார்கள். கடைசி ஒரு விநாடியாவது மனம் தடுமாறி இருப்பார்கள். இதை இல்லை என்று மனச்சாட்சி உள்ள யாருமே சொல்ல முடியாது. அதனாலை அந்தக் கடிதத்தைப் பற்றிய பேச்சை இதோடை நிறுத்திவிடு. "அப்படி எண்டால் என்னை என்ரை அன்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீங்களா?" கேட்டாள். அவளுடைய கண்களில் ஏக்கம்!

நிச்சயமாக! இதோபார், என்ரை வாழ்க்கையிலை அன்பு எனக்கு ஏமாற்றத்தை, புறக்கணிப்பை, அவமானத்தை மட்டும் தான் தேடித் தந்து இருக்கு. ஆனால் இப்பெல்லாம் எனக்கு எந்த வருத்தமுமே கிடையாது. ஏனென்றால் எனக்கு தெரியும்.

"நீ வாழ்க்கையிலை தூய்மையான அன்புக்காக ஏங்கி ஏங்கி வாழுகிறவள். கட்டாயமாக ஒரு நாளைக்கு என்னை புரிஞ்சு கொள்ளுவாய். அப்போ என்ரை காதலையும் நீ ஏற்றுக்கொள்ளுவாய்! என்று நான் உன்னை நேசிக்கிறன். நிறைய! நிறைய நேசிக்கிறன். நீதான் என்னை என்ரை அன்பை ஏற்றுக் கொள்ள வேணும்." என்று அவன் கூறிய போது அவளுக்கு "ஓ"வென்று அழ வேண்டும் போல் இருந்தது. அவனுடைய நெஞ்சினிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள். நெஞ்சை அழுத்திய சுமைகள் எல்லாம் குறைவதைப் போல் இருந்தது. இது நிஜம்! இதுதான் நிஜமான அன்பு. இதுதான் நிஜமான காதல். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட முதிர்ந்த காதல். வாழ்வின் எல்லைவரைக்கும் வரும் காதல்! இன்றுதான் அந்த ஸ்பரிசத்தை உணர்ந்தாள். இன்று அவன் கணவனாக... இல்லை இல்லை காதலனாக தெரிந்தான். இன்றுதான் அவளுடைய மென்மையான உணர்வுகளுக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்தது. வாழ்க்கையில் காதலைப்பற்றிப் புரிந்து கொள்வதற்கு அவள் இரண்டு தடவையேனும் அனுபவப் படவேண்டி இருந்தது ஏதோ உண்மைதான். மனித வாழ்க்கையிலே இந்த மூன்றாம் காதல் தான் ஒவ்வொருவருக்கும் வேண்டிய காதல். அவசியமான காதல். அந்தக் காதல் அவர்கள் இருவருக்குமே கிடைத்திருக்கின்றது. அப்படியே சுவரைப் பார்த்தாள். அதிலே தொங்கிய தினக் கலண்டர் திகதியைக் காட்டிக் கொண்டு இருந்தது. "பெப்ரவரி-14". ■

# நாடகம்



அன்றைய தினசரிப்பத்திரிகையில் வெளியாகியிருந்த 'தவறி விட்டது' விளம்பரத்தை மீண்டும் ஒரு தடவை வாசித்துப்பார்த்தான் தீபன். சிரிப்புத்தான் வந்தது. ".. என்ற இலக்கங்கள் கொண்ட தேசிய, விசேட அடையாள அட்டைகள் பரமேஸ்வராச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்குமிடையே தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்." என குறிப்பிட்டு கீழே முகவரியொன்றும் காணப்பட்டது. தினசரிப்பத்திரிகைகளில் இதுவொன்றும் புதினமான விடயம் அல்ல. தீபன் சிரித்ததற்கும் காரணம் இருக்கிறது. அந்த அடையாள அட்டைகள் தீபனிடம்தான் இருந்தன. பொறுமையாக தான் வேலை செய்யும் வங்கிக்கு சென்று வேலை முடிந்து வீடுதிரும்பி அலுப்புத்தீர குளித்து முடித்தபின் பொழுதுசாயும் நேரத்தில் அடையாள அட்டைகளை எடுத்துப்பார்த்தான். 'சுவர்ணா நாகராஜா' என்றிருந்தது. சிரித்தவாறே தனது புதிய ரக மோட்டார் பைக்கை உதைத்தான்.

"மிஸ்ரர். நாகராஜா வீடு இது தானே?" என்ற கேள்வியை அந்த வீட்டு கேட்டில் நின்றவாறு வினவினான் தீபன்.

"ஓமோம்! நிங்கள் அப்பாவுக்கு தெரிஞ்சவரா?" பதிலளித்துவிட்டு எதிர்க் கேள்வி கேட்டான் அவனது வயதொத்த ஒரு வாலிபன்.

"இல்லை-நேற்று ஐசி இரண்டு பரமேஸ்வராச்சந்திக்கு கிட்ட கண்டெடுத்தனான். நீங்கள் தானே விளம்பரம் போட்டது?

"வாங்கோ உள்ளுக்கு வாங்கோ" வரவேற்பு பலமாக இருந்தது. "இருங்கோ... தங்கச்சி சுவர்ணாவோட ஐசிதான் அது. அவ இண்டைக்கு வெளியில ஒரு இடமும் வெளிக்கிடேல்லை. நல்லவேளை அவவுக்கு இண்டைக்கு 'கொம்பியூட்டர் கிளாஸ்' இல்லை!" படபடப்பாக ஏதேதோ பேசியவன் சந்தோசமாக காணப்பட்டான். தங்கைமீது அவனுக்கு அக்கறை அதிகமாக இருக்கலாம் என ஊகித்துக் கொண்டான். மறுபக்கமாக திரும்பி "சுவர்ணா உன்ரை ஐசி கிடைச்சிட்டுது" என்றான். இதற்காகவே காத்திருந்தது போல் சுவர்ணாவும் உள்ளே இருந்து வந்தாள். இவன் பொக்கற்றிலிருந்த ஐசி இரண்டையும் அவள் கையில் கொடுத்தான். கண்ணை வெட்டி 'தாங்ஸ்' சொன்னாள். இவனும் பெருந்தன்மையோடு "நோ. மென்சன் ப்ளீஸ்' சொன்னான். பின் தமையன் பக்கம் திரும்பி-

"மன்னிக்கவேணும் இவ்வளவு நேரமும் தாமதிச்சதுக்கு." மத்தியானம் தான் பேப்பர் பாத்தனான் வேலையை விட்டுட்டு உடன வரேலாது.

இண்டைக்கு எங்கட பாங்கில ஒவ்ரைம் வேற செய்ய வேண்டி இருந்தது. செய்யாட்டில் அப்பர் சேத்து வைச்சதைத்தான் செலவளிக்க வேணும்!!"

**பளை வே.சி.நரன்**

"சின்னவயசிலேயே பொறுப்பா நடந்து கொள்ளுறீர்" அப்போது தான் எதிரில் வந்தமர்ந்த அவனது தாயார் நற்சான்று வழங்கினார். அவளது தந்தையும் அந்த நேரத்தில் வந்தார்.

"தம்பி- எந்த இடம்?"

ஊரைச் சொன்னான். தெரிந்தவர்களின் பெயரை கேட்டார். உறவினரை கேட்டபோது அவரை தன் உறவினர் எனக்கூறி குலம் கோத்திரத்தை அவருக்கு உணர்த்தினான். அவர்கள் திருப்தியோடு தலையை ஆட்டியதை இவன் மனதில் குறித்துக் கொண்டான்.

பின் எழுந்தான்.

"சரி-நான் போட்டுவாறன்"

"ஒருநிமிசம் தம்பி" என்றுவிட்டு உள்ளே சென்றவர். ஒரு கவருடன் வந்தார். அவனுக்கு முன்னாலுள்ள ஸ்டூலில் வைத்தார்.

"தம்பி ஒரு பெரிய உதவியை செய்திருக்கிறீர். எங்கட சின்ன பரிசு" என்றார்.

"ஆ... என்ன அங்கிள் இது? இதை எதிர்பார்த்தா நான் இங்க வந்தனான்?" அங்கிள் என்றபோது முகத்தை கவனித்தான் எந்த பிரதிபலிப்பும் இல்லை.

"நான் போட்டுவாறன்" சொல்லிவிட்டு நகர்ந்தான்.

நாளை அவனது திறமையை கட்டாயம் சுவர்ணா பாராட்டுவாள் என்று நினைத்தபோது மனதுக்குள் இனித்தது. ஏனென்றால் சுவர்ணாவின் பெற்றோர் தீபன்மீது நல்ல பிப்பிராயம் வைப்பதற்காக காதலர்களான சுவர்ணாவும் தீபனும் சேர்ந்து ஆடிய நாடகம் அல்லவா இது!

# கண்ணாமூச்சி ரே... ரே... 12

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

> ஒரு மணி நேரத்தில் மாருதி நின்ற இடத்தில் மூன்று போலீஸ் ஜீப்புகள். பாட்டரி மின்சாரத்தில் அதிக வெளிச்சம் பாய்ச்சும் விளக்குகள் காட்சியை எடுத்துக் காட்டின. ஃபாரன்சிக் லேப் நபர்களும், நாயும் வரவழைக்கப்பட்டு... ஒரே கோலாகலம்

சங்கரதாஸ் காரை விட்டிறங்கினான். ஷுவைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு சாக்ஸ் கால்களுடன் சமீபித்து சின்ன டார்ச்சை சிதைந்த முகத்தில் பாய்ச்சி முகம் முற்றிலும் அடையாளம் தெரியாத வகையில் சிதைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துத் திருப்தியோடு தலையாட்டிக் கொண்டு... வேகமாக அந்த இடத்தை விட்டு அகலும் முன்னால் நம்பர் பிளேட் மேல் ஒட்டியிருந்த வேறு நம்பரின் ஸ்டிக்கரைப் பிய்த்து எடுத்தான்.

★★★

"நிஜமாவா?" என்று எழுந்தே விட்டான் சேது.

"உக்காரு. நிஜமாவே! அவ உன் பொண்டாட்டியா, என்ன? ஏன் இப்படிப் பதட்டப் படறே?" என்றான் சங்கரதாஸ், "இங்கே பாரு.. இந்த சூட்கேஸ்ல ரெண்டு லட்சம் இருக்கு. எடுத்துக்கிட்டுப் போய் உன் வீட்ல வச்சிக்க. உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்து பத்து லட்சம் தர்றதா சொன்னேன். இப்ப பத்து லட்சமும் உனக்கு மட்டும்னு ஆய்டுச்சி. இப்ப செத்துப் போயிருக்கிறது மதுலதா. உயிரோட இருக்கிறது துர்க்கா. அதாவது உன் பொண்டாட்டி. அதாவது உன்னைப் பொறுத்தவரை உன் பொண்டாட்டி கோவிச்சிக்கிட்டு அவங்கம்மா வீட்ல இருக்கா. அவங்கம்மாவைப் பொறுத்தவரை நீ சமாதானமாப் போக கூப்பிட்டு விட்டதால உன் வீட்ல இருக்கா. நாளைக்கு துர்க்காவுக்கு அதாவது ஒரிஜினல் மதுலதாவுக்கு ஒரே ஒரு ட்ரீட்மெண்ட் இருக்கு. அப்புறம் ஆஸ்பத்திரில சேர்ப்பேன். நீ புருஷனா பக்கத்தில இருந்து கவனிச்சிக்கணும்."

"எனக்கு எதுவுமே புரியலை."

"கொஞ்சம் கொஞ்சமா புரிஞ்சா போதும்."

"ஏன் சார். நீங்க முகத்தை சிதைச்சிட்டதால போலீசுக்கு சந்தேகம் வராதா? மதுலதாவுக்கு வேற அடையாளங்கள் இல்லையா?"

"சேது.. நான் ரொம்ப நிதானமா நிறைய தகவல் சேகரிச்சித்தான் இந்த திட்டத்திலே இறங்கினேன். எஸ்.எஸ்.எல்.சி புக்குல மதுலதாவோட ரெண்டு அடையாளங்கள் என்ன, என்ன தெரியுமா? ஒண்ணு. வலது புருவத்துக்கு மேல உள்ள சின்ன மச்சம். ரெண்டு. வலது புறம் மேலுதட்டுல சின்ன மச்சம். மதுலதாவுக்கு நான்தான் பாஸ்போர்ட் வாங்கிக் கொடுத்தேன். அப்போ எஸ்.எஸ்.எல்.சி புக் முதல் பக்கம் ஜெராக்ஸ் எடுத்து நான்தான் இணைச்சேன். இப்போ மூஞ்சே கூழ் மாதிரி சிதைஞ்சதும் ரெண்டு அடையாளமும் அவுட். துர்க்காவும், மதுலதாவும் ஒரே கலர், ஒரே ஹைட், ஒரே அளவுகள், அதனாலதான் துர்க்காவை டூப் ஆர்ட்டிஸ்ட்டா வச்சிருந்தாங்க. கடத்தப்பட்டப்போ போட்டிருந்த டிரெஸ்ல பிணம். கடத்தப்பட்ட கார். ஸ்டியரிங்ல கடத்தினவங்களோட ரெண்டாவது கடிதம் கிடைக்கும். அதனால போலீசுக்கு டவுட் வராது. வரவே வராது.." என்று அடித்துச் சொன்னான் சங்கரதாஸ்.

"உங்களோட ஒத்துழைச்சா அஞ்சி லட்சத்துக்கு பதிலா பத்து லட்சம் தர்றேன்னு சொல்றிங்க. அப்புறம் என்ன? நீங்க என்ன செய்யணும்னு சொல்லுங்க. செய்றேன்.." என்றான் உற்சாகமாக சேது.

"கடைசி வரைக்கும் இதே ஸ்பிரிட்ல இரு. போய்ட்டு வா. நாளைக்கு இதே நேரம். இதே இடத்தில சந்திக்கிறோம்."

"சரி" என்று சேது சூட்கேசுடன் புறப்பட்டுச் சென்றதும் மௌனமாயிருந்த சுதிர் கேட்டான், "என்ன தாஸ், இப்படி லட்சம் லட்சமா தூக்கிக் கொடுக்கறே?"

"பொறுமையா இரு சுதிர். மதுலதாவை.. ஸாரி.. துர்க்காவை கவனிச்சிப் பார்த்துக்கோ. நான் வர்றேன்.

சங்கரதாஸ் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு தன் காரில் புறப்பட்டான்.

ஒரு மணி நேரத்தில் மாருதி நின்ற இடத்தில் மூன்று போலீஸ் ஜீப்புகள். பாட்டரி மின்சாரத்தில் அதிக வெளிச்சம் பாய்ச்சும் விளக்குகள் காட்சியை எடுத்துக் காட்டின. ஃபாரன்சிக் லேப் நபர்களும், நாயும் வரவழைக்கப்பட்டு... ஒரே கோலாகலம்.

ஒரு அதிகாரி ஸ்டியரிங்கில் செருகப்பட்டிருந்த கடிதத்தை எடுத்து வந்து உதவி கமிஷனர் மார்த்தாண்டத்திடம் தர... அவர் அதைப் பிரித்தார்.

முன் கடிதம் போலவே ரத்தக் கையெழுத்தில் சிக்கனமான வரிகள்.

**மதுலதா உன் அழகின் மேல் கொண்ட**

**அகம்பாவத்தினால்தானே திமிர் பிடித்து**

**பேட்டி கொடுத்தாய்? இதுதான்**

**அதற்கு தண்டனை.**

**சந்திரஜித்வெறியர்கள்**

தகவல் சொல்லப்பட, சித்தி, சித்தப்பா ஓடி வந்தார்கள்.

"மதுலதா!" என்று அலறினார்கள். கொஞ்சம் அழுகை குறைந்த பின்...

"கடத்தப்பட்ட தினம் இந்த டிரெஸ்தான் போட்டிருந்தாளா?"

"ஆமாம் சார்."

"இது மதுலதாதானே?"

"வேற யாரு? மது! போய்ட்டியேடி ராஜாத்தி! இப்படி உன்னை கொதறிப் போட்ருக்கானுங்களே பாவிப்பசங்க."

அழுகைக்கும், ஒப்பாரிக்கும் நடுவிலும் ஒரு ஓரமாக சந்தோஷம் இருந்தது சித்திக்கு. எத்தனை திரண்ட சொத்து! மதுலதாவுக்கு நம்மை விட்டால் சொந்தம் யார்?

உடல் போஸ்ட் மார்ட்டத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

திரையுலக முக்கிய புள்ளிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் கார் போட்டுக் கொண்டு மதுலதாவின் பங்களாவுக்கு விரைந்தார்கள். கூடிப் பேசினார்கள்.

பொது மக்கள் அஞ்சலிக்கு உடலை எங்கே கிடத்துவது, எந்த எந்த தெருக்கள் வழியாக சவ ஊர்வலம் நடத்துவது, என்று முடிவுகள் எடுத்தார்கள்.

செய்தித்தாள்கள் மதுலதாவின் சிரித்த முகம் கொண்ட புகைப்படத்தைத் தேர்ந்தெடுத்து 'மதுலதா கொலை!' என்று தலைப்பு அமைத்து...

'வானம் பார்த்த பூமி, கோயில் விளக்கு, திரி இல்லாத தீபம், கைகாட்டி விழுகிறது, அபாய சங்கு ஆகிய வெற்றிப் படங்களில் நடித்தவர் மதுலதா. இவர்.. ஒரு பேட்டியில் பிரபல முன்னணி நடிகரான சந்திரஜித்துடன் இணைந்து நடிக்க மாட்டேன் என்று பேட்டி கொடுத்ததைத் தொடர்ந்து சந்திரஜித்தின் ரசிகர்கள் கொதித்தெழுந்தார்கள். அவர்களில் சில தீவிர வெறியர்கள் ரத்தத்தில் கையெழுத்திட்டு ஒரு கடிதத்தை மதுலதாவின் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு திறமையாக கடத்திச் சென்று இரண்டு நாட்கள் ரகசியமாக எங்கோ வைத்திருந்துவிட்டு.. இன்று மர்மமான முறையில் மதுலதாவை கொலை செய்து, அவரது காராலேயே முகத்தைச் சிதைத்து விட்டுச் சென்று இருக்கிறார்கள். தவிர மறுபடியும் ரத்தத்தில் ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார்கள்.

உதவி கமிஷனர் மார்த்தாண்டம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள போலீஸ் படை இந்த மர்மமான கொலையைப் பற்றின பின்னணியை தீவிரமாக விசாரித்து வருகிறது. இந்த கொடூரமான செயலைச் செய்த வெறிபிடித்த அந்த ரசிகர்களைத் தேடியும் வருகிறது.

மதுலதாவின் உடல் இன்று அவரது வீட்டின் முன்பு காலை, 11 மணி முதல் மாலை 4 மணி வரை பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதன் பிறகு மதுலதாவை கிறிஸ்துவ முறைப்படி சவப் பெட்டியில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்று புதைப்பதற்கான ஏற்பாடுகளை நடிகர் சங்கத்தின் தலைவர் மற்றும் திரையுலக முன்னணி பிரமுகர்கள் செய்து வருகின்றனர்.

மதுலதாவின் வாழ்க்கை வரலாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மதுலதாவின் இயற்பெயர் ரோஸ்லின்...

என்று பத்தி பத்தியாக... பக்கம் பக்கமாக செய்திகளை அமைத்தன.


போஸ்ட்மார்ட்டம் முடிந்ததும் சித்தியும், சித்தப்பாவும் உடலைப்பெற்றுக் கொண்டு மறுநாள் காலை 10.50க்கு. பங்களாவுக்கு எடுத்து வந்தபோது.. அந்த தெரு முழுவதும் வெள்ளமாய் தலைகள்.

கம்பு நட்டு கூட்டத்தை வரிசை படுத்தினார்கள் போலீஸ்காரர்கள்.

பங்களா வாசலில் தற்காலிக மர மேடை அமைக்கப்பட்டிருந்தது. முகம் பார்க்கும்படியாக இல்லை என்பதால் முற்றிலும் வெள்ளைத் துணியால் மூடப்பட்ட உடலை மலர் படுக்கையில் கிடத்தினார்கள்.

சக்கர நாற்காலியில் ஒரு பக்கமாக இருந்த அணில் தூத் நெற்றியில் அடித்துக் கொண்டான். அவன் பாபா அவனைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

*(கண்ணாமூச்சி தொடரும்)*



# இன்டர்நெட் காதல்


## ஒரு அனுபவம்

இன்டர்நெட் காதல்- இந்த கலியுகத்தின் ஸ்பெஷாலிடி! அப்படி ஒரு காதலில் வீழ்ந்த ஒரு பெண்ணின் கதை இது. இதை ஆசைபொங்க இணைய தளத்திலேயே பகிரங்கப்படுத்தியிருக்கிறார் அவர். அதில் உள்ள விஷயம்..

என் பெயர் ஆலி. என் காதல் வாழ்க்கையின் நாயகன் ஜெரமி. அவன் என் காதலன் ஆனதற்கு காரணம் என் கணவர்தான். என் மண வாழ்க்கையைப் பற்றி கேட்காதீர்கள். அது ஏமாற்றங்கள் நிறைந்தது.

என் கணவர் வாங்கிக்கொடுத்த நான் ஒரு பெரிய டாலரை வாங்கினேன். ஒருபுறம் ஆங்கிலத்தில் என் பெயரையும், மறுபுறம் அவனது பெயரை எகிப்திய மொழியிலும் (அப்போதுதானே பிறருக்கு தெரியாது) அதில் பொறிக்கச் செய்தேன்.

அதை பாதியாக உடைத்து ஒரு பாதியை அவனுக்கு அனுப்பினேன். இருவரும் அந்த (அரை) டாலரை சங்கலியில் அணியத் துவங்கினோம். மற்றவரின் இதயத்துக்கு மிக நெருங்கி விட்டோம் என்பதற்காக இன்னொரு அறிகுறியாக இது இருந்தது.



ஒரு ஆன்லைன் கேமில் ஆரம்பித்தது தான் எங்கள் காதல். முதலில் இந்த விளையாட்டை ஒரு பைத்தியக்காரத்தனமாகக் கருதி வெறுத்தேன் நான். இது எனக்கு தேவையில்லை என்று கூடக் கருதினேன். அவர் அதில் விளையாடுவதைப் பார்த்து பார்த்து நாளடைவில் எனக்கும் அதில் ஆர்வம் ஏற்பட நானும் அதில் சாட் செய்ய துவங்கினேன்.

என்னை சாட் மூலம் வசப்படுத்த முயற்சித்தனர் எவ்வளவோ பேர். அத்தனை பேரையும் ஒதுக்கினேன். ஆனால், ஜெரமியை மட்டும் ஒதுக்க முடியவில்லை. உலகின் மிக இனிமையான மனிதன் அவன் என்பது மட்டும் எனக்குத் தெரிந்திருந்தது. சாட் செய்த முதல் நாளிலிருந்தே அவன் என் இதயத்தைத் திருடி விட்டான்.

ஆன் லைனிலேயே இருக்கும் ஒரு கடையிலிருந்து எனக்கு அவன் ஆயிரத்து 200 ரோஜாப்பூக்கள் அனுப்பினான். இன்டர்நெட்டில்தான் இவை அனுப்பப்பட்டன. இதெல்லாம் உங்களுக்கு அபத்தமாகப் படலாம்; ஆனால், அது எனக்கு மிகப்பெரிய வெகுமதி.

சில மாதங்களுக்குப் பிறகு எங்கள் புகைப்படங்களை ஒருவருக்கொருவர் அனுப்பிக் கொள்ளத் தீர்மானித்தோம். அட, என்ன ஒரு ஆண்மை பொங்கும் மனிதர்! எங்கள் காதல் வலுப்பட்டது. ஒருவரையொருவர் மேலும் நேசிக்கத் துவங்கினோம். ஆனால், நேரடியாக சந்திக்க வேண்டும் என்பதில் அவசரப் படவில்லை.

வாய்ஸ் சாட் எனப்படும் தொழில் நுட்பம் மூலமாக நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்தனர் எங்களது நண்பர்கள். அப்படியே செய்தோம். அவன் குரல் தான் எவ்வளவ ஆறுதல் அளிப்பதாக இருந்தது தெரியுமா?

இத்தனைக்கும் நடுவே. என் மனதில் ஒரு பயமும் இருந்தது. நான் மணமானவள்; அவனும் தான். சாட்டை நிறுத்திக் கொள்ளலாமா என்றெல்லாம் நினைத்ததுண்டு. ஆனால், அவனது பிரிவ தாங்க முடியாததாகப் பட்டது.

ஒருநாள் அவனுடன் சாட் செய்ய முடியவில்லை என்றால்கூட சாப்பிடப் பிடிக்கவில்லை; தூக்கமும் வரவில்லை. எதன் காரணத்துக்காகவும் அவனை இழக்கக்கூடாது என்பதை மட்டும் முடிவு செய்து கொண்டேன்.

எனது காதலனும், மிகச் சிறந்த நண்பனும் அவனே. கைகள் படாத புனிதமான காதல் எங்களுடையது.

நாம் ரகசியக் காதலர்கள்.. என்ற பாடலை அடிக்கடிப் பாடி கிளுகிளுத்தோம். நேரில் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருந்தாலும், அது எந்த அளவ சாத்தியப்படும் என்று தெரியவில்லை.

நேரில் சந்தித்தால் வெறும் பேச்சுடனும், அணைப்புடனும், கண்ணீருடன் அந்த சந்திப்பு முடிந்து விடாது என்பது மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது.

நாங்கள் இருவரும் யாரையும் புண்படுத்தவில்லை. ஏனென்றால், நாங்கள் இன்னும் முகம்பார்த்து பேசிக் கொள்ளவேயில்லையே! சாட்டில் சந்தித்து ஒரு வருடமாகி விட்டது. ஒவ்வொரு நாளும் கடக்கையில நாங்கள் மேலும் மேலும் நெருங்கி வருகிறோம் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகப் புரிகிறது.

கடவுள் என்று ஒருவர் இருந்தால், உண்மையான காதல் வெல்லும் என்பது நிஜமென்றால், வலிந்து திணிக்காமலேயே எங்கள் சந்திப்பு நடக்கும் என்பதை மட்டும் நிச்சயம் நம்புகிறேன்.

இப்படி தன் காதலை வெளிப்படுத்தியுள்ளார் அப் பெண்மணி.

(5ம் பக்கத் தொடர்ச்சி.........)

இது மாதிரி ஒரு சறுக்கல்தான் உங்களுக்கு மாகாண சபைக் காலத்திலயும் நேர்ந்தது. முதலமைச்சர் பதவி கிடைக்காமல் போனது பெரிய பாதிப்புத்தான். ஆனால் 89 தேர்தல்ல எம்.பியா வந்தவுடன எல்லாம் சரிக்கட்டி நிமிர்ந்தியள்.

அதுக்குப் பிறகு படிப்படியா இண்டைய நிலைமைக்கு நீங்கள் உயர்ந்ததைச் சின்ன விஷயமாய் நினைச்சு ஆராவது உதறிச்சினமெண்டால், அவைக்கு எதிர்காலம் உங்கட விசுவரூபத்தைக் காட்டி விளங்கப்படுத்தும்.

சும்மா இல்லை, கூட நிண்ட எத்தினை பேரை நீங்கள் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

செட்டைத் தண்ணியைக் காகம் சிலுப்பின மாதிரி கூட நிண்டவையையெல்லாம் ஒரு சிலுப்புச் சிலுப்பிப் போட்டுத் தனி ஒரு ஆளாய் பதினாலாயிரத்துச் சொச்சம் வோட் வரைக்கும் வந்துவிட்ட நீங்கள், எப்பிடியெல்லாம் அலுப்புக் குடுப்பியள் எண்டதை ஆனந்த சங்கரியாக்கள் உணரேக்கை நீங்கள் கூட்டமைப்புக்குள்ள உங்கட இடத்தை அசைக்க முடியாமல் நட்டிருப்பியள்.

"புலிகள் ஆயுதம் தாங்கிப் போராடுகிறார்கள் அதுக்கு ஆதரவாக, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற நாங்கள் மக்கள் அமைப்புகளைக் கட்டியெழுப்ப வேணும். கூட்டமைப்பை நிறுவன மயப்படுத்த வேணும்" எண்டு நீங்கள் ஆரம்பிக்கேக்கையே முன்னாள் கூட்டணியினருக்கு 'லைற்' பத்தும்தான்.

கம்பஸ் பொடியளே போனடிச்சு தேசியப் பட்டியல்ல உங்களை எம்பியாய் போட்டாலென்ன? எண்டு கேக்கேக்க சங்கரியண்ணரால போனைத் தான் அடிச்சு வைக்கேலும்.

ஆனால் நிம்மதியாய் இருக்கேலாது.

கூட்டமைப்பின்ர செயலாளர், பொருளாளர் பதவியைக் குறிவைச்சு உங்கட அடுத்த அறிக்கை பத்திரிகையளுக்கு வரும்.

உங்களின்ர தேர்தல் கால அற்புதங்களைக் கண்ட மூத்தவை, உங்களைக் கம்பஸ் பொடியளிட்ட இருந்து கழட்டேலுமா எண்டு பாப்பினம்.

ஆனால் எப்பிடிப் பேசவேணும், எப்பிடி அறிக்கை எழுத வேணும் எண்டு நீங்கள் எடுக்கிற கிளாஸிலயும் பழகிற சிநேகிதத்திலயும் பொடியள் ஒருநாளும் உங்கள விட்டுக் கழர மாட்டாங்கள்.

புலிகளைத் தடை செய்யக்கூடாது எண்டு கனடாவுக்கு கம்பஸ் பொடியள் எழுதினதைக் காட்ட, "இஞ்சைபார் இப்பிடி எழுதவேணும்" எண்டு நீங்கள் திருத்திக் குடுத்ததை இப்பவும் அந்தப் பொடியள் ஒருவித குரு பக்தியோட சொல்லுறாங்கள். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை, முன்னேறுங்கோ.

நீங்கள்தான் மந்திரி ஜயலத் ஜயவர்த்தனாவோடை கதைச்சு, மீன்பிடிக்க ஆமியை அனுமதி தரப் பண்ணியிருக்கிறியள் எண்டு மீனவர் சங்கங்களுக்கு கடிதங்கள் எழுதினது நல்லா வேலை செய்யுது.

போராட்டக் களத்தில ஒரு நிமிஷமும் மினக்கெடாமலே அந்தப் போராட்டத்தில உங்கட முக்கியத்துவத்தைக் காட்டுற அந்தத் திறமை எப்பவும் குறையாமல்தானே இருக்கு?

பிறகென்ன, உங்கட கனவுகள் எல்லாம் கட்டாயம் நிறைவேறும்.

கவலைப்பட வேண்டாம்.

இண்டைய சூழ்நிலையின் சூட்சுமம் விளங்கின ஆள் நீங்கள்.

புலிகளிட்டயிருந்து விலகி நிண்டு புலிகளுக்காகத் தான் அரசியல் செய்யிறம் எண்டு லாபமடைஞ்ச கூட்டணியின்ர 'றோல்' முடியப்போகுது. கூட்டணிக்கும் புலிகளுக்கும் நடுவில நீங்கள் உங்கட வலது காலை எடுத்து வைச்சிட்டியள்.

புலியள் நேர இனி உங்களுக்குள்ளாலதான் விஷயங்களைப் பாப்பினம் எண்டு காட்ட நீங்கள் செய்யப்போற உள் வேலையளை ஆராலும் பிடிக்கேலாது கம்பஸ் பொடியள் துணையிருப்பர்.

எதிர்காலத்தில் கூட்டமைப்பை நடத்தப் போறது நீங்கள்தான்.

ஒண்டிரண்டுபேர் இடைஞ்சலா இருந்தாலும் கம்பஸ் தம்பிமாரைச் சரிக்கட்டின மாதிரி நீங்கள் சரிக்கட்டிப் போடுவியள்.

இப்ப எங்கட சனமும், பல்கலைக்கழக மாணவரும் இருக்கிற நிலையில உங்கட கனவுகள் எல்லாம் நிச்சயம் நிறைவேறும்.

அடக்குமுறைகளற்ற ஜனநாயகச் சூழ்நிலையை மக்களுக்கு ஏற்படுத்தித் தாறதுக்கான உங்கட தனிப்பாதையில் வீறுநடை போடுங்கள் தோழரே! வாழ்த்துக்களுடன்.

-சாதாரணன்-

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## உள்ளூராட்சித் தேர்தலில்......

மாறாக புலிகளின் செல்வாக்கை வெளிப்படுத்தும் அடையாளமாக தமிழ் கூட்டமைப்பினர் இதில் போட்டியிட முனைவதில் புலிகளின் ஏகப் பிரதிநிதிகள் என்ற பிரதிமையை (இமேஜை) கேள்விக்குள்ளாக்கும் ஆபத்து உள்ளது.

ஏனெனில் வடக்கு-கிழக்கில் உள்ள பெருமளவிளான உள்ரூராட்சி சபைகளில் பெருந்தொகையான உறுப்பினர் தெரிவில் மாற்றுக் கட்சி உறுப்பினர் பலரும் தெரிவு செய்யப்பட முடியும். ஏற்கெனவே அவ்வாறு நிகழ்ந்தும் உள்ளன. பன்முகத் தன்மை கொண்ட ஒரு தேர்தல் பெறுபேற்றையே காணக் கூடியதாக இருக்கும். அதனால் வடக்கு-கிழக்கு மக்கள் புலிகளை மட்டுமே ஏகப் பிரதிநிதிகளாக கருதவில்லை என்ற கருத்துக் கணிப்பு ஏற்பட தமிழ்க் கூட்டமைப்பினரே வழி வகுத்ததாகிவிடும்.

இதனை தெரிந்தும் தெரியாதது போல் நடந்துகொள்ளலாம் என தமிழ்க் கூட்டமைப்பினர் முயன்றனர்.

புலிகள் இத் தேர்தலை நிராகரிக்கிறார்களென்பதை வெளிப்படுத்தியதும்தான் அவர்களுக்குத் திண்டாட்டமேற்பட்டது.

புலிகளைச் சமாளிக்கும் காரணங்களைத் தேடிப்பிடிக்கலாயினர்.

வேறு யாரும் போட்டியிடாது விட்டுவிட்டால், மற்றைய தமிழ்க் கட்சிகளான ஈ.பி. டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். வரதரணி போன்றவை இச் சபைகளைக் கைப்பற்றி விடுமென அங்கலாய்த்தார்கள்.

அப்படி புலிகள் விரும்பவில்லையென்றால் தாம் தமிழர் கூட்டமைப்பென்றோ, தமது சொந்தக் கட்சிகளின் பெயரிலோ போட்டியிடாமல், சுயேட்சைக் குழுக்களாகப் போட்டியிடுவதாக அறிவித்தார்கள்.

அவ்வாறே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துமுள்ளார்கள்.

இவற்றில் தமிழ்க் காங்கிரஸ் கட்சிமட்டும், புலிகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு தமது கட்சி இத் தேர்தலில் போட்டியிட மாட்டாதெனத் தெரிவித்துள்ளது.

எனினும் அரசாங்கம் புலிகளின் நிலைமையைக் கவனத்திற்கொண்டு வடக்கு-கிழக்கில் தேர்தலைப் பிற்போடுவதாக புலிகளுக்கு நம்பிக்கை வழங்கியுள்ளனர்.

வெறுமனே பிற்போடுவதுமட்டும் புலிகளைத் திருப்திசெய்யுமா என்பது கேள்விக்குரியது.

ஏனெனில் பிறிதொருநாளில் தேர்தலை வைத்தால்கூட இத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். அவர்களின் பட்டியலிலும் மாற்றம் செய்ய முடியாது.

ஆனால் இம்முறை தேர்தல் வேட்புமனுத் தாக்கலின்போது சில உள்ளூராட்சி சபைகளில் சில கட்சிகள் ஏக கட்சியாக அமைந்துள்ளதால் அவை அங்கு போட்டின்றியே தெரிவானவைகளாகின்றன.

மண்டூரில் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதரணியும், ஏறாவூரில் முஸ்லிம் காங்கிரசும் ஆலையடிவேம்பில் ஈ.பி.டி.பி.யும் இவ்வாறு போட்டியின்றியே தெரிவாகுபவையாகின்றன.

இந்நிலைமையும் ஒரு சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

இச் சபைகளுக்கு இக் கட்சிகள் தெரிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவிக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு இவை பிற்போடப்பட்டாலும், தேர்தல்களை ரத்தாக்கி மீண்டும் புதிதாக வைக்க முடியாத ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

தேர்தல்களைப் பிற்போடுவது கூட அவசரகாலச் சட்டத்தின் மூலமே செய்யப்படவேண்டிய ஒன்றாகவே தற்போதைய நிலைமை உள்ளது.

அப்படியானால் மீண்டும் அவசரகாலச்சட்டத்தை கொண்டுவர வேண்டிய நிலையேற்படும்.

ஆனால் இதற்கு ஆதரவளிக்க முடியாத இக்கட்டான நிலை தமிழ்க் கூட்டமைப்புக்கு இருக்கும்.

ஆனால் அவசரகாலச் சட்டமின்றி இத் தேர்தலைப் பிற்போடுவதானால் பிறிதொரு புதிய சட்டத்தை உருவாக்க வேண்டியதாக இருக்கும்.

வடக்கு கிழக்கின் சகல அரசாங்க அதிபர்களும் தத்தம் பிராந்தியங்களில் தேர்தல் நடத்தும் சூழ்நிலை இல்லையென அறிக்கை சமர்ப்பித்தால் அதை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கம் தேர்தலைப் பிற்போடலாமென்ற ஒரு வழிவகை உண்டு.

ஆனால் அதுவும், போட்டியின்றித் தெரிவாகிவிட்ட சபைகளைப் பொறுத்தவரை கேள்விக்குரிய விடயம்.

ஒரு நாடுதழுவிய பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு முடிக்கப்பட்டு மூன்று மாதத்துக்குள் எவ்வித அசம்பாவிதமுமின்றி, யுத்த நிறுத்தம் நிலவும் வேளையில் அவ்வாறு தேர்தல் வைக்கும் சூழ்நிலை இல்லையென்ற அறிக்கையை அரசாங்க அதிபர்கள் வழங்குவதானது அவர்களை ஒட்டுமொத்தமான பொய்யர்களாக வெளிப்படுத்துவதாக அமையும்.

அத்தோடு அவர்கள்மீதான நம்பகத் தன்மை சர்வதேச பொது ஸ்தாபனங்களுக்கு மத்தியில் கேள்விக்கிடமானதாகிவிடும்.

இவற்றையெல்லாம் மீறி புலிகளின் விருப்பப்படி இத் தேர்தல்களை வடக்கு கிழக்கில் தட்டிக் கழிப்பது எப்படி?

புலிகளைப் பொறுத்தவரையில் இவற்றையிட்டு அவர்கள் தலையைப் பிய்த்துக் கொள்ளும் அவசியமில்லை.

இது அரசாங்கத்தினதும், தமிழர் கூட்டமைப்பினரதும் தலையிடி, எம்மைப்பொறுத்தவரை இத் தேர்தல் நிகழ்த்தப்படக்கூடாது , அவ்வளவுதான் என்பதே அவர்கள் நிலை.

இப் பிணக்கில் புலிகளைச் சமாளிக்காவிட்டால், முதற் கோணல் முற்றிலும் கோணல் என்ற நிலை இப் பேச்சுவார்த்தைக்கும் ஏற்பட்டுவிடலாம்.

ஆளும் கட்சி தமக்கு வெற்றி வாய்ப்புக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள அவசரப்பட்டு சமாதானத்துக்கு கிடைத்த மற்றொரு சந்தர்ப்பத்திற்கு ஊறு விளைவித்துக் கொள்ளுமா என்ற அச்சத்தை அதன் சாதுரியம் தான் போக்க வேண்டும்.


### விளம்பரதாரர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

உங்கள் அபிமான தினமுரசு வாரமலரில் விரைவில் பக்கங்கள் அதிகரிக்கப்படவிருப்பதால், இதுவரை காலமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே விளம்பரங்களை ஏற்றுவந்த நாம் கூடுதலானளவு விளம்பரதாரர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

பிறந்த நாள் வாழ்த்துக்கள் நினைவஞ்சலிகள் வரிவிளம்பரங்கள் மற்றும் வர்த்தக ரீதியிலான உங்கள் சகல விளம்பரத்தேவைகளுக்கும் தினமுரசு விளம்பரப்பகுதியை நாடுங்கள்.

உங்கள் பத்திரிகை விளம்பரங்கள் உள்ளூரில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு, கனடா, மற்றும் தூரகிழக்காசிய நாடுகளில் வசிக்கும் தமிழ் பேசும் வாசகர்களையும் சென்றடைய இலகுவான வழி மட்டுமல்ல, ஒரே வழியும் 'முரசில்' விளம்பரம் செய்வதுதான்! மேலதிக விபரங்களுக்கு எமது விளம்பரப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

-விளம்பர முகாமையாளர்-


### நிருபர்கள் தேவை

தினமுரசு வாரமலரில் விரைவில் பக்கங்கள் அதிகரிக்கப்படவிருப்பதனால் கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களுக்கு நிருபர்கள் தேவை.

செய்தி சேகரிப்பில் முன் அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் தமது சொந்தக் கையெழுத்தில் எழுதிய விண்ணப்பங்களை பெப்ரவரி 28ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஆசிரியர், தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது murasu@dialogsl.net edmurasu@dialogsl.net என்ற ஈ-மெயில் (E-mail) ஊடாகவோ அனுப்பிவைக்கவும்.

**நிருபர்கள் தேவையான மாவட்டங்கள்**

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா, பதுளை

(5ம் பக்கத் தொடர்ச்சி )

## அயோத்தி ராமர் கோயிலும்.......

அதன்பிறகு தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும், தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் இ.காங்கரஸ் ஆகியவையும் வந்துவிடக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கணிக் கின்றனர்.

இதற்கிடையே சர்ச்சைக்குரிய இந்தப் பிரச்சனையில் காஞ்சி சங்கராச்சரியார் ஸ்ரீஜெயேந்திரா, "அயோத்தியில் சர்ச்சை இல்லாத பகுதியான 67 ஏக்கர் நிலத்தை மத்திய அரசு ராமஜென்மபூமி டிரஸ்டிடம் ஒப்படைப்பதுதான் முறையானது. சர்ச்சைக்குரிய பகுதி தவிர மீதமுள்ள இடத்தில் கோயில் கட்டுவதில் எவ்வித தடையும் கிடையாது. இப்பிரச்சனை தொடர்பாக மத்திய அரசை மேலும் நிர்ப்பந்திப்போம்" என்று கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சனை தமிழக முஸ்லீம் மக்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பை மெல்ல, மெல்ல உருவாக்கியவண்ணம் உள்ளது. அயோத்தியில் ராமர்கோயில் கட்ட எந்தக் கட்சி ஆதரவு தந்தாலும் அந்தக் கட்சி முஸ்லிம்களின் ஆதரவை முற்றிலுமாக இழந்துவிடும் என்பதுதான் உண்மை. ஆகவே ஏற்கனவே தமக்கு இருந்து இடையில் இழந்துவிட்ட முஸ்லிம் மக்களின் ஒட்டுவங்கியை கைப்பற்றவும் அயோத்தி பிரச்சனையை தி.மு.க. கையாளக் கூடும்.

ஆனால் அ.தி.மு.க. வைப் பொறுத்தவரை உத்திரப்பிரதேசத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று வந்தால் அது அயோத்தி விவகாரத்தில் பா.ஜ.க.வை அனுசரித்துப் போகக்கூடும். அதுவரை தனது முடிவை அமுக்கமாகவே அது வைத்திருக்கும். பொதுவாகவே முஸ்லிம் ஒட்டு வங்கியைப் பற்றி கருணாநிதி அளவுக்கு கவலைப்படாதவர் தான் ஜெயலலிதா. எனவே தான் விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக்கிங்காலை எந்த வித தயக்கமும் இல்லாமல் அழைத்துப் பேசுகிறார் ஜெயலலிதா. சிறுபான்மையினருக்கு ஆபத்து என்று கருதப்படும் 'பொடா' சட்டத்தை வேகமாக ஆதரிக்கிறார். ஆகவே பா.ஜ.க. உறவு என்பது அ.தி.மு.க.வுக்கு தேவைப்படும் போது உடனே கைகூடக் கூடியதாகத்தான் உள்ளது. ஆனால் அதே சமயம் தி.மு.க.வைப் பொறுத்தவரை பா.ஜ.க. உறவு என்பது ஒட்டி உறவாட முடியாத உறவாகவே தொடர்ந்து கொண்டுள்ளது என்பது கவனத்திற்குரியதாகும்.

### வாசகர் கவனத்திற்கு...

அதிகரித்துவரும் உற்பத்தி செலவு காரணமாக தினமுரசு வாரமலரின் விலையை 50 சதத்தினால் அதிகரிக்க தீர்மானித்துள்ளோம். இந்த விலை அதிகரிப்பு 448வது முரசில் இருந்து அமுலுக்கு வருகின்றது.

அதன்படி தற்போது 13 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்யப்படும் தினமுரசு வாரமலரின் புதிய விலை 14 ரூபாவாக இருக்கும்.

அடுத்து வரும் வாரங்களில் முரசு பல புதிய அம்சங்களுடனும் அதிகரித்த பக்கங்களுடனும் மேலும் தரமானதாக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஒரு தசாப்த காலமாக முரசுடன் இணைந்திருக்கும் வாசகர்கள் இந்த சிறிய விலை அதிகரிப்பை அங்கீகரிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

-ஆசிரியர்-



இதைவிட முரசின் சந்தாதாரர் ஆகிவிடுங்களேன்.

# ஸ்போர்ட்ஸ்

## ஐ.சி.சி.இல் றிச்சட்சன்

முன்னாள் தென்-ஆபிரிக்க அணியின் இலக்கு காப்பாளரும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரருமான டேவ் றிச்சட்சன் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தில் முக்கிய பதவி ஒன்றில் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது 42 வயதை எட்டிப் பிடித்திருக்கும் றிச்சட்சன் 1998ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து தென் ஆபிரிக்க அணியின் சட்டபூர்வ வர்த்தகம் சம்பந்தப்பட்ட பிரதிநிதியாக கடமையாற்றி வந்தார்.

தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் 42 டெஸ்ட் மற்றும் 122 ஒரு நாள் போட்டிகளில் தென் ஆபிரிக்க அணிக்காக ஆடியிருக்கும் றிச்சட்சன் 298 பிடிகளை எடுத்து எதிரணி வீரர்களை ஆட்டமிழக்க செய்ததோடு 2000இற்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் குவித்துள்ளார். றிச்சட்சன். 'தென் ஆபிரிக்க சூப்பர் கிரிக்கெட் வெப்சைட்' என்ற சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றின்போது தான் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய காலத்தில் தனக்கென எந்த விதமான சலுகைகளையும் பெறவில்லை என்றும் போட்டிகளின் போது கிடைக்கும் பரிசுத் தொகைகளை கூட பெறுவதில்லை என்றும் கூறியுள்ளதோடு தன்மீது எந்த விதமான குற்றங்களும் சுமத்தப்படவில்லை என்றும் பெருமைப் பட்டுக் கொண்டார். இவர் சிறந்த வழக்கறிஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானிடம் மண்டியிட்டது மே.இ.தீவுகள்

## 350 விக்கெட்டுகளுடன் வக்கார்



பாகிஸ்தான் மே.இந்திய தீவுகள அணிகளுக்கிடையேயான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி 244 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. அதேவேளை பாகிஸ்தான் அணியின் தலைவர் வக்கார் யூனிஸ் 350 விக்கட் என்ற மைல் கல்லை தாண்டியுள்ளார்.

பாகிஸ்தானில் நிலவும் பதற்ற நிலமை காரணமாக மே.இ. தீவுகள் அணி பாகிஸ்தான் வர தயக்கம் காட்டியதால் சார்ஜா மைதானத்தில் முதன் முதலாக. நடைபெற்ற டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் 170 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

தொடர்ந்து, இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இன்னிங்சை ஆரம்பித்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 472 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணியினர் 264 ஓட்டங்களுடன் தங்களது சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

ஏற்கனவே, 208 ஓட்டங்களை மேலதிகமாக பெற்ற நிலையில் தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணியினர் 76 ஓவர்களை சந்தித்து 6 விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்களை பெற்றபோது தமது அணியின் துடுப்பாட்டத்தினை நிறுத்திக் கொண்டனர். எனவே, வெற்றி பெற வேண்டுமாயின் 434 ஓட்டங்களை பெற வேண்டும் என்ற நிலையில் தமது இறுதி இன்னிங்சை துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மே.இ. தீவுகள் அணியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் பாகிஸ்தான் அணியினர் 244 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். இருந்தபோதும் போட்டியின் போது நடுவர்களின் தீர்ப்பில் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு டெஸ்ட் தொடர்கள் கொண்ட மேற்படி போட்டியின் போது பாகிஸ்தான் அணியின் தலைவரும் உலகப் புகழ் பெற்ற பந்து வீச்சாளருமான வக்கார் யூனிஸ் 350 விக்கெட் என்ற மைல் கல்லை தாண்டியுள்ளார். இதுவரை 78 போட்டிகளில் பங்குபற்றியுள்ள வக்கார் மேற்படி சாதனையாளர் பட்டியலில் இடம் பிடித்துள்ள 3வது பாகிஸ்தானிய வீரராவர். ஏற்கெனவே வசிம் அக்ரம் (414), இம்ரான் கான் (362) ஆகியோர் இப்பட்டிய லில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பறவைக் குஞ்சின் பசியோடு...

**இலக்கிய நயம் தருவது மூழடில்யன்**

கண்ணாடி முன் நின்றாள்.

அலங்காரங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றதா என்று பார்த்துக் கொண்டாள்.

முகத்தைத் திருப்பி, உடலைத் திருப்பி சேலையை அங்கங்கே சரி செய்து கொண்டாள்.

இப்படிக் கண்ணாடி முன் வந்து நிற்பது இது எத்தனையாவது தடவை என்று ஞாபகத்தில் இல்லை.

எத்தனை நேரம்தான் ஆளரவமற்ற வாசலையே பார்த்துக் கொண்டிருப்பது.

வெயில் இல்லையே தவிர வாசல் பாலையாகக் கிடந்தது.

மாலை நேரப் பாலை!

உள்ளே வருவாள். என்ன பார்க்கிறோம் என்று புரியாமல் கண்ணாடி முன் நின்று பார்த்துக் கொள்வாள்.

திரும்ப வாசலுக்கு நடப்பாள்.

வாசலின் வெறுமை வதைக்கும்.

உள்ளே ஓடி வருவாள்.

நேரம் நெருப்புச் சொட்டுக்களாக நகர்ந்தது.

தெருவில் யாருடையதோ செருப்போசை.

இதயம் பரபரத்துத் தொண்டைக்கு வரும்.

கால்கள் வாசலுக்கு ஓடும்.

அவனில்லை. வேறு யாரோ.

அவன் செருப்போசை கேட்க கல்லான அகலியையாய்க் காத்திருக்கும் சூன்யம்.

வாசல் படியிலேயே அமர்ந்துகொள்வாள்.

அவன் நினைவுகளே இதயத்தில் நுரைத்துப் பொங்கும்.

அவன் தீண்டிச் சுகம் தந்த இடங்கள் உடனடிச் சித்திர வதைக்கு ஏங்கும்.

நேற்றைய கூடலில் தான் சரியாக ஒத்துழைக்கவில்லை என்று மனம் சுயக் குற்றச்சாட்டுகளை முனகிப் புரளும்.

தன்னையே நொந்து கொள்வாள்.

கழிவிரக்கத்தில் மனம் கதறும்.

உடலெல்லாம் பரபரக்க மீண்டும் எழுந்து உள்ளே நடப்பாள்.

மறுபடியும் கண்ணாடியின் முன்னால் சேலை மடிப்புகளை அனிச்சையாக நீவினாள். அவன் வந்ததும் இது கசங்கிவிடப் போகிறது என்று நினைத்ததில் முகம் சிவந்தாள்.

வந்ததும் முரட்டுத்தனமாக அணைப்பவனை இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டும்.

பிகு பண்ணிக்கொண்டு, அவனிடமிருந்து வலிந்து விடுவித்துக்கொண்டு, தேநீர் வைக்கிறேன் என்றோ, உடுப்பை மாற்றுங்கள் என்றோ ஓடிவிடக் கூடாது.

அவன் கரங்களுக்குள் கசங்கிவிட வேண்டும். அவன் தரும் வதையையும் வலியையும் வாங்கிக் கொண்டால்தான் இந்த உடம்பின் நோய் தணியும்.

இதழ்களைப் பார்த்தாள்.

அவளைப் பார்த்து அவை இளித்தன.

'இரு இரு, அவர் வந்தால்



தெரியும் சேதி' என்று முணுமுணுத்தாள்.

'இன்றைக்கு உன்னை நான் காப்பாற்றப் போவதில்லை. அவரிடமிருந்து விடுவிக்கப் போவதில்லை. கடித்துத் துவம்சம் செய்ய விட்டுவிடப் போகிறேன்' என்று கறுவிக் கொண்டாள்.

வெளியே சருகு அசைந்த ஓசை.

வாசலுக்கு ஓடினாள்.

அணில்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன.

மற்றபடி சலனமற்ற தெரு,

ஏகப்பட்ட படலத்தைத் தொங்கவிட்டதுபோல வாசல் திரைச் சீலை. தூரத் தெரிந்த ஆகாயமும் நிராசையின் நீலத்தோடு.

மாலையைக் கடந்து வீதி நள்ளிரவின் சாயல் பூண்டிருந்தது.

தெரு முனையில் ஓரிரு முகங்கள் தெரிந்து பின் மறையும். அவன் இல்லை.

இமைத்தல் மறந்த கண்களோடு வாசலில் அமர்ந்தாள்.

தொட்டி நீருக்குள் அழுத்த அழுத்த மேலெழும் பந்துபோல பிடிவாதமாய் மேலெழும் அவன் நினைவு!

வந்ததும் என்னென்ன செய்வான் என்ற கற்பனைக்குக் கடிவாளமிட முடியவில்லை.

நினைக்க நினைக்க நெஞ்சமும் மேனியும் கொதிப்பதை உணர்ந்தாலும் நினைப்பதை நிறுத்த முடியவில்லை.

வராமலே துன்பம் செய்பவன், வந்தும் துன்பம் செய்வான்.

துன்பத்தையே விரும்புகிறது மனம்.

துன்பம் போன்ற இன்பம்!

மனதை வேறெங்காவது திருப்பிவிட முடியுமா என்று பார்த்தாள்.

வானத்தை அண்ணாந்து பார்த்தாள்.

இருப்பிடம் நோக்கிக் கூட்டங் கூட்டமாகத் திரும்பும் பறவைகள்.

வளைந்த சிறகையுடைய பறவைகள்.

வான இருள் முடுவதற்குள் வசிப்பிடத்தை அடைந்துவிடும் வேகத்தில் பறந்து கொண்டிருக்கின்றன.

கடம்ப மரம் அவற்றின் வசிப்பிடம். அங்கே பசியோடு காத்திருக்கும் குஞ்சுப் பறவைகள். தம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பிள்ளைகளின் வாயிலே திணிப்பதற்காக இரையை வாயிலே கவ்வியபடி விரைகின்றன பறவைகள்.

இந்தக் காட்சியை, இந்தப் பறவைகளை எங்கேனுமிருந்து அவரும் காணமாட்டாரா?

பசியோடு காத்திருப்பது பறவைக்குஞ்சுகள் மட்டுமில்லையே!

என் பசி அவர் அறியாததா?

தங்கள் பிள்ளைகளிடத்தில் கொண்ட அன்பால் அவர்தம் பசி நீக்க விரைந்து 'பறக்கும் இந்தப் பறவைகளைப் பார்த்தால் அவருக்கு என் நினைவு வராதா?

இந்தப் பறவைகளின் பறப்பு, அவர் மனதிலும் பரபரப்பை உண்டாக்காமலா இருக்கும்?

குஞ்சுகள் பசி தீர்க்க விரையும் இப்பறவைகள் போல அவரும் என் பசி தீர்க்க விரைந்தோடி வருவார்!

**ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளிய தாமே கொடும் சிறைப் பறவை**
**சிறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரை கொண்டமையின்**
**விரையுமால் செலவே.**

(குறுந்தொகை: 92)

## சிந்தியா பதில்கள்

★ **பத்திரிகை, வானொலிக்கு ஆக்கங்கள் எழுதுவேன் அதைப் பார்த்துவிட்டும் கேட்டுவிட்டும் 'உனக்கு வேறு வேலை இல்லையா என்று கேட்கிறார்களே?**

ஜெ.லக்கி, பெரிய கல்லாறு.

வருமானத்தைத் தராத காரியங்களைச் செய்து கொண்டிருப்பது முட்டாள்தனமானது என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். அதற்காக குழந்தையைக் கொஞ்சாமலிருக்க முடிகிறதா, கல்லில் நார் உரித்தது போல ஒரு ரோசாத் தடியிலிருந்து பூப்பூக்க வைத்து ரசிக்காமலிருக்க முடிகிறதா, உற்சாகமான வேளைகளில் எல்லாம் நமக்கென்று மட்டுமே பாடாமலிருக்கிறோமா...

♥ ♥

★ **ஒரு வீரனுக்குப் புகழ் எது?**

இ.சூரியகுமார், மான்காடு.

"யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின், போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது..."

♥ ♥

★ **சிந்தியா, கவர்ச்சிகரமான விலை என்றால் என்ன?**

ரி.ரமேஷ், கொழும்பு-05.

துணிக் கடையின் திறப்பு விழாவுக்கு வர மும்தாஜ் கேட்கும் விலை. (10 லட்சமாம்! ஹையோ!)

♥ ♥

★ **சிம்ரனோடு, விந்தியாவோடு, சங்கவியோடு, மும்தாஜோடு, லைலாவோடு என்றெல்லாம் இப்போது ஒரு பாடலுக்கேனும் ஆட வாய்ப்புக் கிடைத்துக் கொண்டிருக்கும் புதிய நடனச் சூறாவளி லாரன்ஸ் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

இ.கஜேந்திரன், ஹட்டன்.

சுறுப்புதான் மச்சம் என்றால், அவருக்கு உடல் முழுக்க அதுதானே!



மும்தாஜ்

★ **எனது காதலிக்கு அடிக்கடி கோபம் வருகிறது இதைச் சமாளிக்க ஒரு வழி சொல்ல முடியுமா?**

கே.ரமேஷ், பொத்துவில் நகர்.

இதெல்லாம் ஒரு பிரச்சனையா... "கோபம் இல்லாமலிருக்கும் நேரங்களில் நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்!" என்று சொல்லிப் பாருங்கள்.

♥ ♥

★ **மாசி மாதத்தில் காதலர் தினத்தைத் தவிர உங்கள் ஞாபகத்தில் வருவது வேறென்ன?**

எம்.என்.எம்.மிஹ்லார், கொழும்பு-10.

மாசி நிலவும் மதியாதார் முற்றமும் வேசி யுறவும் வியாபாரி நேசமும் ஆகாது என்ற முதுமொழி (புனர்வாழ்வு அமைச்சரின் தற்போதைய விரக்திக்கும் இந்த பதிலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை)

♥ ♥

**மனிதன் தன்னைத் தானே எப்போது உணர்கிறான்?**

எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை-01.

பல்வேறு மிருகங்கள், பறவைகளையும் வளர்த்து வந்த ஒருவனுக்கு, அவை பேசுவதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஒரு துறவிக்குப்பிராணிகள் மொழி தெரியும் என்று கேள்விப்பட்டு, அவரிடம் சென்று அனைத்து மொழிகளையும் கற்று வந்தான். ஒரு தடவை, இவன் வளர்த்துவந்த கோழிகளில் ஒன்று, அங்குள்ள குதிரை இறந்துவிடும் என்று நாயிடம் கூறியதைக் கேட்டான். அடுத்த நாளே அந்தக் குதிரையை விற்று நஷ்டம் வராமல் தப்பிக் கொண்டான். மற்றொரு சமயம், நாய் அந்த வீட்டிலுள்ள அடிமை சாகப்போகிறான் என்று கோழியிடம் கூறியது. அவசரமாக அடிமையையும் விற்று தான் நஷ்டப்படுவதைத் தவிர்த்தான். இதன் பிறகு ஒரு நாள், கோழி நாயிடம், 'எங்கள் எஜமானன் இறக்கப் போகிறான்' என்றது. இதைக் கேட்ட எஜமானன் அலறியடித்துக் கொண்டு துறவியிடம் ஓடினான். துறவியோ வெகு கூலாக, "இப்பொழுது உன்னை விற்று நஷ்டம் வராதவாறு பார்த்துக் கொள்" என்றார்.

எத்தனை படிப்புப் படித்தென்ன, தன்னை அறிந்துகொள்ளாதவரை எந்த அறிவும் பயன்படாது என்பது நீதி.

♥ ♥

★ **விஜய், பிரசாந்த், அஜீத் மூவரிடமும் சிந்தியாவுக்குப் பிடித்த அம்சம் என்ன?**

எஸ்.சுந்தர்ராஜூ, மாலிபொட.

விஜய்யிடம் கோயம்புத்தூர்க்காரர்களுக்கேயுரிய குசும்பும் துடிப்பும், பிரசாந்திடம் அழகும் அந்த உடம்பையே தூக்கி வளைத்துச் செய்யும் பாய்ச்சல்களும், அஜித்திடம் நடிப்புக்காக எதையும் செய்யலாம் என்றிருக்கும் அர்ப்பணம்.

♥ ♥

★ **சிந்தியா! தற்போது தகுதிக்கும், தராதரத்திற்கும் மதிப்பும் மரியாதையும் குறைந்துகொண்டு வருகிறதே? இது காலமாற்றம்தானே?**

வீரசிங்கம் ஸ்ரீதரன், மல்லிகைத் தீவு.

யார் சொன்னது? உங்கள் கேள்வியை எந்தக் காலத்தில் கேட்டாலும் யாரும் மறுத்திருக்கப் போவதில்லை.

♥ ♥

★ **ஆறுமுகன் தொண்டமானின் ராஜினாமா?**

வி.சந்திரசேகர், பதுளை.

தாத்தா வழியில் ஜமாய்க்கிறார். சேகு இஸ்ஸடீன் வேறு, "முஸ்லிம் காங்கிரசும் இது மாதிரியே மிரட்டப் போகிறார்கள். விரைவில் எதிர்பாருங்கள்" என்று மின்னல் பேட்டியில் சொல்லிச் சென்றிருக்கிறார். போகிற போக்கைப் பார்த்தால் ஆட்சிக் கதிரையில் இருப்பவர்களுக்கு புலிகளைச் சமாளிப்பது சுலபம் என்று தோன்றி விடும் போலிருக்கிறது.

# மன்னாதி மன்னன் 93

## நரமாமிசம் உண்ணும் முனிவர்கள்!

பிரதியுஷ்டாபுரியில் பிராமண வீட்டில் பிறந்த ஆதிசேடன் பலதடவைகள் அரண்மனை வாயிலிலுள்ள மணியை அடித்து இளவரசியின் முன்னிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவள் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான விடை கூற முடியாமல் அவமானப்பட்டான். இறுதியில் பொய் கூறி இளவரசியை ஏமாற்றப் பார்க்கிறான் என்ற குற்றச் சாட்டுடன் கோட்டையை விட்டு வெளியேற்றப்பட்டான்.

நான்கு மாதங்கள் வரை பல இடங்களிலும் அலைந்து திரிந்த ஆதிசேடனிடம் "தங்கமாபுரியை அடைய மாமன்னர் விக்கிரமாதித்தனுடைய உதவியை நாடிப் பெற்றால் மட்டுமே சாத்தியமாகும்" என்று வழிப்போக்கர் கூறியவற்றைக் கேட்ட ஆதிசேடன் உஜ்ஜயினி மாகாளிபுரி நோக்கிப் புறப்பட்டான். அரசவையில் மன்னரைக் கண்டு வணங்கி "மாமன்னர் பெருமானே! என்னுடைய குறையை நீக்கி என் ஆசை நிறைவேற தாங்கள் தான் அருள் புரிய வேண்டும்" என்று பணிவாகக் கேட்டான்.

ஆதிசேடனின் தோற்றத்தையும் அவனுடைய உடைகளையும் பார்த்து அவனுடைய கோரிக்கையையும் செவிமடுத்த அரசவையிலுள்ளோர் எள்ளி நகையாடினர். ஆனால் விக்கிரமாதித்த மன்னரோ அமைச்சர் பட்டியோ ஆதிசேடனுடைய கோரிக்கையை துச்சமாக மதிக்கவில்லை. அவனுடைய கோரிக்கையில் ஏதோ நியாயமிருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். ஆதிசேடனை அவனுடைய நாடு திரும்பி, வெளியே எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருக்கும்படியும் தங்கமாபுரி பற்றிய தகவல்களை விரைவாக அறிந்து அவனிடம் தெரிவிப்பதாகவும் மன்னர் விக்கிரமாதித்தன் வாக்களித்தார்.

மன்னனுடைய வாக்குறுதியில் முழு நம்பிக்கை வைத்த ஆதிசேடன் தனது ஊரான பிரதிஷ்டாபுரி சென்று தனது வீட்டிலேயே தங்கியிருந்தான்.

அடுத்த நாளே அவருடைய காடாறு மாதம் செல்ல வேண்டிய நாள் என்பதை அமைச்சர் பட்டி மூலம் அறிந்து கொண்ட விக்கிரமாதித்த மன்னர் அவருடைய குலதெய்வமான காளிகாம்பாளை வணங்கி விட்டு அமைச்சர் பட்டியிடம் அரச கடமைகளை ஒப்படைத்து விட்டு வேதாளத்தின் உதவியுடன் புறப்பட்டார். தங்கமாபுரி நகரம் எங்கே இருக்கிறது என்று வேதாளத்திடம் மன்னர் கேட்டார். வேதாளத்துக்கோ அந்த நகரம் பற்றி எதுவுமே தெரியவில்லை. எனவே தங்கமாபுரி என்பது ஒரு கற்பனை நகரமே என்று அவர் கருதினார்.

வேதாளத்தின் தோள் மீது அமர்ந்து வான மண்டலத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது ஒரு கானகத்தின் நடுவே ஒரு வெட்டவெளி மைதானம் தென்பட்டது. வேதாளத்திடம் அந்த இடம் என்ன என்பதையிட்டு வினவினார்.

வேதாளம் அந்தத் திறந்த வெளியின் அற்புதம் பற்றி இவ்வாறு கூறியது:

"மாமன்னரே, இந்த திறந்த வெளியின் நடுவே ஓர் கொப்பரை தென்படுவதைப் பார்த்தீர்களா? அதற்குள் நெய் கொதித்துக் கொண்டிருக்கிறது. சுற்றியுள்ள காடுகளில் ஏழுமுனிவர்கள் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள் மதிய வேளையில் அவர்கள் ஏழுபேரும் மத்தியிலுள்ள நெய்க் கொப்பரையை வந்தடைவார்கள். முனிவர்களில் ஒருவர் கொதிக்கும் நெய்க் கொப்பரைக்குள் குதிப்பார்.

கொதிக்கும் நெய்யில் அவர் உயிரிழந்து விடுவார். அவருடைய உடல் அப்படியே கொதிக்கும் நெய்யில் வெந்து போய்விடும். ஏனைய ஆறுமுனிவர்களும் இறந்து போன முனிவரின் உடலை வெளியே எடுத்து பகிர்ந்து உண்பார்கள். அதன் பின்னர் எஞ்சியிருக்கும் நெய்யையும் பருகுவார்கள்.

இதன் பின்னர் ஆறு முனிவர்களும் கொப்பரையை சூழ்ந்து நின்று இறந்த முனிவரின் பெயரை ஏழு தடவைகள் கூறி அழைப்பார்கள். இறந்து உணவாக உட்கொள்ளப்பட்ட முனிவர் கொப்பரையிலிருந்து உயிருடன் வெளியே வருவார். இவ்வாறு ஒவ்வொருநாளும் ஒவ்வொரு முனிவராக வரிசைப்படி கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் விழுந்து எஞ்சியிருக்கும் ஆறு முனிவர்களாலும் உணவாக உட்கொள்ளப்பட்ட பின்னர் உயிர் பெற்று எழுந்து விடுவார்கள். இவ்வாறு பல ஆண்டுகளாக இக்கைங்கரியம் நடைபெற்று வருகிறது. இம்முனிவர்களை அணுகி அவர்களிடம் தாங்கள் அறிய விரும்பும் தங்கமாபுரி பற்றிய தகவல்களை அறியலாம்" என்று வேதாளம் கூறியது. இக்கதையைக் கேட்ட விக்கிரமாதித்த மன்னன் அதிசயப்பட்டார்.

வேதாளம் கூறியது போல் தரையில் இறங்கி அந்த மைதானத்தின் அருகிலுள்ள காட்டில் மரமொன்றின் பின்னால் மன்னன் விக்கிரமாதித்தன் மறைந்திருந்தார். கொப்பரையில் நெய் கொதித்துக் கொண்டிருந்தது. மதிய நேரமானதும் ஏழு முனிவர்களும் காடுகளிலிருந்து ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். அன்றைய தினம் நெய்க் கொப்பரையில் வீழ்ந்து தனது உயிரைப் போக்குவதற்கு உரிய முனிவர் தனியாக முன்னேறி கொப்பரைக்கு அருகில் சென்றார். இதனைக் கண்ட மன்னர் விக்கிரமாதித்தன் ஓடிச் சென்று கொப்பரைக்கு அருகில் நின்ற முனிவரைப் பின் தள்ளி விட்டு எவரும் எதிர்பாராத விதமாக நெய்க்கொப்பரைக்குள் வீழ்ந்து உயிர் துறந்தார்.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இந்தச் சம்பவம் நடைபெற்றமையினால் துணுக்குற்ற முனிவர்கள் அன்றைய தினம் நெய்க்கொப்பரையில் வீழ்ந்து மடிய வேண்டிய முனிவர் மீது குற்றஞ்சுமத்தினார்கள். மரண மடையப்பயந்தமையினால் தனக்குப் பதிலாக நெய்க் கொப்பரையில் வீழ்ந்து இறப்பதற்கு வேறொரு நபரை அம்முனிவர் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று குற்றஞ் சாட்டினர். அந்த முனிவர் தன்னுடைய ஞானப் பார்வையின் மூலமாக நெய்க் கொப்பரையில் வீழந்து மடிந்தவர் மன்னர் விக்கிரமாதித்தனே என்று அறிந்து ஏனைய முனிவர்களிடம் உண்மையைக் கூறினார்.



நெய்க் கொப்பரையில் வீழ்ந்து உயிர் துறந்தவருடைய மாமிசத்தையே தினசரி உட்கொண்டு வந்த முனிவர்கள் அவ்வாறு உயிர் துறந்த வரின் மாமிசத்தை உண்ணாவிட்டால், அவரை மீண்டும் உயிர்தெழ வைக்க முடியாது என்ற நியதி இருந்தமையினால் விக்கிரமாதித்த மன்னருடைய வெந்த உடலை வெளியே எடுத்து ஏழு முனிவர்களும் உணவாக உட்கொண்டனர். பின்னர் எஞ்சிய நெய்யையும் குடித்துவிட்டு கொப்பரையை வளைத்து நின்று விக்கிரமாதித்தனுடைய பெயரை ஏழு தடவைகள் அழைத்தனர். மன்னரும் உயிர் பெற்றெழுந்து முனிவர்கள் முன் வணங்கி நின்றார்.

**இராஜகுமாரன்**

அந்த முனிவர்களிடம் "தங்கமாபுரி எங்கே இருக்கிறது? அந்த நகரத்துக்குப் போகும் மார்க்கம் என்ன என்பதைத் தங்களிடமிருந்து அறிந்து கொள்வதற்காகவே நான் இவ்வாறு நெய்க் கொப்பரையில் வீழ்ந்து, இறந்து, உங்கள் உணவானேன். தயவு செய்து என்னை மன்னித்து தங்கமாபுரி செல்லும் மார்க்கத்தைத் தெரிவியுங்கள்." என்று மன்னர் கூறினார். (மன்னன் வருவான்...)

# படப்பிடிப்புத் தளத்தில் கவுண்டருடன் அரட்டைஅடிக்கிறார் செந்தில்

**காதிலை பூ கந்தசாமி**

படப்பிடிப்புத் தளத்தில் ஓய்வு நேரத்தை கழித்துக் கொண்டிருக்கிறார் கவுண்டமணி. அப்போது, ஒரு கையில் பத்திரிகை ஒன்றை கையிலேந்திய படி கவுண்டமணி இருக்கும் இடத்தை நோக்கி ஓடி வருகிறார். செந்தில்.

செந்தில்:- **அண்னே பேப்பரில வந்திருக்கிற நியூசைப் பார்த்திங்களாண்ணே.**

கவுண்டமணி: என்னடா முள்ளம் பண்டி தலையா என்னைப் பற்றி யாராவது கிசு கிசு எழுதியிருக்கிறாங்களாடா?

செந்தில்:- **சும்மா போங்கண்ணே உங்களைப் பற்றி யாராவது கிசு கிசு எழுதுவாங்களா? கிசு கிசு எழுதிறதுக்கு என்னை மாதிரி கொஞ்சமாவது பெர்சனாலிட்டி இருக்கணும் அண்ணே.**

கவுண்டமணி:- என்னடா, நாயே பெர்சனாலிட்டியை பற்றி நீ. சொல்லுறியாடா.. (காலை தூக்குகின்றார்)

செந்தில்:- **கோபிச்சுக் கொள்ளாதேங்க அண்ணே. ஒரு எக்ஸ்சாம்பிலுக்கு என்னைச் சொன்னேன். சரி விசயத்திற்கு வாங்க.**

கவுண்டமணி:- சரி சொல்லுடா

செந்தில்:- **நம்மட அயல் நாட்டில, பேச்சுவார்த்தை அது இது எண்டு பேப்பரில போட்டிருங்கிறாங்களண்ணே.**

கவுண்டமணி:- அடிடா சக்கை, சிலோனில திரும்பயும் பேச்சுவார்த்தை பல்லவியை தொடங்கிட்டாங்களாடா. அட மகேஸ்வரா..? இந்த முறையாவது எதையாவது சனத்திற்கு கொடுத்து அதுகளையும் நிம்மதியா வாழ நீ தானைய்யா அருள் பாலிக்க வேணும். (வானை நோக்கி கைகளை தூக்கி கும்பிடுகிறார்)

செந்தி:- **ஏனண்ணே இப்பிடிச் சொல்லுறீங்க...? அடிக்கடி பேச்சுவார்த்தை அப்பிடி இப்பிடி எண்டு சிலோனில பேசிக் கொள்ளுவாங்களா அண்ணே?**

கவுண்டமணி:- ஆமாடா (சலித்துக் கொள்கிறார்) அடிக்கடி ஒவ்வொரு வரும் ஆட்சிக்கு வர்றப்ப பேச்சுவார்த்தை, சமாதானம் எண்டு சொல்லிக்கிட்டு வர்றது தான் சிலோன் பொலிட்டிக்ஸ்.

செந்தில்:- அப்புறம் ஏன் அண்ணே இடையில குழப்பிக் கொள்ளுறாங்க...?

கவுண்மணி:- நம்மட ஆட்கள் கேட்கிறத கொடுக்கிறதிற்கு அவங்கட ஆட்கள் விடமாட்டாங்க, கொடுக்கிறதை வாங்கிறதுக்கு நம்மட ஆட்கள் சம்மதிக்க மாட்டாங்க. இப்படியே இழுபட்டுப் போட்டு தங்கட கைகளில இருக்கிறத்தால இரண்டு பகுதியும் விளையாட தொடங்கிடுவானுங்க, அது சரி இப்ப யாரடா பேச்சுவார்த்தையைப் பற்றி சொல்லியிருக்கிறது?

செந்தில்:- **யாரோ கூட்டுக் கட்சியாம் அண்ணே...**

கவுண்டமணி:- அய்யய்யோ, திரும்பவும் கூட்டுப் போட்டுக் கொண்டு கூத்துக்கு வந்திட்டாங்களா. இப்படித் தான் பத்து வருஷத்திற்கு முன்னமும் கூட்டு போட்டு வந்து யாழ்பாண தமிழரிட்டை வோட்டுக் கேட்டவங்க. பிறகு கூட்டுக்கு வேட்டுப் போட்டுட்டு எல்லாருமே போயிட்டாங்க. இப்ப திரும்பவும் வந்திருக்காங்களாடா?

செந்தில்:- **பத்து வருஷத்திற்கு முன்னால வோட்டு வேண்டிக் கொண்டு எங்கயண்ணே போனவங்க?**

கவுண்டமணி:- இது கூட தெரியாமல் இருக்கிறியே விசுக்கோத்து வாயா. இவையவங்க எல்லாம் எங்க போறது நம்மட தமிழ்நாட்டுக்குத் தானேடா வரவேணும். சிலோன் தமிழர்ர பிரச்சனையை வைத்தே அரசியல் நடத்திறதிற்கு தமிழ் நாட்டில கொஞ்சப் பேர் ரெடியாத் தானே இருக்கிறாங்க.

செந்தில்:- **சரி அண்ணே... யாரோ சுரேஸ் எண்டு ஒருத்தர் புலிகள் தான் ஏக பிரதிநிதிகள் அவங்களோட தான் பேச வேணும் எண்டு சொல்லியிருக்கிறாரே அண்ணே.**

கவுண்டமணி:- அடேய்... கொஞ்சம் பொறுடா (ஏதோ யோசிக்கிறார்)

செந்தில்:- **என்ன அண்ணே யோசிக்கிறீங்க...?**

கவுண்டமணி:- இந்த சுரேஷ் தான்டா கிட்டத்தட்ட பதினைஞ்சு வருசத்திற்கு முன்னம் இதே புலிகளை அராஜவாதிகள் எண்டு பேசினதா பேப்பரில பாத்தனான். இப்ப இப்பிடி பல்டி அடிக்கிறாருபோய்?



செந்தில்:- **ஏன் அண்ணே அராஜகவாதிகள் எண்டு பேசினவர்.**

கவுண்டமணி:- நம்மட ஆட்களுக்கு எப்பவும் பொம்பிளையலாலை தான் பிரச்சனையே.. புலிகளின்ர தளபதி கிட்டுவின்ரை உள்ளத்தை கொள்ளை கொண்ட நாயகியை விஜிதரன் எண்டு ஒருத்தர் பகிடிவதை செய்து போட்டாராம். அதால அந்த விஜிதரனையே தட்டிப்போட்டாங்க புலிகள். அந்த மாணவனின்ரை இறுதிச்சடங்கில வைத்துத் தான் சுரேஷ் அராஜகவாதிகள் எண்டவர்.

செந்தில்:- **அராஜகவாதிகள் என்கிறத கேட்டுக்கொண்டு புலிகள் சும்மா இருந்தவங்களோ அண்ணே...?**

கவுண்டமணி:- அடே, வெண்டிக்காயா... குறுக்கால வராம முழுசாய் சொல்ல விடேன்டா.

செந்தில்:- **சொல்லுங்கண்ணே. அப்புறம்.**

கவுண்டமணி:- அப்புறம் என்ன அராஜகவாதிகள் எண்டு பேசி அடுத்த நாளே சுரேஷரையும் அவரின்ரை கூட்டத்தையும் புலிகள் விரட்டி விட்டுட்டினம். பதினைஞ்சு வருஷத்திற்கு முன்னம் ஒரு விஜிதரனுக்காகவே அராஜகவாதிகள் எண்டு சொன்னவர் இப்ப பல விஜிதரன்கள் போனாப்பிறகும் ஏக பிரதிநிதிகள் எண்டு சொல்றாரு.

செந்தில்:- **ஏன் அண்ணே இப்பிடி பல்டி அடிச்சுக் கொண்டிருக்கிறாங்க.**

கவுண்டமணி:- அட பனங்கொட்டை வாயா இவர் மாத்திரமில்லை அங்க எல்லாரும் இப்பிடித்தான் பல்டி அடிச்சுக் கொண்டிருக்கிறாங்க.

செந்தில்:- **அப்ப அதையும் கொஞ்சம் சொல்லுங்கண்ணே கேப்பம்.**

கவுண்டமணி:- டேய் டேய் சிலோன் காரன் அடிக்கிற பல்டியை சொல்ல நேரம் காணாதுடா. டைரக்டர் கூப்பிடுறார் வாடா போவம்.

செந்தில்:- நாளைக்கு சொல்லுவியள் தானே அண்ணே.

(கவுண்டமணி எழுந்து செல்ல பின்னால் போகிறார் செந்தில்)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

325657


# நட்சத்திர மீன்

கடலில் லட்சக்கணக்கான மீனினங்கள் வசிக்கின்றன. அவற்றில் சிலவகை பார்ப்பதற்கு மிகவும் அழகானவை, வேறு சில விசித்திரமானவை. இன்னும் சிலவகை மீன்கள் பயங்கரமானவை.

அரிய கடல் வாழ் உயிரினங்களின் வலயம் என அவுஸ்திரேலிய கண்டத்தைச் சூழவுள்ள கடற் பகுதி அழைக்கப்படுகிறது. அபூர்வமான நிறங்கள், வடிவங்களைக் கொண்ட கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் இங்கு காணப்படுகின்றன. 'கழியோடிகளின் சொர்க்கம்' என அழைக்கபடும் இந்தக் கடற் பகுதியில் வாழும் நட்சத்திர மீன் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு வகை மீன்களையே படத்தில் காண்கிறீர்கள். பல்வேறு நிறங்களிலும் வடிவங்களிலும் காணப்படும் இந்த அரியவகை மீன்கள் கடல் அடியில் மாத்திரமன்றி நீருக்கு மேலும் நட்சத்திரங்கள்போல் மிதக்கக்கூடியவை. இரவில் இந்த மீன்கள் நீரின் மேற்பரப்பில் மிதக்கும் காட்சி அழகானதாக இருக்கும்.




அருள் ஜூவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

105, [illegible]

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331




## 4ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அற்புதராஜா பிரியராஜ் 09.12.2002

அற்புதராஜா-மனோகருமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரியராஜ் தனது நான்காவது பிறந்த நாளை கொழும்பு வெள்ளவத்தை இல. 16A, நெல்சன் பிளேசிலுள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடினார். இராஜ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா அண்ணா (இலண்டன்), பிரியன் அண்ணா, சிந்து அக்கா, பாநு அக்கா, யாக்கீசன் பாபா, கொழும்பிலுள்ள மாமி, மச்சாள்மார், யாழ்ப்பாணத்திலுள்ள மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவரை பல்கலைகளும் கற்று, சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



சிமோனா (SIMONA) 19.02.2002

யாழ்-சித்தன்கேணியைச் சேர்ந்த பரமேஸ்வரன்-ஜெனித்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி சிமோனா தனது முதலாவது பிறந்த நாளை 19.02.2002 அன்று சுவிஸ் Neuchatelலில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா சுவிஸ் அம்மம்மா, சின்னமாமா, ஆசைமாமா, இலங்கை அப்பப்பா, அப்பம்மா, ஜேர்மனி பெரியமாமா, அத்தை மச்சான்மார்-விதுசன், விஜுசன், சுவிஸ் அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், லண்டன் சித்தப்பா இலங்கை சித்தப்பா, சித்தி, அக்கா, அண்ணா, தம்பி, அத்தைமார், மாமன்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுவிஸ்-ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: பரமேஸ்வரன்-சுவிஸ். Tel: 0041-793863476.

# மதுரசக் கூண்டு

மதுபானக் கடைகள் என்றால் விளக்குகள் பொருத்தப்பட்டு குடிமக்களை கவரும் விதத்தில் மதுப்போத்தல்கள் அடுக்கப்பட்டு ஏராளமானவர்கள் மது அருந்தக்கூடியவாறு கதிரை மேசைகள் போடப்பட்டுத்தான் இருக்கவேண்டும் என்றில்லை.

எந்தவொன்றையும் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ செய்து பார்க்கும் மனிதனின் இயல்பான குணத்திற்கு இந்த மதுபான சாலையும் ஒரு உதாரணம்.

இங்கே இருப்பது உலகின் மிகச் சிறிய மதுபானக்கடை. பாதையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தொலைபேசிக் கூண்டுக்குள் தனது கடையை நடத்துகிறார் இந்த அமெரிக்கப் பெண்மணி.

உலகில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட மிகச்சிறிய மதுபானக்கடைக்கு சொந்தக்காரர் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் இந்தப் பெண்மணி தனது கடைக்கு சட்ட அங்கீகாரம் பெற சுகாதாரத் திணைக்களத்துடனும் தீயணைப்புப் பிரிவினருடனும் போராட்டம் நடத்தவேண்டி ஏற்பட்டது. எவ்வாறெனினும் எதிர்ப்புக்களை கருத்தில் கொள்ளாது மதுவரித் திணைக்களம் இவரது கடைக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்கியிருக்கிறது.



## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து (08.02.2002)



செல்வி றொக்ஷ்னா அன்ரன்

அன்ரன்-தவமாநிதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி றொக்ஷ்னா தனது முதலாவது பிறந்த தினத்தை 08.02.2002 அமெரிக்காவில் BOSTONல் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா (ஓமான்) அம்மம்மா இலங்கை (வவுனியா) அப்பம்மா, அப்பப்பா கனடா (மொன்றியல்) பெரியப்பா, பெரியம்மா அண்ணா, அக்கா, றெனோஜன், றெனோஜா, தம்பி (கனடா, ரொரன்ரோ) சித்தப்பாமார், சித்திமார், தம்பி மகிலன் (மொன்றியல் கனடா)- தாத்தாமார் குடும்பத்தினர், (கனடா, இலங்கை) தொட்டப்பா, தொட்டம்மா, (கனடா) மாமா, மாமி, மச்சான் (இந்தியா) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் றொக்ஷ்னா குட்டியை குழந்தை யேசுவின் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அம்மப்பா தவநாதன் (ஓமான்)

# கோழிப் பிரியர்



இந்தக் கோழிப் பிரியரும் கின்னஸ் சாதனைக்குச் சொந்தக்காரர்தான். 4 இறாத்தல் 10 அவுன்ஸ்கள் கொண்ட ஒரு வறுத்த கோழியை வெறுமனே பத்து நிமிடங்கள் 37 செக்கன்களில் வயிற்றுக்குள் இறக்கி சாதனை படைத்திருக்கிறார் வெலன்டைன் புலோரான் என்ற இந்த ஸ்பானியர்.

கோழியை மிக வேகமாக சாப்பிட ஆரம்பித்த அவர் அது முழுவதுமாக வயிற்றுக்குள் இறங்கி முடித்ததன் பின்னர்தான் தான் சாப்பாட்டில் சாதனை நிகழ்த்திவிட்ட உண்மையை அறிந்து கொண்டார். இவரது சாதனையை முறியடிக்க நமது கோழிப்பிரியர்களும் முயன்று பார்க்கலாம்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து 15.02.2002

செல்வன் தனுஷ் மோகன்ராஜ்



யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வை சேர்ந்த மோகன்ராஜ்-ஜோதினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தனுஷ் தனது முதலாவது பிறந்த தினத்தை நியூசிலாந்தில் உள்ள தனது இல்லத்தில் 15.02.2002 வெள்ளிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பெரியக்கா சின்னக்கா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டி, தாத்தா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, அன்ரி, அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம வைரவர் அருள்பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் பெப்.17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.